சோபூர்வை

இலங்கை முஸ்லிம்களின் தனித்துவக் குரல்

இதழ் - 233 ✸ 04 நவம்பர் 2011 ✸ வெள்ளிக்கிழமை ✸ துல் ஹஜ் 1432 ✸ விலை 30.00

AJ

Dealers In Textiles & Specialist For Abaya Materials

அபாயா தைப்பதற்கான துணி வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

J.B SUPER MARKET
196E ,Keyzer Street,Colombo - 11.
T.P. 2446696

تقبل الله منا ومنكم

வாசகர்களுக்கு
ஹஜ் பெருநாள் வாழ்த்துக்கள்

தூனிசிய தேர்தலில் நஹ்ழா கட்சி பெருவெற்றி

அறபுப் புரட்சி முதலில் இடம்பெற்ற வட ஆபிரிக்க நாடான தூனிசியாவில், பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் அரசியல் அமைப்பு சபைக்கான தேர்தல் சமீபத்தில் நடைபெற்றது. இதில் அந்நாட்டு இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் அரசியல் பிரிவான அந்நஹ்ழா கட்சி 41.47 வீத வாக்குகளைப் பெற்று பெருவெற்றி ஈட்டியுள்ளது. அக்கட்சி 20 தொடக்கம் 25 வீதமான வாக்குகளைப் பெறும் என்றே பல கருத்துக் கணிப்புகள் தேர்தலுக்கு முன்னர் ஊகம் வெளியிட்டிருந்தன. ஆனால், அதனையும் தாண்டி இஸ்லாமியவாதிகளுக்கான மக்கள் ஆதரவு அதிகரித்திருப்பதை இத்தேர்தல் முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

217 ஆசனங்களைக் கொண்ட அரசியலமைப்பு சபைக்கு நஹ்ழா சார்பாக 90 பேர் தெரிவாகியுள்ளனர் என தேர்தல் ஆணையாளர் காமில் ஜன்தூபி தெரிவித்துள்ளார். இவ்வரசியலமைப்பு சபை இடைக்கால அரசொன்றைத் தெரிவு செய்யவுள்ளது. இடைக்கால அரசின் பிரதமர் பதவிக்கு அக்கட்சியின் பொதுச் செயலாளரான பொறியியலாளர் ஹமாதி ஜிபாலி பிரேரிக்கப்பட்டுள்ளார்.

நஹ்ழா கட்சியின் தலைவரும் சமகால இஸ்லாமிய அரசியல் சிந்தனையாளர்களுள் ஒருவருமான அஷ்ஷெய்க் ராஷித் அல் கனூஷி பத்திரிகையாளர்களுக்கு உரையாற்றும் காட்சி. இத்தேர்தலில், தான் போட்டியிடப் போவதில்லை என்றும் ஜனாதிபதிப் பதவியை ஏற்கப் போவதில்லை என்றும் அவர் பல மாதங்களுக்கு முன்னர் கருத்து வெளியிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்விடைக்கால அரசு ஒரு வருட காலம் மட்டுமே பொறுப்பிலிருக்கும். இதன் பிரகாரம் புதிய பாராளுமன்றத்திற்கான தேர்தல் அடுத்த வருட இறுதியில் இடம்பெறவுள்ளது.

இத்தேர்தலில் இடதுசாரிக் கட்சியான குடியரசுக்கான காங்கிரஸ் (Congress for the Republic) 13.82 வீத வாக்குகளுடன் 30 ஆசனங்களைப் பெற்று இரண்டாம் நிலைக்குத் தெரிவாகியுள்ளது. (பக்.19)



தூனிசியா

பெயர்: தூனிசியக் குடியரசு
சனத்தொகை: 10.4 மில்லியன்
தலைநகர்: தூனிஸ்
உத்தியோகபூர்வ மொழி: அறபு
பிரதான மொழிகள்: அறபு, பிரெஞ்சு
பிரதான சமயம்: இஸ்லாம்
பரப்பளவு: 164,150 ச.கி.மீ.

ஹெல உறுமய - முஸ்லிம் கவுன்ஸில் சந்திப்பு

இலங்கை முஸ்லிம் அமைப்புகள், நிறுவனங்களின் கூட்டமைப்பான முஸ்லிம் கவுன்ஸில் பிரதிநிதிகளுக்கும் ஜாதிக ஹெல உறுமய தூதுக் குழுவினருக்கும் இடையில் கொள்ளுப்பிட்டி ரன்முத்து ஹோட்டலில் சமீபத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றது. இதில் இரு தரப்பினருக்கும் இடையே பல்வேறு விடயங்கள் தொடர்பாக கருத்துக்கள் பரிமாறப்பட்டன. முஸ்லிம் சமூகத்தின் கல்விப் பிரச்சினைகள் தொடர்பாகவும் இதன்போது பேசப்பட்டுள்ளது.

(படம்: Knowledge Box)

"கட்சியிலுள்ள தலைமைத்துவ ஆற்றலுள்ளோரை இல்லாதொழிக்கும் வேலையைத்தான் ரணில் செய்கிறார். இது ஒரு தெளிவான சதி."

இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

"இலங்கையில் நிகழ்ந்ததுபோல் அரசியல் படுகொலைகள் உலகில் வேறெங்கும் நிகழவில்லை. இதனால், அரசியல் களத்தில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. அபிவிருத்தி மற்றும் சகவாழ்வை இது பெருமளவு பாதித்துள்ளது."

நிமல் சிறிபால டி. சில்வா

மெக்டொனால்ட்ஸுக்கு வழங்கப்பட்டுள்ள ஹலால் சான்றிதழ் வாபஸ் பெறப்படவில்லை

ஜம்இய்யதுல் உலமா ஹலால் பிரிவு அதிகாரி

இலங்கையில் மெக்டொனால்ட்ஸ் உணவு வகைகளுக்கு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா வழங்கியிருந்த ஹலால் சான்றிதழ் திரும்பப் பெறப்பட்டுள்ளது எனப் பரவிவரும் கருத்துக்களில் உண்மையில்லை என அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் ஹலால் பிரிவு அதிகாரி ஒருவர் மீள்பார்வைக்குத் தெரிவித்தார்.

மெக்டொனால்ட்ஸ் உணவுகளில் பன்றிக் கொழுப்பு கலக்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளதை அடுத்தே அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா இத்தீர்மானத்தை மேற்கொண்டதாகவும் தகவல் பரவியது. மெக்டொனால்ட்ஸ் போன்ற சில குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு ஹலால் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளமை சமூகத்தின் ஒரு தரப்பினரிடையே விமர்சனத்தை ஏற்படுத்தியிருக்கும் நிலையிலேயே, இந்த விடயமும் மேலெழுந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

முப்பதாண்டுகளாக இல்லத்தரசிகளின் மனங் கவர்ந்த டின்மீன்

டயமன்ட் மெக்கரல்

425 g -225/=

Hotline 2681700

DIAMOND

டின்மீன் என்றால் டயமன்ட்

Safety & Security

Lemen Brand
(Brass and Stainless Steel Padlocks)

Lemen Guaranteed

Importers and Manufacture
Tel: 0773435700, 0112431356 Fax: 0112331361
Dealers Islandwide

FAIZ BRASS
IMPORTED FB BRAND BRASS DOOR FITTINGS

Pad Locks and Gate Locks

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய முஸ்லிம் இளைஞர்களின் நோக்கும் போக்கும்

இன்றைய நவநாகரிக உலகில் முஸ்லிம் இளைஞர்களின் நோக்கும் போக்கும் அவசியம் எடுத்துக் காட்டப்பட வேண்டியுள்ளது. ஏனெனில், நாளுக்கு நாள் எமது முஸ்லிம் இளைஞர் அந்நிய நாகரீக வலையில் சிக்கி விடுபட முடியாதவாறு தத்தளிக்கின்றனர். முஸ்லிம் சமுதாய மார்க்க அறிஞர்களும், இயக்கத் தலைவர்களும், ஆசிரியர்களும், ஊர் நிர்வாகிகளும், மற்றும் பொதுநல சேவைகளில் ஈடுபட்டுள்ளோரும் ஒன்றாக இணைந்து இந்த இளைஞர்களுக்கு வழிகாட்ட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியுள்ளனர்.

முதலில், ஒவ்வோர் ஊரிலும் பள்ளிநிர்வாகம் செய்யும் தலைவர், செயலாளர், மற்றும் ஏனைய உறுப்பினர்கள் இஸ்லாமிய அடிப்படையில் ஷரீஆ சட்டங்களுக்கேற்ப ஒழுகி, ஏனையோரையும் அவ்வழியே நடத்திச் செல்வதற்கு முன்முரமாக ஈடுபடவேண்டும். குறிப்பாக, ஒவ்வோர் ஊரைச் சேர்ந்த இளைஞர்களின் நடவடிக்கைகளை நன்கு அவதானிக்க வேண்டும். அவர்களுக்கு விசேஷ கூட்டங்கள் நடத்தி ஒழுக்க நெறிகளை எடுத்துக் கூறவேண்டும். இவை பள்ளிவாசலை மையமாக வைத்து நடைபெறும்போது இளைஞர் தமது நோக்கையும் போக்கையும் சீர்படுத்திக் கொள்ள முனைவர்.

இம்மாதிரி முஸ்லிம் இளைஞர் மத்தியில் இன்று மெல்லமாக்குப் பெற்றிருப்பது, புரு ஸ்டைல் தலைமுடி வளர்ப்பு. அவர்கள் இதனை பிற சமூக இளைஞரிடமிருந்து பின் பற்றி வருகின்றனர். இந்தத் தவறான தலைமுடி வளர்ப்பை மாற்றிக் கொள்ள மஸ்ஜித் இமாம்கள் ஜுமுஆவைத் தொழுவைக்களுக்குப் பிறகு விளக்கம் அளிக்க வேண்டும். இளைஞர்களுக்குத் தவறைச் சுட்டிக் காட்டி, முறையாகத் தொழுவதற்கு வழி காட்ட வேண்டும்.

மேலும், பெரும்பாலான எமது இளைஞர்கள் நாளு தலைகளை தொப்பி அணிந்து மூடிக் கொள்ளாது தொழுது வருகின்றவர். ஏன் தொப்பி அணிவதில்லை? என்று கேட்டால், அது நபிவழியல்ல என்ற அலட்சிய மாகக் காரணங்காட்டி விடுகின்றனர். ஆனால், எல்லா இஸ்லாமிய இயக்கத் தலைவர்களும், தொப்பி அணிந்தவர்களாகவே பயான், சொற்பொழிவுகள் செய்கின்றனர். தொழுகைகளின் போது தொப்பி அணிந்து கொண்டே காணப்படுகின்றனர்.

அவ்வாறு இயக்கத் தலைவர்கள் செயற்படும் போது, ஏன் இயக்கங்களைச் சேர்ந்த இளைஞர்கள் மாத்திரம் தொப்பி அணியாது தொழுவதில் பிடிவாதமாயிருக்கின்றனர்? இந்த நிலைமையில் இவர்களை இயக்கத் தலைவர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் சரிவர வழிநடத்த வேண்டும்.

அடுத்து, அதிகமான இளைஞர்கள் உரோம் கேட்டுகளையே அணிந்து கொண்டு பள்ளிவாசலில் தொழுது வருகின்றனர். வெள்ளை, சிவப்பு, நீலம், பச்சை என்ற நிறங்கள் மாத்திரம் உடையாவாக இவை இருப்பினும் பரவாயில்லை. அதற்கு மாறாக, மிருகம், மனித உருவங்கள், தேவையற்ற, வழி கெடுக்கும் வசனங்கள், அலங்காரங்கள் பதித்த சேட்டுகளை அணிந்து தொழுது வருவது தொழுகையை பாதிக்கும் அல்லவா?

ஆனால், இந்நிலைமையை மார்க்க அறிஞர்களும், நிர்வாகிகளும், ஆசிரியர்களும், பெரியார்களும் கண்காணித்து நல்ல உடைகளை அணிந்து தொழும்படி வழி காட்ட வேண்டும்.

மேலும், இன்று வளர்ந்து வரும் முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில், பெரியார்களுக்கு கண்ணியம் செலுத்தும் போக்கு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. பாதையில் செல்லும் பொழுது பெரியார்களுக்கு ஸலாம் கூறுதல், மற்றும் ஒதுங்கி நடந்து போதல் போன்ற செயற்பாடுகள் குறைந்து செல்வதை அவதானிக்கலாம். இந்த நிலைமையும் சீர்பட இளைஞர் வழிகாட்டப் பட வேண்டும்.

அத்துடன், இன்றைய இளைஞர்கள் தமது பொன்னான நேரங்களை வீண் விளையாட்டுகளில் கழிப்பதையும் அவதானிக்க முடிகின்றது. எனவே இரவு காலங்களில் கண விதிகளில் வீண் பராக்குகளில் ஈடுபடாது தமது வீடுகளில் பெற்றார்களின் கண்காணிப்பில் எமது இளைஞர் தொழிற் பட்டால் அவர்களின் நோக்கும் போக்கும் சீர்பட முடியும்.

கலாபூஷணம்
எம்.வை.எம். மீஆத்

கருத்துக்களம்

சொல்வதை தெளிவாகச் சொல்லுங்கள்

கருத்துக் களத்தில் எழுதப்படுவன வாசகர்களின் கருத்துக்களே. மீள்பார்வையின் உத்தியோகபூர்வ கருத்தாக அவை இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை (ஆ. ர்)

சுரேஷ் எம்.பி.க்கு தகுந்த சாட்டையடி

இதழ்: 332ல் மூதூர் முஹம்மது அலி ஜின்னா பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.க்கு எழுதிய மடல் அவரின் ''முஸ்லிம்களுக்கு உரிமை தேவையென்றால் போராடுங்கள்'' என்ற கூற்றுக்கு தருந்த காட்டையடியாக அமைந்திருந்தது. அமைச்சர் றஹீம் அளிக்கவேண்டிய பதிலை, ஒரு கட்டுரை ஆசிரியர் தருக்க ஆதாரங்களுடனும் கூறப் பாகவும் அமைந்திருந்தமை பாராட்டத்தக்கது.

அதேவேளை, முஸ்லிம் சமூகத்தின் மீதான குற்றச்சாட்டுகளுக்கு சரியான நிலை சரியான நேரத்தில் அளிக்கும் தகுதி இவ்வாக அல்லது அதற்கான நேரம் இல்லாத நமது ''தலைமைகள்'' எல மொல்லிக் கொள்வோரை நினைத்து வெட்கப்படுகிறேன். இந்த மடலை கட்டுரை ஆசிரியர் நேரடியாகவோ பிரேமச் சந்திரன் எம்.பி.க்கும் அனுப்பிவைத்தால் சிறப்பாக இருக்கும்.

இர்ஹாம் சேகுதாவூத்,
காத்தான்குடி - 05

நிலையான சொத்துகளுக்கான ஸகாத்

வீட்டுக்கு ஸகாத் வழங்க வேண்டும் என்று மீள்பார்வையில் வாசித்தேன். நிலையான சொத்தாவது விற்கும்போதுதான் ஸகாத் கடமையென்று படித்தேன். கட்டுரையின் உண்மைத் தன்மை பற்றி விளக்கம் தரலாம்.

றீம் - மூதூர்

அடிப்படையில் நிலையான சொத்துகளுக்கு ஸகாத் கடமையில்லை. எனினும் ஒருவர், தன்னிடமுள்ள நிலையான சொத்தென்னை விற்பதற்கு முடிவு செய்தால் அதற்கு ஸகாத் கடமையாகிறது. எனினும் அதற்கு இரண்டு நிபந்தனைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டும். அவை,

1. விற்பனை செய்ய எண்ணம் கொண்டு நாளிலிருந்து ஒரு வருடம் பூர்த்தியாகியிருத்தல் வேண்டும்.

2. குறித்த நிலையான சொத்துகளை ஸகாத்திற்குரிய அளவை (நிஸாபை) அடைந்திருத்தல் வேண்டும்.

குறித்த ஆக்கத்தில் இது தெளிவாகவே விளக்கப்பட்டுள்ளது. அவ்வாக்கத்தை மீண்டும் வாசித்தால் புரிந்து கொள்வீர்கள்.

சுய விசாரணை நூல் விற்பனைக்கு

ஜாமிஆ நளீமியாவின் முன்னாள் விரிவுரையாளர் மர்ஹூம் அஷ்ஷெய்க் எம்.எம். நியாஸ் (நளீமி) எழுதிய சுயவிசாரணை எனும் நூல் எம்மிடம் சலுகை விலையில் விற்பனைக்குள்ளது.

இந்நூல், அவரின் நண்பர்களின் வெளிமீடாக (ஜூலை 2003) வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

விலை - 50.00
தொடர்புகளுக்கு - 077 222 7569

அஷ்ஷெய்க்
எம்.எம். நியாஸ் (நளீமி)
23.02.1970 - 04.01.2008

வாசகர் வாக்குமூலம்

இருநாணங்கிற்கு தாமதமாகினும் தொழிக்கு மேற்ற தலைப்பில் மீள்பார்வை இதழ் 331ல் கெளிகையாகப் பேச்ச எகோதரி உம்மு ஹபீபாவின் ஆலோசனைகள் எழுதிய அனைவரை ஒவ்வொரு பெண்ணும் அறிந்து தெரிந்துகொள்ள வேண்டிய விடயம் மிக்க முடியாத அறிவுப் பொக்கிஷம். அவரது சரியான நேரத்துக்குரிய, நேர்த்தியுடன் மீள்பார்வைக்குரிய சகோதரி உம்மு ஹபீபாவுக்கும் அகமகிழ்ந்த பாராட்டைத் தெரிவிக்கிறேன்.

எம்.எச்.எம்.சாலிஹ் (ஓய்வுபெற்ற அதிபர்), கின்னியா - 02

கருத்து-மாற்றுக் கருத்து மோதலில் இடம்பெற்றிருக்கும் அல்லாஹ் தஆலா மீதான தகாத்தாக்குதல் குறித்த கட்டுரையில் இந்தியாவில் பாபர் மஸ்ஜித் இடிப்பு 2000ம் ஆண்டு நிகழ்ந்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. 1992ம் ஆண்டு டிசம்பர் மாதம் 06ஆம் திகதியென்பதே சரி. அதிலிருந்து சரியாக 10 ஆண்டுகளில் குஜராத் இனப்படுகொலையையும் நிகழ்த்தியது ஆர்.எஸ்.எஸ்.பரிவார கும்பல்தான்.

முஹம்மது தாஹா, பேருவளை

Students @ மீள்பார்வை மாணவர்களுக்கு பிரேரணையின்றாக இருக்கின்றது. மேலும் எம்.பி.ஏ.மாணவர்களுக்கான சிறுவர் பகுதியையும் தரமுயர்த்தினால் மிகவும் பயனுள்ளதாக அமையும் எனக் கருதுகிறேன்.

தனிஷ்கா லிமி - பமுடுபிட்டிய

மீள்பார்வையில் நீண்ட கட்டுரைகளைத் தவிர்த்து சிறிய ஆக்கங்களை சேர்த்தால் கொள்ள முற்சி செய்யுங்களேன்.

நியாஸ் - உக்குரெஸ்ஸ

இதழ் 332ல், ''இன்றைய முஸ்லிம் இளைஞர்களும் போக்கும்'' எனும் கட்டுரையில் ஆசிரியர்கள், மூகாரின்னார்களுக்கு செய்யும் அநியாயங்களும் இல்லாமல் வைத்தல் சரியான சம்பந்தமாகவும் எழுதியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

அபூ மர்யம் - மதுராச்சிய

கருத்துக்களம் விழிப்புணர்வு பெறுவதாக இருந்தது. இலங்கை முஸ்லிம்களின் முதல் மொழி வரலாற்றுரை பல வகையிலும் திருப்திகரமாக தூண்டியது.

உம்மு ஹாஸிம் - கேகிழுவா

மழை பற்றி வெளிவந்த கட்டுரை காலப் பொருத்தமானதாக இருந்தது. பாதாளவடிகள் தூர் செய்யும் செயல்களில் கரிசனையோடு ஈடுபடுவதோடு, மக்களுக்குரும்மழை தடையின்றி நிறைவேற்ற வழிவிடவேண்டும். பாதாளவடி தூர் செய்யும் செயல்களில் தமது பணத்தை ஏழை எளியவர்களுக்கும் கொடுத்துதவ முன்வர வேண்டும்.

பாத்திமா பர்ஸானா - கம்பளை

மீள்பார்வையின் பக்கங்கள் பற்றாமை எனினும் வரலாறு சமந்த மனிதர்களை, சமூகங்களை, முன்னோர்களைப் பற்றிய தகவல்களை காலத்தின் தேவையாகவுள்ளன. மேலும், மீள்பார்வையில் ஆங்காங்கே எழுத்துப் பிழைகளைக் காணமுடிகின்றது. இன்னும் எதிர் வரும் காலங்களில் தவிர்ப்பதற்கு முயற்சிக்கவும்.

மோஹின் - கஹட்டோவிட

சமூகத்தில் ஆண்களின் ஏன் உருவாக்கப்படவில்லை என்ற தலைப்பு பெண்கள் பற்றிய இஸ்லாமிய கோட்பாட்டின் தெளிவை உணர்த்தியது.

ஏ.ஜிஹாத் - கின்னியா 1

இளைஞர் பருவம் என்ற கட்டுரை எமக்கு மிகவும் பிரயோசனமாய் இருந்தது. மேலும் இது தொடர்பான உதவிகள் ஆலோசனைகளை எதிர்பார்க்கிறேன்.

சமீம் - பான்கழுவ

கடந்த மீள்பார்வையில் ஒரு வாசகர்: ''இலங்கை தரிசனம் தொடர்பான பிரமோதனமான தகவல் மீள்பார்வையில் இல்லையே'' என்று எழுதியிருந்தார். அவர் ஒரேயொரு தடவை மீள்பார்வையை வாசித்துவிட்டு இப்படிக் கூறுகிறார். அவருடைய மனக்குறையை எழுத்து மூலம் நிறைவேற்ற முடியாதுள்ளது. தொடர்ந்து வாசித்திருந்தால் அவ்வாறு கூறியிருக்க மாட்டார்.

ஷிப்ரான் - கண்டி

அஷ்ஷெய்க் ஹுஸைன் மதனியின் பேட்டி. இதுவரை நான் வாசித்த பேட்டிகளில் எனது மனதை ஆழமாகப் பாதித்த மிகச் சிறந்த கருத்துக்கள். யாரையும் தாக்காத, எல்லோருக்கும் நன்மை தரக் கூடிய கருத்துக்கள். அவரைப் போன்ற உலமாக்களின் அனைப்பு களும் பெருமைக்குரியவைகளாகவே இருக்கின்றன. அவரது பணிகளை அல்லாஹ் பொருந்திக் கொள்ள வேண்டும். அவரது குரலில் பாதுகாப்பு ஒலிக்க வேண்டும்.

மஸ்ஊல் தாஹா, சீனன்கோட்டை

இதழ் 328 இல் வெளியான ஸலீம் பாகி எழுதிய சிறுகதை உண்மையில் சமூகத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தது.

பாத்திமா மின்ஹா, அரக்கியாலை

மீள்பார்வையின் உலக அரசியல் ஆய்வு சிறப்பாக உள்ளது. எஸ்.எம்.எஸ். அனுப்பச் சொல்லும் நிகழ்ச்சியை முதலை முதலாக நிராகரித்துள்ளேன். இது எனது நான்காவது குறுந்தகவலாகும்.

எச்.எம். அஸ்கர், புத்தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைச் சூழலைக் கருத்திற் கொண்டு

உழ்ஹிய்யாவில் பேண வேண்டிய ஒழுங்குகள்

தஸ்லீமுக் எஸ்.எச்.எம். பளீல் (நளீமி)
திரேஸ்டா விரிவுரையாளர் ஜாமிஆ நளீமியா

இலங்கையிலுள்ள பெரும் பான்மை பௌத்தர்கள் ஜீவகாருண்யம் பற்றி அண்மைக் காலங்களில் அதிகமதிகம் பேசி வருவதால், அவர்களுக்கு மத்தியில் 'பசுவதை' பற்றிய கருத்துகள் தீவிரமாகப் பரப்பப்படுகின்றன. அண்மையில் முள்ளெலும்வர ஆவகத்தில் மிருகங்கள் அறுக்கப் படுவதற்கு தடை விதிக்கப்பட்ட மையை நாம் அறிவோம்.

அதேபோன்று மாடுகளை அறுப்பது பற்றிய அரச தொலைக் காட்சியொன்றின் விளம்பரத்தை நோக்குகின்றபோதும் அடிக்கடி இடம்பெறும் கலந்துரையாடல் களை, எழுப்பப்படும் ஆக்கங் களை அவதானிக்கும்போதும், எதிர்வரும் நாட்களில் உழ்ஹிய் யாவை நிறைவேற்றுவதில் பல பிரச்சினைகளை முஸ்லிம்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கும் என ஊகிக்க முடியும். எனவே அந்த இபாதத்தை நிறைவேற்ற இருக்கும் நாம் கவனிக்க வேண் டிய சில அம்சங்களை உங்களுடன் பகிர்ந்கொள்ள விரும்புகிறோம்.

அண்மைக் காலத்தில் பௌத் தர்களுக்கு மத்தியில் சில விஷமி களால் துவேஷ உணர்வு மிக வேகமாகத் தூண்டப்பட்டு வரு கிறது. முஸ்லிம்களது சிறிய, பெரிய நடவடிக்கைகளையும் எரிச்சலோடும் கவனமாகவும் அவர்கள் நோட்டமிட்டு வருகி றார்கள். முஸ்லிம்களை சீண்டுவ தற்கும் அவர்களைக் குறைகாண் பதற்கும் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

''வேண்டாப் பெண்டாட்டி கை பட்டாலும் கால் பட்டாலும் குற்றமே'' என்பதுபோல் இந்த நாட்டில் வாழ்வதற்கான உரித்து டைய இனமாக முஸ்லிம்கள் இருப்பதை அங்கீகரிக்கவே முடி யாத கட்டத்துக்கு பல துவேஷி கள் வந்து விட்டார்கள். இவர் களது ஆவேஷம் தூண்டப்படுவ தற்கு முஸ்லிம் சமூகத்தின் சிலரது பிழையான நடவடிக்கைகளும் காரணமாக அமைந்துவிட்ட மையை மறுப்பதற்கில்லைதான்.

உழ்ஹிய்யாவைப் பொறுத்த வரை அதற்காக நாம் மிருகங் களை ஓர் இடத்திலிருந்து இன் னுமொரு இடத்திற்கு வாகனங் கள் மூலம் எடுத்துச் செல்லும் போது அதற்கான அனுமதியை உரிய அரச அதிகாரிகளிடமிருந்து முறையாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். இது விடயமாக அரி திக்குள்ளாக்கப்பட்டால் முஸ் லிம் அரசியல்வாதிகள் ஊடாக அவற்றைத் தீர்த்துக்கொள்ள முயற்சிக்கலாம்.

அப்படியும்கூட அனுமதி மறுக்கப்படும்போது அல்லாஹ் வின் பொறுப்பில் விட்டு விடு வதே தவிர, வேறு வழிகளில் தீர்க்க முயற்சிக்கலாகாது. அனு மதிக்கப்பட்ட அளவை விட அதிகமாக மிருகங்களை எடுத்துச் செல்ல ஒருபோதும் முயற்சிக்கக் கூடாது. இதன்மூலம் நாம் நாட் டின் சட்டத்தை மீறுபவர்களா வோம் என்பதற்கும் அப்பால் ஜீவகாருண்யம் பற்றிய இஸ்லா மிய ஒழுங்கு விதிகளை மீறியவர் களாகக் கருதப்பட்டு அல்லாஹ் வின் தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.

மிருகங்களை வாகனத்தில் கொண்டு செல்லும்போது மட்டு மன்றி, பாதைகளில் ஓட்டிச் செல் லும்போது குறிப்பாக பிற சமயத் தவர்கள் வாழும் பிரதேசங்களூடாக குள்ளாய் ஓட்டிச் செல்லும்போது அதிகமாக எச்சரிக்கையாக நடந்து கொள்வது அவசியமாகும். அவர் கள் அவதானித்தாலும் இல்லா விட்டாலும் அல்லாஹ் எம்மை அவதானிப்பதால், அவனது படைப்பினங்களை துன்புறுத்திய வர்களாக நாம் மாறிவிடலாகாது.

குர்பானுக்கு முஸ்னர்-மிருகங் களை ஆறுதலாக இருக்க விட வேண்டும். தொழுவங்களில், கட்டி வைக்கும் இடத்தில் அவற்றை நெருக்கமாக வைத்திருக்கவா காது. அவற்றிற்குத் தேவையான நீர், ஆகாரம் என்பன உரிய முறை யில் வழங்கப்படுவதை உறுதிப் படுத்த வேண்டும். கத்தியை நன் றாகக் கூர்மையாக்குவது, அல் லாஹ்வின் பெயரைக் கூறுவது, ஏனைய மிருகங்கள் பார்த்திருக் கும்போது அறுக்காதிருப்பது, மிருகத்தை கிப்லா திசைக்கு திருப்பிக் கொண்டு ஒரு புறம் சாய்த்து அறுப்பது என்பனவும் கவனிக்கப்பட வேண்டும்.

ஒருவர் ஆடொன்றை அறுப்ப தற்காக பூமியில் கிடத்தி விட்டு கத்தியைத் தீட்டிக் கொண்டிருப்ப தைக் கண்ட நபி (ஸல்) அவர்கள், ''அதனை நீ இரண்டு தடவை கொல்ல விரும்புகிறாயா? அத னைக் கிடத்துவதற்கு முன்னர் அதனை (கத்தியை) நீர் கூர்மை யாக்கியிருக்கவில்லையா என்று வினவினார்கள்.'' (ஆதாரம்: ஹாகிம், தபராணி)

ஒருவர் நபி (ஸல்) அவர்களி டம் நான் ஒரு ஆட்டை அறுக்கும் போது அதன் மீது இரக்கம் காட் டுகிறேன் என்றார், அப்போது நபியவர்கள் ஆட்டுக்கு நீ இரக்கம் காட்டினால் அல்லாஹ் உன் மீது இரக்கம் காட்டுவான் என்றார்கள். (ஆதாரம் -அஹ்மத்)

இன்னுமொரு தடவை நபி (ஸல்) அவர்கள் ''அல்லாஹ் ஒவ் வொரு காரியத்தையும் திறம்படச் செய்வதைக் கடமையாக்கியிருக் கிறான். நீங்கள் (மிருகங்களை) கொல்லும்போது அதனை முறை யாகச் செய்யுங்கள். நீங்கள் அறுத் தால் முறையாக அறுங்கள். உங்களில் ஒருவர் தனது கத்தி யைக் கூர்மையாக்கிக் கொள்ளட் டும். தனது அறுப்புக்கான மிரு கத்துக்கு ஓய்வு கொடுக்கட்டும்'' என்றார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

இறைச்சியை சாப்பிட மார்க் கம் பொதுவாக அனுமதிக்காத (நாய், பூனை போன்ற) மிருகங் கள் மீது கூட அன்பு காட்டும்படி யும், அன்பு காட்டாதபோது கடும் தண்டனைக்கு உள்ளாக வேண்டி வரும் என்றும் ஹதீஸ்கள் வலி யுறுத்துகின்றன. இது இஸ்லாத் தின் ஜீவகாருண்யத்திற்கு சிறந்த சான்றாகும்.

அகீகா, நேர்ச்சை, உழ்ஹிய்யா போன்ற நோக்கங்களுக்காக இருந் தாலும், -ஏன் காதாரணமாக இறை ச்சிக்காகவேனும் நாம் மிருகங் களை அறுக்க நேர்ட்டால்- அறுக் கும் நேரம், அறுக்கும் இடம் என் பவற்றையும் முன்கூட்டியே நல் றாக சிந்தித்துத் தீர்மானிக்க வேண் டும். ஏனெனில் பக்கத்து வீட்டில் இருப்பவர் ஒரு இந்து வாக அல் லது பௌத்தராக இருக்கலாம்.

மிருகங்கள் அறுக்கப்படும் காட்சியையோ அல்லது அறுக்கப் பட்ட பின்னர் அவை தோலுரிக் கப்படும் அல்லது இறைச்சியாக் கப்படும் காட்சியையோ, பாதை களில் பகிரங்கமாக இரத்தம் சொட்டச் சொட்ட வாகனங்களில் ஏற்றப்படும் அல்லது கொண்டு செல்லப்படும் காட்சியையோ காண் விரும்பாதிருக்கலாம். எனவே, முடிந்தவரை மறைவாக வும் கண்ணியமாகவும் இவற் றைச் செய்வதற்கு அதிக கவன மெடுக்க வேண்டும்.

உழ்ஹிய்யா காலப் பிரிவைப் பொறுத்தவரை நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டிய வேறு ஒரு விடயமும் இருக்கின்றது. அது தான் அறுக்கப்பட்ட மிருகங்க ளது எச்ச சொச்சங்கள் அல்லது கழிவுகளாகும். அறுக்கப்பட்ட மிருகங்களது தலைகள், தோல், முன், கால்கள் என்பன ஆங் காங்கே எறியப்படுவதுண்டு. இதனால், சூழல் மாசடைகிறது. ஒரிரு நாட்களில் துர்நாற்றம் வீச ஆரம்பிக்கிறது. நாய்களும், பூனை களும், காகங்களும் அவ்விடங் களுக்குப் படையெடுக்கின்றன. பின்னர் அங்கு வரும் அதிகாரி களும் பிற சமயத்தவர்களும் முஸ் லிம் சமூகம் சுத்தமற்ற, அடுத்த வர்கள் பற்றிய எவ்வித அக்கறை யுமற்ற கயநல சமூகம் என்று முடிவெடுக்கலாம்.

பிறர் எம்மைக் குறை கூறுவர் என்பதற்காக நாம் எமது வாழ் வை ஒழுங்குபடுத்த வேண்டும் என்பதல்ல. எமது மார்க்கத்தில் எக்காரியத்தையும் நிறம்பட செய் யும்படியும், சுத்தமாக இருக்கும் படியும் வலியுறுத்தப்பட்டுள்ளது. ''சுத்தம் சுமானின் பாதி'', ''ஒவ் வொரு காரியத்தையும் நிறம்படச் செய்யும்படி அல்லாஹ் கடமை யாக்கியுள்ளான்'' போன்ற பல ஹதீஸ்கள் எம்மை நெறிப்படுத்த வேண்டும்.

அதுமட்டுமன்றி, அயலாருக் குத் தொந்தரவு செய்யலாகாது என்ற கருத்தைக் கூறும் ஹதீஸ் கள் எமக்கு வழிகாட்டுகின்றன.

''யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் விசுவாசிக்கி றாரோ அவர் அயலாருக்கு (பக் கத்து வீட்டாருக்கு) நோவினை செய்யாதிருக்கட்டும் என்றார் கள்.'' (ஆதாரம்: புஹாரி)

''மேலும், அல்லாஹ்வின் மீது சத்தியமாக ஒருவன் ஈமான் கொண்டவனாக மாட்டான் என மூன்று தடவை மீட்டி மீட்டிக் கூறினார்கள். அதைக் கேட்ட நபித்தோழர்கள், அவர் 'யார்' என வினவ, 'எவரது தொந்தரவுகளிலி ருந்து அயலவர்கள் பாதுகாப்புப் பெறவில்லையோ அவர்தான்' என்றார்கள்.'' (புஹாரி)

எனவே, அயலாருக்கு எந்த வகையிலேனும் தொந்தரவாக இருப்பவன் விசுவாசம் கொண்ட வனாக இருக்க முடியாது என்று இதுபோன்ற நபிமொழிகள் தெரி விக்கின்றன. சொல்லால், செய லால், பிறரது மனதை நோவினை செய்வது விசுவாசியின் பண்பாக இருக்க முடியாது.

ஒரு விசுவாசியை அவனது அழகான நற்குணங்களால் இனம் காண முடியும். அவன் எங்கு சென்றாலும் பிறரது கஷ்டத்தில் பங்கெடுப்பவனாக, பிறருக்கு உதவி செய்பவனாக இருப்பானே தவிர, அவனால் பிறருக்கு உபத்தி ரங்கள் இருக்கலாகாது. அவன் செய்யும் எல்லா இபாதத்களி னூடாக இதனை அவன் சாதிக்க வேண்டு மென்றே அல்லாஹ்வும் அவனது தூதரும் விரும்புகிறார். இபாதத்கள் அனைத்தும் மறு மைப் பலன்களைத் தருவது போலவே உலகிலும் அவற்றின் பலாபலன்களைக் காண முடியும்.

மேலும் உழ்ஹிய்யா என்பது பெரும்பாலான இமாம்களது கருத்துப்படி வசதி படைத்தவர் கள் மீது வலியுறுத்தப்பட்ட ஒரு ஸுன்னாவாகும். இந்த ஸுன் னாவை நிறைவேற்றுவதில் காட் டப்படும் ஆர்வத்தின் அளவை விட அடிப்படையான பர்ளுக ளான ஐங்காலத் தொழுகை, ஸகாத், வாரிசுச் சொத்துக்களை இஸ்லாமிய ஒழுங்கின்படி பங் கிடு செய்வது, கல்வி கற்பதும் கற்பிப்பதும், ஹலாலான உழை ப்பு போன்றவற்றில் அதிக ஆர்வம் காட்டி நிறைவேற்றுபவர் கள்தான் ஸுன்னத்துகள் பற்றி அதிக அக்கறையெடுக்க அரு கதை பெறுவார்கள்.

அடுத்ததாக நாம் வாழ்வது ஒரு இஸ்லாமிய நாட்டில் அல்ல என்பதை மனதிற் கொள்ள வேண்டும்.

உழ்ஹிய்யாவின் நோக்கங்கள் வருமாறு:

1. அல்லாஹ்வின் கட்டளையை நிறைவுசெய்து அதனூடாக அவனது கூலியைப் பெறு வது.
2. உள்ளத்திலுள்ள கஞ்சத்தன த்தை அகற்றுவது.
3. மாமிசத்தை ஏழை, எளியவர் களுக்கு வழங்கி அவர்களது பசியைப் போக்கி, போஷாக் குள்ளவர்களாக மாற்றுவது.
4. இப்றாஹீம் (அலை) அவர் களது இயாக வாழ்வை நினைவுகூர்வது.

எனவே, உழ்ஹிய்யா எனும் ஸுன்னாவை சிறுபான்மை நாட் டில் உரிய விதத்தில் நிறைவு செய்து சருகல தவ்மைகளைப் பெறுவோமாக.

சமூக அரசியல் மாற்றம்
நூல் சிறப்பு விலையில்...
120/-
புதிய விலை:
80/-



உள்ளடக்கம்
இமாம் அபூ ஹனீபாவும் சமூக மாற்றமும்
இமாம் மாலிக்கும் சமூக மாற்றமும்
இமாம் ஷாபிஈயும் சமூக மாற்றமும்
இமாம் அஹ்மதும் சமூக மாற்றமும்
மாற்றத்திற்கான இன்னும் சில முயற்சிகள்
அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆவின் சமூக மாற்றத்திற்கான கொள்கை
கிலாபத்தும் மன்னராட்சி முறையும்
அரசியல் சிந்தனைகள்: பகுதி ஒன்று
அரசியல் சிந்தனைகள்: பகுதி இரண்டு
அரசியல் சிந்தனைகள்: பகுதி மூன்று
களவுபோன ஜிஹாத்
இஸ்லாமிய வாதிகள் அரசில் பங்குகொள்ளல்

MMC Meelparvai Media Centre

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை

ஆசிரிய பீடத்திலிருந்து...

Meelparvai Media Centre (MMC)
2 A, Hill Castle Place, Bandaranayake Mawatha, Colombo 12. Tel/Fax: 0112 336272
E-mail: meelparvai@gmail.com Web: www.meelparvai.net

'மதட்ட தித்த'வுக்கு முற்றுப் புள்ளி: சாராய சாம்ராஜ்யத்தை நோக்கி...

அலுவல் ஜீ ஒலாவின்

முழு நாட்டையும் சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கபுரியாக மாற்றும் திட்டத்தின் கீழ், அரசின் மது ஒழிப்புத் திட்டமான 'மதட்ட தித்த' கிடப்பில் போடப்பட்டுள்ளதாக தகவல் கசிந்துள்ளது.

குறிப்பாக 2012 வரவு- செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டவுடன், கலால் வரி தொடர்பான அனைத்துச் சட்டங்களும் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. வெளிநாட்டு மதுபானங்களுக்கு உள்ள கலால் வரி முற்று முழுதாக இல்லாமல் ஆக்கப்படப் போகிறது அல்லது குறைக்கப்படப் போகிறது.

மேலும், கடல் விமான (Sea Plane) திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ள நாட்டிலுள்ள 23 பெரிய குளங்களுக்கு அருகே புதிய அல்லது நடமாடும் மதுபான விற்பனை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

ஹம்பாந்தோட்டை, நிலாவெளி, கற்பிட்டி, புத்தளம், புராதன நகரங்களான அனுராதபுரம், பொலன்னறுவை, சிகிரியா மற்றும் தேசிய வனவிலங்கு சரணாலயங்களை அண்மித்த சுற்றுலா வலயங்களில் மதுபான விற்பனை நிலையங்களை திறப்பதற்கான சட்ட ரீதியான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அந்த வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

இந்த விடயங்கள் அரசின் திட்டத்தில் இருப்பது உண்மையாயின், அது நாட்டின் எதிர்காலத்தை திட்டவட்டமாக படுகுழியில் தள்ளுவதாகவே அமையும். சுற்றுலாத் துறை தொடர்பாக அரசு மிகப் பெரும் ஆர்வம் காட்டிவரும் நிலையில், இவ்வாறான திட்டங்கள் முன்னெடுக்கப்படும் சாத்தியங்களை மறுப்பதற்கில்லை.

போர் முடிந்ததன் பின்னர் சுற்றுலாப் பயணிகளது வருகை பெருமளவில் அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கையை மேலும் பல மடங்காக அதிகரிக்கும் இலக்கோடு அரசு செயல்பட்டு வருகிறது. இதற்கென நாடெங்குமுள்ள சுற்றுலாப் பயணிகளது தங்குமிட வசதியை அதிகரிப்பதற்கான பல செயற்திட்டங்களை அரசு முன்னெடுத்துள்ளது.

பொருளாதார ரீதியாக பல்வேறு நெருக்கடிகளுக்கு அரசாங்கம் முகம்கொடுத்து வருகிறது. வரவு-செலவுத் திட்டத்தையொட்டி பொருட்களுக்கும் சேவைகளுக்கும் மேற்கொள்ளப்பட்டு வரும் விலை அதிகரிப்பின் உள்நோக்கம் அரசின் வருமானத்தை அதிகரிப்பதுதான் என்பதை அனைவரும் நன்கு அறிவர்.

அரசின் வருமான வழிகளுள் மதுபானம் மிகவும் முக்கியமான ஒன்று. குதாட்டத்தை ஊக்குவிக்கும் முயற்சிகளும் இந்த வகையைச் சேர்ந்ததே. இவற்றின் மூலம் அதிக வருமானத்தை சம்பாதிப்பதே அரசாங்கத்தின் தற்போதைய நகர்வினது இலக்காகத் தெரிகிறது.

போதைப்பொருளாலும் மதுப் பாவனையாலும் பாரிய சமூக சிதைவிற்கு முகங்கொடுத்துவரும் எமது நாட்டில், மதுவை ஒழிப்போம் என்ற வரவேற்கத்தக்க கருத்தை மஹிந்த சிந்தனை பேசியது. இப்போது பொருளாதாரத் தேவைக்கு முன்னால் உயர் பெறுமானங்கள் தோற்றுப் போவதையே இந்த புதிய நகர்வுகள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

மதுப் பாவனையும் சுற்றுலாத் துறையும் இலங்கையின் சமூகப் பெறுமானங்களையும் குடும்பக் கட்டமைப்பையும் சிதைத்து சீரழிவுக்கு கட்டுத்தியமைக்கு நம் கண் முன்னே எண்ணற்ற சான்றுகள் உள்ளன. இந்த எதிர் விளைவுகள் பன்மடங்காக அதிகரிக்கும் வகையிலேயே அரசின் இரகசிய நிகழ்ச்சி நிரல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த நாட்டை நேசிக்கும், நமது எதிர்காலத்தின் மீது உண்மையான அன்பு கொண்டிருக்கும் எவரும் இதனை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அனைத்து சமூகங்களையும் சமயங்களையும் சேர்ந்த பெரியோர்களும் செயற்பாட்டாளர்களும் ஒருங்கிணைந்து அரசுக்கு பலத்த அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும். இதன்மூலம் பெரும் அபாயத்திலிருந்தும் தீமையிலிருந்தும் இந்நாட்டை மீட்டெடுக்க ஒன்றிணைந்து போராடுவோம்.

கடாபி இலங்கையில் புரியப்பட்டுள்ள விதம்:

நம்மில் பலரது பார்வையில் மாற்றம் தேவை

சிராஜ் மஷ்ஹூர்

அறபு இஸ்லாமிய உலகின் தலைவர்கள் இலங்கை முஸ்லிம்களிடையே செல்வாக்குப் பெற்றிருப்பது இயல்பு. இந்த வகையில் நாஸர், சதாம் ஹுஸைன், கடாபி, யாஸிர் அறபாத் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களது பெயர்கள் கூட இங்கு பலருக்கு சூட்டப்பட்டிருக்கிறது. இந்த வரிசையில் செல்வாக்குப் பெற்றிருந்த பலரைப் போல கடாபியும் இப்போது உயிருடன் இல்லை.

அணிசாரா மாநாட்டுக்காக கடாபி இலங்கைக்கு வந்தபோது இங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது. அப்போது இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அரசாங்கத்திற்கும் கடாபிக்கும் இடையில் நல்ல நெருக்கம் இருந்தது. கொள்கையில் கூட இருவரும் இடதுசாரி சார்பைக் கொண்டிருந்தனர்.

கடாபி இலங்கைக்கு பல வகையில் உதவியளித்த ஒருவர். அவருடைய மக்கள் காங்கிரஸின் கிளைகள் திக்குவல்லை, அக்கரைப்பற்று போன்ற பிரதேசங்களில் காணப்பட்டன. ஜாமிஆ நளீமிய்யாவின் மாநாட்டு மண்டபம்கூட லிபியாவினால் தான் நிர்மாணிக்கப்பட்டது. அத்தோடு அங்குள்ள உலக இஸ்லாமிய அழைப்பு இயக்கம் பெருந்தொகைப் பணத்தை பல்வேறு பணிகளுக்காக இந்நாட்டில் செலவிட்டுள்ளது.

இப்படி கடாபியின் இலங்கைக்கான பணிகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இப்போது கடாபியின் மரணம் நிகழ்ந்ததன் பின்னர், அது பல்வேறு மட்டங்களில் வெவ்வேறு வகையான எதிர்வினைகளை உருவாக்கியிருப்பதைக் கண்டுகொள்ள முடியும்.

ஆளும்தரப்பு முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் இதனைக் கண்டித்துள்ளனர். அவர்களுக்கு ஜனாதிபதியின் மனசை குளிரச் செய்யும் எண்ணம் இருந்திருக்கக் கூடும். இங்கு கவனிக்க வேண்டிய சுவாரசியமான விடயம், இவர்களைப் போல இலங்கை அரசாங்கம் கடாபியின் கொலையைக் கண்டிக்கவில்லை என்பதுதான்.

கடாபியின் மரணம் தொடர்பான தெளிவும் விளக்கமும் பெறப்பட வேண்டும் என்பதுதான் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருந்தது. பலர் தனிப்பட்ட முறையில் கண்டனங்களை வெளியிட்டுள்ளனர். ஆனால் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வக் கூற்று இப்படித்தான் அமைந்திருந்தது: "கேணல் முஅம்மர் கடாபியின் மரணத்தைச் சூழ்ந்திருக்கும் நிலமைகள், விளக்கம் கோரலை வேண்டி நிற்கின்றன என்பதுதான் இலங்கை அரசாங்கத்தின் கருத்தாகும்."

இங்கு படுகொலை என்ற சொல்லை அரசு பயன்படுத்தவில்லை. மரணம் என்ற சொல்லைத்தான் பயன்படுத்தியிருக்கின்றது என்பது மிகவும் குறிப்பாகக் கவனிக்கத்தக்கது. கடாபிக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு மிகவும் பலமானது. லிபிய மக்கள் எழுச்சியின்போது, இலங்கை அரசாங்கம் மக்களின் பக்கம் நிற்கவில்லை. தெளிவாக கடாபியின் பக்கம் அது சார்ந்திருந்தது. ஜனாதிபதி மஹிந்தவின் தோளில் கைபோட்டு பழகும் அளவுக்கு அவர்களிடையே நெருக்கமான உறவு இருந்தது.

இலங்கையின் நெருங்கிய கூட்டாளியான சீனாவும் கடாபியின் பலமான ஆதரவு நாடுதான். ஆனால் அந்த நாட்டின் உத்தியோகபூர்வக் கூற்றுக் கூட 'லிபிய வரலாற்றுப் பக்கங்களில் கடாபியின் மரணம் முக்கியமான திருப்புமுனையை குறித்து நிற்கிறது' என்று, இலங்கையை விடவும் சற்றுக் குறைந்த தொனியிலேயே அமைந்திருந்தது.

நீண்டகாலமாக கடாபிக்கு ஆதரவாக இருந்து வந்த அரசாங்கங்கள், நம் நாட்டைப் போல மெல்லிய குரலில் பேசியது ஏன்? லிபிய மக்கள் புரட்சியின் பின்னே உள்ள அரசியல் நியாயங்களை பகிரங்கமாக மறுதலிக்க முடியாது என்பதுதான் அந்த உண்மை.

கடாபிக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த லிபியாவின் இடைக்கால ஆட்சியாளர்களில் மேற்கு சார்பானவர்கள் இருந்தார்கள் என்பது தெளிவான உண்மை. அதேபோல, மேற்குலகின் தெளிவான எதிரிகளும் அதில் அங்கம் வகித்தனர். இவ்விரு தரப்பினரிடையேயும் அடிக்கடி கருத்து முரண்பாடுகள் எழுந்து வருகின்றன. அது ஒரு புறம் இருக்கட்டும், இவர்களில் சிலரது நிலைப்பாட்டைக் காரணம் காட்டி, கடாபியை நியாயப்படுத்த முனைவது சரியல்ல. நமக்கு எப்போதும் ஆட்சியாளர்களை விடவும் மக்களது நிலைப்பாடே முக்கியமானது.

கடாபி யார்? அவர் எப்படிப்பட்டவர்? இதற்கு ஒற்றைப் பதிலை அளிப்பது கடினமானது. கடாபி தொடக்க காலங்களில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான குரலாக ஒலித்தார். தீவிர அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்தார். அமெரிக்காவின் எதிரிகளுக்கு தனது நாட்டில் புகலிடம் கொடுத்தார். பெருமளவு நிதியுதவியும் வழங்கினார்.

ஒரு கட்டத்தில் லிபியாவின் பெரும் வளமான எண்ணெய் வருமானத்தை பொதுமக்களுக்குப் பிரித்துக் கொடுக்கவும் செய்தார். பல வளர்முக நாடுகளுக்கு நிதியுதவியும் அளித்து வந்தார். இப்படி கடாபிக்கு பல நல்ல பக்கங்கள் இருக்கின்றன.

இதே கடாபிக்கு இன்னொரு முகமும் இருக்கிறது. அவர் தன் வாழ்நாள் முழுவதும் இஸ்லாமியவாதிகளுக்கு எதிரானவராகவே இருந்தார். ஒரு கட்டத்தில் நாஸரின் அறபுத் தேசியவாதத்தின் தீவிர ஆதரவாளராக இருந்தார். பொதுவுடமைக் கோட்பாட்டையும் இஸ்லாத்தின் சில விடயங்களையும் கலந்து தானும் குழம்பி, மற்றவர்களையும் குழப்பினார். அவருடைய பகமை நூல் இந்தக் குழப்பத்தின் ஒரு வடிவமாகும்.

கடாபியைச் சூழ இருந்தவர்கள் யார்? எப்போதும் சுவர்ச்சிகரமான பெண் மெய்ப் பாதுகாவலர்கள் புடை சூழவே அவர் இருந்தார் என்பது பகிரங்க இரகசியம். இது அவரது மனநிலையின் ஒரு குறுக்கு வெட்டு முகம்.

"கடாபி பூமியில் அட்டூழியம் புரிந்தார். கொலை செய்தார். மக்களை விரட்டியடித்தார். ஆயிரக் கணக்கானவர்களைக் காயப்படுத்தினார். 1200 அபூ ஸலீம் சிறைக் கைதிகளை இரவோடு இரவாக கொலை செய்துவிட்டு, எதுவும் நடக்காததுபோல் இருந்துவிட்டார். அவர் தனக்கு தெய்வீக சக்தி இருக்கிறது என்ற நினைப்பில் அரக்கத்தனம் புரிந்து கொண்டிருந்தார்." இப்படிச் சொல்லியிருப்பது வேறு யாருமல்ல. முஸ்லிம் உலகில் மிகவும் மதிக்கப்படும் ஷெய்க் யூஸுப் அல் கர்ளாவிதான் இந்த வார்த்தைகளை மொழிந்திருக்கிறார். அதுவும் அவர் வெள்ளிக்கிழமை குத்பாவின்போது மிம்பரில் வைத்தே இப்படிக் கூறியுள்ளார்.

இது இவ்வாறிருக்க இலங்கைக்கு சமீபத்தில் வந்த எகிப்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பாழில் ஸுலைமான், அமெரிக்காவின் முன்னணி முஸ்லிம் அறிஞரான அப்துர் ரஹ்மான் அல் அமூதி 23 வருடங்கள் அமெரிக்க அரசால் சிறையிடப்படுவதற்கு

(பக்.19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடகங்களே சமூக மறுமலர்ச்சியின் ஆதார சக்தி

சட்டத்தரணி ஏ.எம். ஜிப்ரி

சட்டத்தரணி ஏ.எம். ஜிப்ரி அவர்கள் கண்டி, உடதலவின்னையைப் பிறந்தகமாகக் கொண்டவர். தற்போது கொழும்பில் வசித்து வருகிறார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றதைத் தொடர்ந்து அரச பணியில் இணைந்தார். பின்னர் சட்டக் கல்லூரி அனுமதி பெற்றார். சட்டத்தரணி ஜிப்ரி அவர்கள் சமூக முன்னேற்றத்தில் கூடுதல் ஆர்வம் கொண்டவர். சமூகத்தின் முன்னேற்றத்திற்கு தன்னாலான பணிகளைச் செய்து வருகிறார். கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் ஆளுநர் சபை செயலாளராகப் பணியாற்றினார். முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவராகவும் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. சட்டத்தரணி ஜிப்ரி அவர்களுடன் மேற்கொண்ட நேர்காணலை வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறோம்.

சந்திப்பு:
சிராஜ் மஷ்ஹூர், இன்ஸாப் ஸலாஹுத்தீன்

★ சமூக சேவையில் நீங்கள் அதிக ஈடுபாடு கொள்வதற்கான காரணத்தை அறிந்து கொள்ள முடியுமா?

இது அனுபவத்தின் அடியாகத் தோன்றிய ஒன்றாகும். வாழ்க்கையில் முன்னேறுவதற்கு நாம் அதிகம் கஷ்டப்பட்டோம். இப்பொழுதும் வாழ்க்கையில் கஷ்டப்படும் ஒருவரைக் காணும்போது நான் என்னை நிலைத்துக் கொள்கிறேன்.

நான் பட்ட கஷ்டத்தை இன்னொருவர் படக் கூடாது என நான் நினைக்கிறேன். சமூக சேவையில் ஈடுபட எனது அனுபவங்களே என்னைத் தூண்டின. சமூக சேவைக்காக பாடுபடும் இயக்கங்களுடன் பங்கெடுத்திருக்கிறேன். ஆனால் முழுப் பங்களிப்பு செய்திருப்பதாகக் கூற முடியாது. என்னால் முடியுமான பங்களிப்புகளை செய்து கொண்டிருக்கிறேன்.

★ நீங்கள் ஏன் அரசியலுக்குள் வந்தீர்கள்? MULF உடனான அனுபவங்களைப் பகிர முடியுமா?

நான் அரசியலுக்குள் போய்ச் சேர்ந்ததை ஒரு விபத்தாகத்தான் பார்க்கிறேன். முஸ்லிம் அரசியலினூடாக சமூகத்திற்கு ஏதாவது செய்ய முடியுமாக இருக்கும் என்றுதான் அரசியலில் நுழைந்தேன். ஆனால் போய்ப் பார்த்த பிறகுதான் அதுவும் வெறுமனே ஒரு சிலரின் அரசியல் அபிலாஷைகளுக்கு இடம்கொடுக்கும் அரசியல் கட்சி என்பது புரிந்தது.

இருந்தாலும் சமூகத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய பொறிமுறைகளை உருவாக்க வேண்டும் என நினைப்பவர்களை நான் அங்கும் கண்டேன். ஆனால், அவர்களுக்கென்று அரசியல் இலக்குகள் ஏதுவும் இல்லை. அத்தோடு கட்சிக்கு வந்த இஸ்லாமிய அடிப்படைகளும் இருக்கவில்லை.

சமூகத்தில் இருக்கின்ற பிரச்சினைகளை வைத்துக் கொண்டு தங்களால் நின்று பிடிக்க முடியும் என்று முன்வந்த ஒரு அரசியல் கட்சியாகத்தான் நான் அதனையும் காண்கிறேன். நான் அந்தக் கட்சியைக் குறை சொல்லவில்லை. அதனை ஆரம்பித்தவர்கள் நல்ல நோக்கத்திற்காக ஆரம்பித்திருக்கலாம். ஆனால், அதனை வழிநடத்துவதிலும் இயக்க அடைவதிலும் சரியான திட்டமிடல் இருக்கவில்லை. எனவே அத்தகைய ஒரு அரசியலில் இருப்பதனை விட ஒதுங்கியிருப்பது சிறந்ததாகத் தெரிந்தது.

★ முஸ்லிம் தகவல் நிலையத்துடனான (MIC) உங்களது அனுபவம் பற்றி...

நீங்கள் நினைப்பது மாஜிர் பாரிய பங்களிப்புக்களை என்னால் MICக்கு ஆற்ற முடியவில்லை. சமூகத்திற்கு எதையாவது செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் சந்தர்ப்பம் கிடைக்கும் இடங்களுக்கு நான் சென்வேன். MICயில் நானும் ஒரு உறுப்பினராக இருந்தேன். அப்படி ஒரு தகவல் நிலையத்தின் தேவைப்பாட்டை என்னால் உணர முடியுமாக இருந்தது. அதனை நடத்திக் கொண்டு போவதில் என்னிடம் பூரண ஆதரவு இருக்கிறது.

★ முஸ்லிம் தனியார் சட்டத்தின் திருத்தம் பற்றிச் சொல்ல முடியுமா?

முஸ்லிம் தனியார் சட்டத்தில் மாற்றங்கள் வர வேண்டும் என்ற அடிப்படையில் முஸ்லிம் தனியார் சட்டத்தில் குறிப்பாக விவாக, விவாகரத்து சட்டங்களில் சில திருத்தங்களுக்கான ஒரு குழு உச்ச நீதிமன்ற நீதியரசர் ஸலீம் மர்ஸூபின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரைகள் கலந்தாலோசிக்கப்பட்டு ஆரம்ப ஆவணம் தயாரிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றது. அது கூடிய சீக்கிரம் சமர்ப்பிக்கப்படும் என நினைக்கிறேன். ஆரம்பத்தில் இருந்த சட்டத்தில் சில குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் அளவிற்கு இதில் திருத்தங்கள் வர வேண்டும் என்பதுதான் அவர்களுடைய அவாவாக இருக்கின்றது.

★ நீங்கள் சமூகத்துடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்ற ஏனைய விடயங்கள்....

நான் பிரதானமாகச் சொல்ல விரும்புவது முஸ்லிம் சமூகத்தில் ஊடகத்தின் பங்களிப்பு தற்பொழுது இருப்பதனை விட கூடுதலாக இருக்க வேண்டும். ஏனெனில், புத்திஜீவிகளோ, பெற்றார்களோ ஆசிரியர்களோ சமூகத்தை வழிநடத்துவதில் தம்முடைய உரிய பங்களிப்பைச் செய்யாமல் இருக்கிறார்கள். இதனை நெறிப்படுத்துவதில், வழிநடாத்துவதில் முஸ்லிம் மீடியாவுக்கு அதிகமிக்க பங்கிருப்பதாக நான் நினைக்கிறேன். முஸ்லிம் சமூகத்தின் எல்லாப் பகுதிகளையும் நெறிப்படுத்தும் சக்தி ஊடகத்திற்கு இருக்கின்றது.

அறிஞர் சித்திலெப்பை கல்வி மறுமலர்ச்சிக்கு பாவித்த பத்திரிகை எனும் ஆயுதத்தை நாம் இன்னும் பாவிக்கலாம். அது இன்னும் கூர்மையாக இந்தக் காலத்தில் பாவிக்கப்படலாம். சமூக மறுமலர்ச்சி ஆரம்பிப்பதாக இருந்தால் அது மீடியாவிலிருந்துதான் ஆரம்பிக்க வேண்டும்.

எமது சமூகத்தினர் ஏனைய சமூகத்தவர்களைப் போன்றவர்களல்லர். அவர்கள் உழைத்து விட்டு மாலையில் வீடு செல்லும்போது ஒரு பத்திரிகை வாங்கிச் செல்வார்கள். ஆனால், எம்மவர்கள் Short Eats வாங்கிச் செல்லும் மனநிலையில் உள்ளவர்கள். அந்த மனப்பக்குவத்தை நீக்குவதற்கு நீண்ட உழைப்பு தேவை. மக்கள் மத்தியில் உரையாடல்கள் நிகழ்த்தப்பட வேண்டும். அது நீண்ட காலத்தில் மக்கள் மத்தியில் கருத்துப் புரட்சியொன்றை ஏற்படுத்த வழிவகுக்கும்.

இன்று மக்களின் சிந்தனை வெகுவாக மாறியிருக்கின்றது. அவர்கள் நிறைய உழைக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார்களே தவிர, சமூகத்திற்கான, அடுத்த மனிதனுக்கான தங்களுடைய கடமைகளைப் பற்றி யோசிக்கிறார்கள் இல்லை.

ஆனால், நூறு வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் தாம் உழைத்த சொத்துகளை பள்ளிவாசலுக்கு, மத்ரஸாவுக்கு, கல்விக் கூடங்களுக்கு என அர்ப்பணித்தார்கள். ஆனால் அவை இன்று சரியான முறையில் பரிபாலிக்கப்படுவதில்லை என்பதும் சொல்லப்பட வேண்டிய ஒரு உண்மையாகும்.

எனவே முஸ்லிம் ஊடகம் சமூகத்தில் ஒவ்வொரு பெயரால் நடைபெறுகின்ற அநியாயங்களை, அட்டூழியங்களை எடுத்துக் காட்ட தைரியத்துடன் முன்வர வேண்டும்.

மேலும் எள்ளைப் பொறுத்தவரை கல்வியும் ஊடகமும்தான் நாம் முக்கியமாக முதன்மைப் படுத்திக் கவனிக்க வேண்டிய இரண்டு அம்சங்களாகும். ஏனெனில், நாம் எங்கு இருக்கிறோம்? எம்மைச் சுற்றியுள்ள பிரச்சினைகள் என்ன? என்பதனை மக்கள் உணராமல் இருக்கிறார்கள். எனவே சமூகத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற பிரச்சினைகள் வெளிக்காட்டப்பட வேண்டும்.

இஸ்லாமிய உணர்வும் சமூக உணர்வும் ஒரு சேரப் பெற்றவர்கள் இந்த சமூகத்திற்கு அதிகம் தேவைப்படுகிறார்கள். ஏனெனில், சமூகத்தின் தலைமைத்துவ இடைவெளி இன்னும் நிரப்பப்படவில்லை.

எமது சமூகத்தினர் ஏனைய சமூகத்தவர்களைப் போன்றவர்களல்லர். அவர்கள் உழைத்து விட்டு மாலையில் வீடு செல்லும்போது ஒரு பத்திரிகை வாங்கிச் செல்வார்கள். ஆனால், எம்மவர்கள் Short Eats வாங்கிச் செல்லும் மனநிலையில் உள்ளவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

வடபுல முஸ்லிம்களின் அகதி வாழ்க்கைக்கு 21 வயது

வடபுல முஸ்லிம்கள் தமது தாயக மண்ணிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளால் பலவந்தமாக விரட்டப்பட்டு கடந்த ஒக்டோபர் மாதத்துடன் 21 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

எந்தவொரு நியாயமுமின்றி தமது வாழ்விடங்களை விட்டும் விரட்டப்பட்ட வடக்கின் அப்பாவி முஸ்லிம்களது இந்த 21 வருடகால வாழ்வானது மிகுந்த காயம் நிறைந்தது, வலியை ஏற்படுத்துவது. அவர்கள்பட்ட துன்பங்கள் எழுத்தில் வடிக்க முடியாதவை. இன்றுவரையும் அவர்களது அகதி வாழ்வின் அவலம் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது.

பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மண்ணைவிட்டும் வேரோடு பிடுங்கி எறிதல் என்பது மிகுந்த வலியை உண்டுபண்ணக் கூடியது. துப்பாக்கி ஏந்திய பாசிஸப் புலிகளின் மிரட்டல்களுக்கு முன்னே எதுவுமே செய்ய முடியாத அப்பாவி முஸ்லிம்கள், வெறும் 48 மணி நேரங்களுக்குள்ளால் தமது தாயகத்தைவிட்டும் துரத்தப்பட்டு நாதியற்றவர்களாக ஆக்கப்பட்ட அந்தக் கயமைத் தனத்தை எந்த வார்த்தைகளாலும் நியாயப்படுத்திவிட முடியாது.

அகதிகளாக்கப்பட்ட முஸ்லிம்கள் மீண்டும் தமது சொந்த மண்ணில் மீள்குடியேற்றப்பட வேண்டும் என்று பல்வேறு தரப்பினராலும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இந்நிலையில் யுத்தத்தின் பின் மீள்குடியேறி வரும் முஸ்லிம்களுக்கு ஒருசில அரச சார்பற்ற முஸ்லிம் நிறுவனங்கள் தம்மாலான சேவைகளை மேற்கொண்டு வருகின்றன. எனினும், இவை போதுமானதாய் இல்லை என்று பலராலும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் முடிவடைந்து இரண்டரை வருடங்கள் கடந்தும் இன்னும் அரசாங்கத்தினால் வடபுல முஸ்லிம்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களின் மீள்குடியேற்றம் சரிவர நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு காலகட்டத்தில் அரச தரப்பினரும், அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்களும் இருக்கிறார்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இது விடயத்தில் கூடுதல் அக்கறை கொள்ள வேண்டிய ஒரு கடப்பாடும் அவர்களுக்கு இருக்கிறது.

தமது பொருளாதாரம், வாழ்விடம் எல்லாவற்றையும் இழந்து பூச்சியத்திலிருந்து தமது அகதி வாழ்வை ஆரம்பித்த வடபுல முஸ்லிம்கள் மீண்டும் தமது சொந்த மண்ணில் அதே பூச்சியத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டிய

துர்ப்பாக்கிய நிலையிலுள்ளனர். மீள்குடியேறும் பலர் எத்தரப்பினரதும் ஒத்துழைப்பின்றி, அடிப்படை வசதிகள்கூட நிவர்த்திக்கப்படாத நிலையில் தமது சுய விருப்பின் பெயரிலேயே குடியேறி வருகின்றனர்.

இந்த 21 வருட நிறைவிலேனும் அரசும், சிவில் சமூக நிறுவனங்களும் வடபுல முஸ்லிம்களது மீள்குடியேற்ற நடவடிக்கையில் முனைப்புக் காட்ட வேண்டும். வெளியேற்றத்தின் 22வது ஆண்டிலேனும் தமது வாழ்வில் ஒளியேற்படும் என்ற அதிகபட்ச எதிர்பார்ப்புகளோடு அவர்கள் காத்திருக் கிறார்கள். அவர்களது இருண்ட வாழ்வில் ஒளியேற்றுவது எம் அனைவரினதும் சமூகக் கடமை என்பதை நினைவிற் கொள் வோம்.

கவிஞர் யாழ். அஸீம் வடமாகாண ஆளுநர் விருது பெற்றார்

மன்னாரில் நடைபெற்ற வடமாகாண தமிழ் இலக்கியப் பெருவிழாவில் கவிஞர், கலாபூஷணம் அப்துல் காதர் அஸீம் (யாழ். அஸீம்) பல்துறை கலைஞருக்கான ஆளுநர் விருதை வடமாகாண ஆளுநர் சந்திரசிறி மற்றும அமைச்சர் றிசாத் பதியுதீன் ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

கலை இலக்கியத் துறையில் தடம்பதித்தவர்களுக்காக வழங்கப்படும் வடமாகாணத்தின் உயர் விருதான ஆளுநர் விருதை பெற்ற பன்னிரண்டு கலைஞர்களுள் ஒரேயொரு முஸ்லிம் இவர் என்பதோடு, யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஆளுநர் விருது பெறும் முதலாவது முஸ்லிம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியரும் பொதுசனத் தொடர்புத் துறை டிப்ளோமாப் பட்டம் பெற்றவருமான இவர், கலாபூஷணம், கவிச்சுடர், வடபுல முஸ்லிம் சான்றோர் விருது, அகஸ்தியர் விருது, சிறந்த சிறுகதைக்காக தகவம் (தமிழ்க் கதைஞர் வட்டம்) விருது, இனங்களையும் தேசத்தையும் கட்டியெழுப்பும் கேந்திர நிலையத்தின் சமாதான எழுத்துக்கான விருது போன்ற பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

அத்துடன் இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தால் நடத்தப்பட்ட விமர்சன விருது விழாவில், தமிழ்ச் சேவையால் முதலாம் இடத்திற்கான விமர்சன விருதை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவிடமிருந்து பெற்றுக் கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கவிதை, கட்டுரை, சிறுகதை, விமர்சனம் என பல்வேறு துறைகளிலும் முத்திரை பதித்த யாழ். அஸீம் வானொலி, தொலைக்காட்சி போன்ற இலத்திரனியல் ஊடகங்களிலும், மேடைக் கவியரங்குகளிலும் தனது திறமையை வெளிப்படுத்தி வருகிறார்.

சிறுநீரக சத்திர சிகிச்சைக்கு நிதி உதவி கோரல்

மள்வானையைச் சேர்ந்த முஹம்மட் முனவ்வர் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைக்காக உதவி கோருகிறார்.

மள்வானை, ரகிஸ்பானையைச் சேர்ந்த இவர் சத்திர சிகிச்சைக்கான நிதியைப் பெறுவதில் கஷ்டங்களை எதிர்கொள்கிறார். சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ள இவருக்கு உடனடியாக சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளுமாறு இவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் ஆலோசனை கூறியுள்ளனர்.

எனினும், மருத்துவச் செலவுக்கு இவரது குடும்பத்தாருக்கு போதிய வசதி இன்மையால் புரோபகாரிகளிடமிருந்து உதவி வேண்டுகிறார். உதவி செய்ய விரும்புவோர், Commercial Bank, Biyagama Branch, A/C 8147011056 என்ற சேமிப்புக் கணக்கிற்கு தமது உதவிகளை வழங்குமாறு கோரப்படுகின்றனர்.

தொடர்புகளுக்கு:
0728 640429,
0728 640733

மேலதிக தொடர்புகளுக்கு:
இஸ்மத் ஹுஸைன்
0773 648484

காலாண்டு கவிதை இலக்கிய சஞ்சிகை 'பேனா'

கிண்ணியாவிலிருந்து வெளிவரும் சஞ்சிகையான பேனாவின் மூன்றாவது இதழ் தற்போது வெளிவந்திருக்கிறது.

"பேனா நேர்கோட்டில் பேசும்" எனும் மகுட வாசகத்தோடு கவிதைகளுக்கான சஞ்சிகையாக வெளிவரும் இவ்விதழில் இலங்கையின் கவிஞர்கள் பலரது கவிதைகளோடு சிறுகதைகள், இலக்கியப் பதிவுகள் மற்றும் நேர்காணல் என்பனவும் இடம் பெற்றுள்ளன.

உங்களது கவிதைகள், சிறுகதைகள் மற்றும் இலக்கியக் கட்டுரைகள் போன்வற்றை நீங்களும் பேனாவுக்கு எழுதியனுப்பலாம். உங்கள் ஆக்கங்களுக்கு பேனா களம் அமைக்கக் காத்திருக்கிறது.

தொடர்புகளுக்கு,
ஜே. பிரோஸ்கான்.
பேனா, உமர் (றழி) வீதி, மஹ்ரூப் நகர்,
கிண்ணியா - 03.
தொ.பேசி. 0773 300397

எகிப்திய பிரஜை என்று சொல்வதில் மகிழ்ச்சியடைகிறேன்

கொழும்பில் இமாம் பாழில் ஸுலைமான்

முன்பெல்லாம் எகிப்திய பிரஜை என்று சொல்வதற்கு அஞ்சுகின்ற நிலைமையே காணப்பட்டது. முபாரக்குடைய ஆட்சி அவ்வளவு தூரம் கொடூரமாக அமைந்திருந்தது. இப்போது, ஜனவரி 25 புரட்சிக்குப் பின்னர் எகிப்திய பிரஜை என்று சொல்வதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது என (பாலம் நிறுவனத்தின்) பணிப்பாளர் பாழில் ஸுலைமான் தெரிவித்தார்.

கடந்த வாரம் கொழும்பு வெள்ளவத்தை லில்லி அவெனியூவில் உள்ள சோனக இஸ்லாமிய கலாசார நிலைய கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற எகிப்திய புரட்சி தொடர்பான சிறப்புரையின்போதே இவ்வாறு குறிப்பிட்டார். இந்நிகழ்ச்சியை இஸ்லாமிய கற்கைகள் நிலையம் ஏற்பாடு செய்திருந்தது.

எகிப்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இமாம் பாழில் ஸுலைமான், தற்போது அமெரிக்காவில் வசிக்கிறார். அங்கு பல பள்ளிவாயல்களில் இமாமாக பணி புரிந்துள்ளார். அத்தோடு இஸ்லாமிய அறிஞர்களது சர்வதேச ஒன்றியத்திலும் அங்கம் வகிக்கிறார். அடிப்படையில் பொறியியலாளரான இவர், 2008ல் ஷரீஆ துறையில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் முன்னணி முஸ்லிம் அறிஞரான அப்துர் றஹ்மான அல்-அமூதி சிறை செல்வதற்கு கடாபியே காரணம். பல இஸ்லாமியவாதிகள் பாதிப்படைய கடாபி காரணமாய் அமைந்தார். அவர் பல சந்தர்ப்பங்களில் சியோனிஸ சக்திகளின் மறைமுக நிகழ்ச்சி நிரலுக்கு உதவுபவராகவே அமைந்தார். அவரது பல சதிகள் வெளியே தெரியவில்லை என விளக்கிக் கூறினார்.

எகிப்திய புரட்சியின்போது தஹ்ரீர் சதுக்கத்தில் நேரடியாகப் பங்கு பற்றியபோது எதிர்கொண்ட பல்வேறு அனுபவங்களை பார்வையாளர்களுடன் பகிர்ந்து கொண்டார். ஒரு கட்டத்தில் மக்கள் தளர்ச்சி அடைந்தபோது, ஷெய்க் யூஸுப் அல் கர்ளாவியை நேரடியாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு, மக்களை தொடர்ச்சியாக போராடத் தூண்டுமாறு வேண்டிக் கொண்டதாகவும் குறிப்பிட்டார். கர்ளாவி உடனடியாக அல்ஜெஸீரா தொலைக்காட்சியில் செய்தி ஒன்றை விடுத்ததாகவும், அவர் எகிப்திய புரட்சியை தூண்டிய பெரும் உந்து சக்திகளுள் ஒருவர் எனவும் குறிப்பிட்டார்.

எகிப்திய புரட்சியில் இராணுவத்தினர் அரசின் பக்கமும் நிற்காது மக்களின் பக்கமும் நிற்காது நடுநிலைப் போக்கைக் கைக்கொண்டனர். இப்போதுள்ள நிலையில் இராணுவத்தை முழுமையாக நம்பமுடியாதுள்ளது. அவர்கள் இஸ்லாமியவாதிகள் ஆட்சிக்கு வருவதை மனதார விரும்புபவர்கள் அல்ல எனவும் சுட்டிக் காட்டினார்.

(பக். 19)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானத்தின் நெருக்கடிகள்

பாடப் புத்தகம் பற்றிய கவனயீர்ப்பு

அறிவியலுக்கு எது நன்மை சோ அலை மனித குலத்திற்கும் நன்மையாகும். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இக்கூற்று நியாயமானதாகத் தெரிந்தது. மனிதர்போர் முடியும்வரை இக்கூற்றை யாரும் தவறு என்று கூடக் கருதவில்லை. மாறாக நாட்டின் பாதுகாப்பிற்கும் வளப் பெருக்கத்திற்கும் அறிவியலே தேவையானது என்று தேசிய அரசுகள் விஞ்ஞான ஆய்வு முயற்சிகளில் பெருமளவு பணத்தைச் செலவழித்து வந்தன.

அறிவியல் ஆய்வுக்காகவும் இராணுவத்துறை ஆர்வுகளுக்காகவும் பணம் செலவிடுவதற்கு எல்லை வகுக்கக் கூடாது என்று அமெரிக்கா போன்ற நாட்டின் புத்திஜீவிகள் கருத்து வெளியிட்டு வந்தனர். ஆனால், இன்று வளர்ந்துவரும் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மனித சமூகத்தின் நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் பல்வேறு பேரபாயங்களை உருவாக்கப் போகின்றது என்று பல அறிவியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கத் தொடங்கியுள்ளனர்.

நாம் தமது வாழ்வில் தாக்கத்தி லிருந்து எழும்புது முதல் உறங்கச் செல்லும் வரை விஞ்ஞானத்தின் பயன்பாடுகளை பெருமளவு அனுபவிக்கின்றோம். ஏன் நாம் தூங்குவதற்குக் கூட தொழில்நுட்பம் தேவைப்படுகின்றது. இந்நூற்றாண்டில் மனிதனின் வாழ்வை அவன் விரும்புவது போன்று ஆக்கிக் கொள்வதற்கும் தொடர்ட அதனை அனுபவிப்பதற்கும் விஞ்ஞானம் பெரும் சேவைகளைப் புரிந்திருக்கின்றது. இதனால் மனித வளர்வு வளம் கொண்டதாகவும் வசதிகள் நிறைந்ததாகவும் மாறியிருக்கின்றது. அறிவியல் இவ்வாறு மனித சமூகத்திற்குக் கொடுத்த அருட்கொடைகளும் அனுகூலங்களும் வார்த்தைகளால் மட்டிட முடியாதவை. அந்தளவிற்கு மனிதன் அவற்றின் மூலம் பயனடைந்திருக்கிறான்.

இன்று தாவரங்களைப் பிரதி யெடுக்கும் Cloning முறை மூலம் அதிக விளைச்சலைத் தரக்கூடிய தாவரங்களை மனிதன் உற்பத்தி செய்கின்றான். அதேபோன்று உறுப்பு மாற்றுச் சிகிச்சை, இதய சத்திர சிகிச்சை, Genetic Engineering System என்று விஞ்ஞானத்தின் மருத்துவத்துறைப் பயன்பாடுகள் பெருகி வருகின்றன. போக்குவரத்துத் துறையும் பாரியளவு முன்னேற்றங்கள் ஏற்பட்டு விட்டன. ஆடம்பரப் பொருட்களை உற்பத்தி செய்வதிலும் மனித வாழ்வில் தற்காலிக இன்பங்களைக் குவிப்பதிலும் விஞ்ஞானம் பெரியளவு சாதனைகளைக் கண்டுவிட்டது.

இவ்வாறு விஞ்ஞானத்தின் பயன்பாடுகளை நாம் எவ்விதத்திலும் குறைத்து மதிப்பிட முடியாது. தோமஸ் கூன் எழுதிய Structures of Scientific Revolution என்ற நூல் விஞ்ஞானத்தின் அனுகூலங்களை அறிவார்ந்த முறையில் எடுத்துக் காட்டுகின்ற அதேவேளை விஞ்ஞானம் இழைத்து வரும் மனித சமூகத்திற்கு எதிரான பாரிய குற்றங்களையும் இனங்காட்டுகின்றது. இன்று விஞ்ஞானம் ஊடுருவாத இடங்கள் இல்லையென்றே சொல்ல வேண்டும்.



குழந்தையொன்றைப் பெற் றெடுக்க முடியாத தம்பதிகளில் உள்ள தாய்மார்களுக்கு விஞ்ஞானம் தீர்வு சொல்லுகிறது. அதற்காக Test tube baby முறையை (பரிசோதனைக் குழாய் குழந்தை) கொண்டாகவும் வரலாம். குழந்தையொன்று தாயின் கருப்பையில் இருப்பதையும் அக்குழந்தை ஆணா பெண்ணா என்பது பற்றியும் அறிந்துகொள்ளும் முறை கூட இப்போது இலகுவாகப் பின்பற்றப்படுகின்றது. அதற்கு Amniocentesis முறை எனப் பெயர்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ஸ்கொட்லாந்தின் விஞ்ஞான கூட மொன்றில் ஒரு செம்மறியாடு தனது தாயைப் போலவே பிறந்தது. அதற்கு டொலி (Molly) என்று பெயர். இந்த செம்மறியாடு முட்டை, விந்து சேர்ந்து கருக்கட்டல் இன்றி தாயிலிருந்து மாத்திரம் பெற்ற ஒரு செம்மறியாடாகும். இதுவும் அறிவியலின் அனுகூலம் என்றே கருதப்படுகின்றது. குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்காக கைரேகை, குருதி, உரோமம் போன்றவற்றால் அடையாளம் காணும் முறையை விஞ்ஞானத்தில் பெறுபேறுகளில் ஒன்றே. இதுதவிர இன்று DNA finger printing முறையும் கையாளப்படுகின்றது.

விவசாயத்துறையில் Hybrization மூலம் தனக்கு வேண்டியபடி வேண்டியளவு இளப்பெருக்க உற்பத்தி மூலம் ருசியான கிழங்கு வகைகளையும் பழங்களையும் உருவாக்க முடிகின்றது. பசுமைப் புரட்சி (Green Revolution) பிறப்புரிமைப் புரட்சி (Genetic Revolution) இவைகொல்லாம் அறிவியல் நமக்களித்த மாபெரும் கொடைகளாகும். எனினும் விஞ்ஞானம் முறை கேடான பொறுப்பற்ற முறையில் செயற்படும்போது மனித சமூகம் பெரும் அழிவுகளுக்கும் அபாயங்களுக்கும் முகங்கொடுக்க நேரிடுகின்றது. நாம் வாழும் இக்காலத்தில் எவ்வளவுக்கு எவ்வளவு அறிவியலின் அனுகூலங்களை நாம் அனுபவிக்கின்றோமோ அதேயளவிற்கு அதனது ஆபத்துகளையும் ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றோம்.

கடந்த 50 வருடங்களாக விஞ்ஞானத் தொழில்நுட்பத்துறை ஆய்வுகளுக்கு தேசிய அரசாங்கங்கள் பெருமளவு நிதியைச் செலவு செய்து வருகின்றன. தற்போது தேசிய எல்லைகளிலும் நலன்களை மட்டும் கருத்திற் கொண்டு இவ்வகை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதால் சர்வதேச சமூகத்தின் நலன்களுக்கு குந்தகமான அறிவியல் முயற்சிகள் கூட ஆய்வுத் துறையில் அரங்கேறியது. தேசியப் பாதுகாப்பு என்ற பெயரில் நேரோப்பிய நாடுகளில் ஸ்தாபிக்கப்பட்ட அணுவாயுத உலைகள் உலகில் காபனீரொட்சைட்டின் அதிகரிப்பிற்குக் காரண மாகி ஓசோன் படையில் துளையிழும் அளவிற்கு நிலைமை மோசமாகியுள்ளது.

பயங்கர ஆயுதப்போர், போட்டித் நன்னாசாரள்ள அணுவாயுதப் பரிசோதனைகள், மருத்துவத்தால் பரிகாரம் காண முடியாத நோய்கள், தாருவப் பகுதிகளைக் கரைத்து உலகப் படத்திலிருந்து அவற்றை அழித்துவிடும் அளவிற்கு பூகோள வொப்பாரங்கள், எயிட்ஸ், தற்கொலை, மனவிரக்தி, வன்முறைகள், இனப்படுகொலைகள் என்று விஞ்ஞானத்தின் பிரதி கூலங்களும் மனித சமூகத்தைப் பெரும் அபாயத்தின் விளிம்பில் வைத்துக் கொண்டிருக்கின்றது.

கடந்த இரு தசாப்தங்களில் அறிவியல் ஆய்வு மனித சமூகத்திற்கு பயன் தரும் என்ற கருத்தில் மாற்றம் ஏற்பட்டு வருகின்றது. முதலாளித்துவ நோக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வுகள் சர்வதேச சமூகத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளன. போட்டித்தன்மைகளை அது உருவாக்கியது. மக்களுக்குப் பின்வரான ஜப்பானின் தகவல் தொழில்நுட்பம், மின்னணுவியல் முன்னேற்றத்தைக் கண்டு அமெரிக்கா பீதியடைந்தது. நுகர்வோர் சந்தைகளைப் பிடிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட தனியார்துறை ஆய்வு முயற்சிகள் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை உருவாக்கியது. அணுவாயுத உற்பத்திகளுக்கு வழிகோலியது.

ஆலிப் அனாம்

ஒவ்வொரு விடயத்திற்கும் அவற்றுக்கேயுரிய முக்கியமும் உள்ளதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதற்குரிய முக்கியத்துவத்தையும் மதிப்பையும் வழங்காதபோது நாம் அதில் இருந்து விடுதலை பெறுகின்றோம். குறிப்பிட்ட ஒரு விடயம் தொடர்ச்சியாக நாம் செலுத்தும் கவனத்திலிருந்து சற்றேனும் குறையும்போதும் அவை குறுகிப்போகின்றன. பெரும்பாலான மக்கள் முன்னிலைக்கு வந்து, பேராபாயம் கூடிய விடயங்கள் கூட மனிதர்களின் இயல்பான சமூக நலன்களுக்கு எதிரான வியாபாரமாகிக் கொண்டமைக்கான மிக அடிப்படை யான காரணி அதில் இதுவும் ஒன்றாகும். தொடர்ந்தும் இக்காரணியை நாம் இன்னும் கவனத்திற் கொள்ளாமல் உள்ளோம்.

நமது ஆயுள், ஆரோக்கியம், எமது ஆன்மீக வாழ்க்கை, சமூக வாழ்வு, அரசியல், பொருளாதாரம், வணக்கங்கள் ஆகிய ஒவ்வொரு முகுதெலும்புகளுடனும் விஞ்ஞானம் பெரும் வளைந்து கொடுத்து வருகின்றது. இதனால் நாம் எமது சுதந்திரத்தையும் இழந்து வருகின்றோம்.

சமூகத்தில் முதன்மைப்படுத்தப்பட வேண்டியது எது?

கலும் முக்கியத்துவங்களும் பல்வேறு தராதரங்களில் உள்ளன. இன்றைய குழப்பமான நிலைக்குக் காரணமாக பகுதியும் குழப்பமான நிலைக்குக் கள்ளப்பட்டு விடும்.

தோமஸ் மொரிஸ் என்னும் எழுத்தாளர் தனது பிரபல்யத்தைக் கொடுத்து தனது காலம் தொடர்பான இருவகை முரண்பாடுகளை முன்வைத்துள்ளார்.

இலட்சத்தைத் தொட்ட 40,000 முஸ்லிம் பெண்கள் சீதனம் கொடுத்தும் திருமணம் முடிப்பதற்காக வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பி வருகின்றனர். இலங்கையில் 10 முன்றக்கும் மேலான வர்த்தகர்கள் எவ்வளவோ சீதனத்தைக் கொடுத்தும் பெண்களை திருமணம் முடிக்க முடியாமல் இருக்கின்றனர்.

பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டு நிகழ்வுகளிலும் ஆரியர்களும் பற்றாக்குறையாக உள்ள நிலையில் மத்தியதர வர்க்கத்தினர் மேல் மத்தியதர வர்க்கத்தினரை உருவாக்கி விருதுகளைப் பெறுகின்றனர். பல்வேறு துறைகள் புறக்கணிக்கப்பட்டிருக்கும் நிலையில் எல்லாத் துறைகளிலும் விடயங்களுக்காக எல்லாரையும் பிடிக்கின்றோம்.

எமது கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டமும் இன்று முதல் மையால் அவனுக்கு வேறு வேலையுள்ளது. முன்னேற்றகரமான வளைவுகளைக் கொண்டிருக்கின்றன. ஆனால் அவை எவ்வளவு தூரம் சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்ப பாடத்தின் முதல் ஆரம்பமாகின்றதோ அவ்வளவு தூரம் குறியலறக்கு வேண்டிய நிலைமையை மாணவர்கள் எய்தியிருக்கின்றனர்.

இலங்கையில் மிகவும் பாதுகாக்கப்பட்ட பாடமாக விஞ்ஞானம் இருக்கின்றது. இதனால் விஞ்ஞானத்திற்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தின் அளவிற்கு ஏனைய பாடங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. இந்நிலைமை முஸ்லிம் மாணவர்களிடத்தில் இன்னும் மோசமாக இருக்கின்றது. இஸ்லாமிய அரசியல் சிந்தனை, இஸ்லாமிய வங்கி, நிதிசார்ந்த விடயங்கள், சமூகவியல், சமூகவியல் போன்ற பாடங்கள் அவர்களுக்கு அந்நியமாகவே இருக்கின்றன.

இன்னும் நான்காம் தரத்தில் தரமுயர்த்தப்பட்ட பாடப் புத்தகங்களோடுதான் கல்வி முன்னேறிக் கொண்டிருக்கின்றது.

அரசியலிலும் எது முன்னுரிமையானது என்பதை சமூகம் இன்னும் புரிந்துகொள்ளவில்லை. புரிய வைக்கப்படவுமில்லை. மதரஸாக்களும் பள்ளிவாசல்களும் மௌலவிமாரும் பெரும்பான்மை அளவிற்கு சமூகத்தின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. சமூகப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமைகள் எதுவென்பதிலும் தகவல்களிலும் இல்லை.

இலங்கை முஸ்லிம் அரசியல் வழிமுறைகளிலும் அவற்றை நிறுவனங்களும் அரசியல், பொருளாதாரம், கலாசாரம், கலவி, இல்லாமிய சட்டம், வணக்கம், சமூக உறவுகள் என்பவற்றின் முன்னுரிமைப்படுத்த வேண்டிய அடிப்படைகளை விடயங்கள் எவை என்பதை அடையாளப்படுத்த வேண்டியுள்ளது.

இன்று விஞ்ஞானம் இல்லாதபோது குறிப்பிடத்தக்க எவ்விதமான தாக்கத்தையும் சிந்தனைப் பரப்பிலோ முடியாமல் போய்விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் வரவேற்கிறோம்

இலங்கை முஸ்லிம்களின் மொழிப் பிரச்சினை எதிர்காலத்தில் சிக்கலை ஏற்படுத்துமா?

கலாபூஷணம்
எஸ்.ஐ. நாகூர்கனி

இலங்கை முஸ்லிம்களில் முதல் மொழி எது? தாய்மொழி எது? என்ற தலைப்பில் சகோதரர் சிராஜ் மஷ்ஹூர் கடந்த 07 ஒக்டோபர் 2011 'மீள்பார்வை'யில் பல விஷயங்களைத் தொட்டுக் காட்டியிருந்ததை வாசித்தோருள் நானும் ஒருவன். நீண்ட காலமாகவே சமுதாயப் பிரச்சினைகளை வாய்மொழியிலும், பத்திரிகைகளிலும், தொலைக்காட்சியிலும் தொட்டெழுதி வரும் வரிசையில், இலங்கைமுஸ்லிம்களின் மொழிப் பிரச்சினை தொடர்பாகவும் பல சந்தர்ப்பங்களில் எழுதி வந்தவன் என்ற கரிசனையில், எனது கருத்துகள் சிலவற்றை மீள்பார்வை வாசகர்களுக்கு பரிமாறிட விழைகின்றேன்.

நம் முஸ்லிம்களில் பெரும் பான்மையினர் தமிழையே தாய் மொழியாகவும், மார்க்க மொழி யாகவும், சமயப் பணிகளுக்கான மொழியாகவும் பேசியும், எழுதியும் பயன்படுத்தி வருகின்றனர். சிறுக சிறுக ஆரம்பித்து, இன்று கணிசமான முஸ்லிம் பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு சிங்களத்தைப் போதனா மொழியாகத் தெரிவுசெய்து கற்க வழிசெய்து வருகின்றனர். சமீப காலமாக நகர்ப்புறத்து முஸ்லிம்கள் தம் பிள்ளைகளை சர்வதேச ஆங்கிலப் பாடசாலைகளில் பெருந் தொகைப் பணம் செலுத்தி சேர்த்து வருகின்றனர்.

ஆக, நம் முஸ்லிம்கள் மூன்று மொழிகளில் தம் பிள்ளைகளை இன்று கற்க அனுமதித்துள்ளனர். இந்த மும்மொழி கல்வித் திட்டம் நம் முஸ்லிம் சமூகத்தை எதிர்காலத்தில் காக்குமா? தாக்குமா? தழைக்குமா? துண்டாடுமா? என்பது சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

நம் முஸ்லிம்கள் ஆழ்ந்து சிந்தித்து தூர நோக்கோடு -சமூதாய நலன் கருதி இம்மும்மொழி கல்விப் போதனைகளை தெரிவு செய்துள்ளார்களா? எனவோசித்தால், அதற்கான எந்த முதுகாந்திர மும் 'கையிருப்பில்' இருப்பதாகத் தென்படவில்லை. ஏதோ நம் பிள்ளைகள் பாடசாலை போவாற் போதும்; டாங் பீங் கென்று இங்கிலிஸ் பேசி வாற் களாவில் மிதப்பவர் களாகவே பலர் இருக் கின்றனர். இத்தகைய

மனப் பாங்கு ஆரோக்கியமானதா? சாத்தியபூர்வமானதா? சரிபட்டு வரக்கூடியதா? என்ற வினாக்கள் தனிமனிதனுக்குரியதல்ல; தனித் துவமான நம் சமூகம் எண்ணிப் பார்த்து எடை போட வேண்டிய வையாகும்.

எந்த மொழிக்கும் ஒரு கலாசாரப் பின்னணி இருக்கவே செய்யும். இதையெல்லாம் உத்தேசித்தே நம் முன்னோர்கள் 'ஆங்கிலத்தில் படிப்பது ஹராம்; சிங்களத்தில் படிப்பது ஹராம்' போன்ற உணர்வுகளை வெளிப் படுத்தினர். 1956 இல் தனிச் சிங்கள சட்டம் கொண்டுவரப் பட்டபோது, நம் நாட்டின் அப்போதைய இடதுசாரி தலைவர்கள் "மொழி ஒன்றாவால் நாடு இரண்டுபடும்; மொழி இரண்டானால் நாடு ஒன்றாக இருக்கும்" என்றனர். இது கூட கலாசார விழுமியங்களைத் தொட்டு எழுந்த கருத்தேயாகும்.

கடந்த மூன்று தசாப்த காலமாக நம் நாட்டை சின்னாப் பின்னப்படுத்தி வந்த சண்டைகள் -விடுதலை இயக்கப் போராட்டங்கள் போன்றவற்றின் அடி நாதம், மொழியினால் ஏற்பட்ட சமாச்சாரம்தான் என்பதை ஆழ்ந்து சிந்திப்போர் எளிதிற் புரிந்து கொள்வர்.

பாகிஸ்தான் என்ற புதிய இஸ்லாமிய நாடு இந்தியாவிலிருந்து பிரிந்துவிட்டது. பாகிஸ்தான் என்ற பொதுப் பெயர், மேற்கு பாகிஸ்தானையும், கிழக்கு பாகிஸ் தானையும் ஒன்றிணைத்த சொல்லாகும். தம் நாட்டிலிருந்து ஒரு பகுதி பிரிந்து போய் விட்டதே என்ற விரக்தியில் பாரத சமூகம் துயருற்றிருந்தபோது, அந்த சமூகத்தை ஆறுதல் படுத்த இந்தியாவின் முதல் முஸ்லிம் ஜனாதிபதியான ராஜேந்திர பிரசாத் என்ன சொன்னார் தெரியுமா?

"கவலைப்படாதீர்கள். இஸ்லாம் என்ற சமயத்தின் கீழ் பாகிஸ்தான் ஒரே நாடு என்றாலும், மொழியால் தாக்குப்பிடிக்க முடியாமற் போகும்" என்றார். மேற்கு பாகிஸ்தானில் உர்தூ மொழியும், கிழக்கு பாகிஸ்தானில் வங்க மொழியும் தாய்மொழி களாகப் பேசப்பட்டன. திருமதி இந்திரா காந்தி இந்தியாவின் பிரதமராக இருந்தபோது, பாகிஸ் தான், இரண்டாகப் பிரிந்து, மேற்குப் பகுதி பாகிஸ்தானாகவும், கிழக்கு பாகிஸ்தானாக விளங்கிய பகுதி பங்களாதேஷாகவும் பிரிந்து விட்டதைக் கண்டோம்.

மேற்கண்ட உதாரணங்கள் உணர்த்தும் உண்மை என்ன? எல்லா மொழிகளுக்கும் பின்புல மாகத் திகழும் குறிப்பிட்ட கலாசாரப் பின்னணி அம்மொழி பேசும் மனிதர்களை அணைத்துப் பிடித்துக் கொள்ளும் என்ப தன்றோ அந்த உண்மை?

சிங்கள மொழிக்கு பௌத்த கலாசாரப் பின்னணியிருப்பதை நாமறிவோம். சிங்கள மொழி மூலம் கல்வி பயிலும் முஸ்லிம் மாணவர்களுக்கு இஸ்லாம் பாடம் போதிக்க ஆசிரியர்கள் இல்லாமையினால், அநேக முஸ்லிம் மாணவர்கள் சமயப் பாடத்திற்கு பௌத்த மதத்தைப் பயின்று, பரீட்சைக்குத் தோற்றுவதை காண்கின்றோம். சமீபத்தில் மேடைக்குப் பரிசெடுக்கச் சென்ற ஒரு முஸ்லிம்மாணவன், அதிபரில் காலில் விழுந்து கும்பிட்டு பரிசு வாங்கியதைத் தினசரி யொன்று செய்தியாக வெளியிட் டதை நினைத்துப் பார்ப்போமாக!

ஆங்கிலத்திற்கு மேலாட்டுக் கலாசாரம் பின்னணியில் இருப் பதை நாமறிவோம். ஓரளவு ஆங்கிலம் பயின்ற முஸ்லிம் மாணவியருள் பலர், 'பெஷன்' என்ற போர்வையில் நவநாகரீக நங்கைகளாக உலா வருவதை மறக்க முடியாது. ஆங்கிலம் படித்த முஸ்லிம் மாணவர்களில் பலர் காது குத்தி, குதிரை வால் கொண்டை வளர்த்து விநோ வலம் வருவதையும் கண்டு களித்திருக் கின்றோம்.

இதற்குக் காரணம், இஸ்லா மிய சிந்தனைகளை உள்ளடக் கிய நூல்கள் சிங்களத்தில் இருந் தும், 1998ல் தனிச் சிங்கள சட்டம் நடைமுறைக்கு வந்ததையடுத்து, ஆங்கிலக் கல்வி தொய்வடைந்து போனமையினால் கிடைக்காமை யும் ஆகும். பல வந்திடப் பத்தும் பறந்துபோகும் என்ற பழமொழிக் கொப்ப, அறிவுப் பசிக்கு உரிய -ஹலாலான இஸ்லாமிய உணவு கிடைக்காமையால், எதையாவது சாப்பிட்டு பசியாற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது.

தமிழுக்கு இந்து சமயப் பின்னணி உண்டல்லவா? இந்த இந்து சமயப் பின்னணி, தமிழ் மொழி மூலம் பயிலும் முஸ்லிம் மாணவர்களை தம் பக்கம் திருப்ப முடியாதபடி, இஸ்லாமிய இலக்கியங்கள் தமிழில் தாராளமாகவும் ஏராளமாகவும் இருப்பதால், அத்தளவிற்கு முஸ்லிம் புலவர்கள்- அறிஞர்கள் தமிழில் படைத்து பணிசெய்திருப்பதால் தமிழில் பயிலும் முஸ்லிம்கள் தனித்துவம் இழக்காமல் உள்ளனர்.

நம் நாட்டுப் பேரறிஞர் மர்ஹூம் அல்லாமா ம.மு. உவைஸ், தமிழ்நாடு, மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் முன்னாள் தமிழக முதலமைச்சர் மறைந்த எம்.ஜி. இராமச் சந்திரனால் உருவாக்கப்பட்ட இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திற்கான பீடத்தின் முதல் பீடாதிபதியாக நியமிக்கப்பட்டதை அடுத்து மேற்கொண்ட ஆய்வின்படி சுமார் கிறம் வரையிலான இஸ்லாமியத் தமிழிலக்கியங்களைப் படைத் துள்ளனர் என்ற சாதனையை நிலைநிறுத்திச் சென்றார்.

கடந்த ஜூலை 8,9,10 ஆகிய மூன்தினங்களாக சிறப்புற நடை பெற்ற காயல்பட்டின 15ஆவது இஸ்லாமியத் தமிழிலக்கிய மாநாட் டில் இஸ்லாமியர்களின் தமிழிலக்கியத் தொண்டு, சராசரித்திற் கும் மேலானது என்பதை உறுதி செய்துள்ளனர். (பக்.19)

கடாபியின் மரணம்! இஸ்லாமிய அறிஞர்கள் மத்தியில் மாறுபட்ட கருத்துக்கள்

கடாபியின் இறந்த உடலை அடக்கம் செய்வதில் ஏற்பட்ட தாமதம் இஸ்லாமிய அறிஞர்கள் மத்தியில் மாறுபட்ட கருத்துக் களைத் தோற்றுவித்துள்ளது. சிலர் இதனை இஸ்லாமிய போதனைகளை மீறும் செயல் எனப்பார்க்கும் அதேநேரம், இன்னும் சிலர் கடாபி ஒரு காபிர் எனத் தெரிவித்துள்ளனர்.

எந்த ஒரு மனிதனுடைய இறந்த உடலையும் உதாசீனப்படுத்துவதை இஸ்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை என எகிப்பது அல்-அஸ்ஹர் ஆய்வு நிலையத்தைச் சேர்ந்த அஷ்-ஷெய்க் மஹ்மூத் ஆஷுர் தெரிவித்துள்ளார்.

கடாபி மரணமடைந்து நான்கு நாட்கள் கடந்த நிலையில் அடக்கம் செய்யப்படாத அவரது உடலை பலரும் சென்று பார்வை யிட்டு வந்தனர். தமது கையடக்கத்தொலை பேசி மூலம் படம்பிடித்தும், வீடியோ செய்துமுள்ளனர். புரட்சிப் படையைச் சேர்ந்தவர்கள் மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்ட தையும் வீடியோக்கள் மூலம் காணக்கூடியதாக இருந்தது.

ஒரு இறந்த உடலைச் சுற்றி நிகழும் இத்தகைய கொண்டாட்டங்கள் இஸ்லாமிய போதனைகளுக்கு முரண்பட்டதாகும். இறந்த உடலுக்குக் கொடுக்க வேண்டிய கௌரவத்தைக் கொடுப்பது அவசியமாகும் என அஷ்-ஷெய்க் மஹ்மூத் ஆஷுர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் கடாபியின் மரணம் தொடர்பாக லிபியாவின் பிரதம முப்தி அஷ்-ஷெய்க் சாதிக் அல்-கர்யானி விடுத்தியாசமானகருத்தைத் தெரிவித்துள்ளார். கடாபி ஒரு காபிர் என்றும் அவருக்கு ஜனாஸா தொழுகை நடத்தப்படக் கூடாது என்றும் அவர் தெரிவித்திருந்தார். கடாபிக்கு தொழுகை நடத்தாதிருப்பதற்கு போதுமான காரணங்கள் உள்ளன. எனவே, இவ்வாறான ஏனைய ஆட்சியாளர்களுக்கு இது பாடமாக அமைய வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடாபி ஒரு காபிர் எனத் தெரிவித்திருக்கும் முப்தி அல்-கர்யானி முஸ்லிம் பொதுமக்களோ, முஸ்லிம் அறிஞர்களோ அல்லது பள்ளிவாசல் களோ இவருக்காகத் தொழுகை நடத்துவது இஸ்லாமிய சட்டங்களுக்கு எதிரானது என்றும் குறிப்பிட்டுள்ளார். அதனைச் செய்வதாயின் அவரது குடும்பத்தினர் மட்டுமே செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மறைந்த முன்னாள் லிபிய ஜனாதிபதி கடாபி அவருடைய ஆட்சிக் காலத்தில் இஸ்லாமிய ஷரீஆ சட்டங்களுக்கு எதிராக செயற்பட்டு வந்தார். ஆயிரக்கணக்கானவர்களை படுகொலை செய்தார். அவரது கொல்லும் செயலும் அவர் ஒரு முஸ்லிம் இல்லை எனபதையே காட்டிக் காட்டுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்லாத்தையும் இஸ்லாமிய கிளைகளையும் மிக மோசமாக விமர்சித்தும் மறுத்தும் வந்த கடாபி ஒரு முர்தத் எனவும் 30 ஆண்டுகளுக்கு முன்னரே சவூதியைச் சேர்ந்த உலமாக்கள் பத்வா வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை
சர்வதேசப் பார்வை
எல்லைகளுக்கு அப்பால்...
01 நவம்பர் 2011 வெள்ளிக்கிழமை

லிபியா, தூனிசியா, எகிப்தை உள்ளடக்கிய இஸ்லாமியக் கூட்டமைப்பு

ஷெய்க் கர்ளாவி ஆலோசனை

புகழ்பெற்ற இஸ்லாமிய பிரச்சாரகரும் சர்வதேச முஸ்லிம் அறிஞர்கள் ஒன்றியத்தின் தலைவருமான ஷெய்க் யூஸுப் அல் கர்ளாவி இஸ்லாமிய ஜனநாயக கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துமாறு அழைப்பு விடுத்துள்ளார். லிபியா, தூனிஸியா, எகிப்து ஆகிய நாடுகளை ஒன்றிணைத்து இதனை ஆரம்பிக்குமாறு அவர் வலியுறுத்தினார். கட்டாரில் இடம்பெற்ற ஞத்பாப் பிரசங்கத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் தொடர்ந்து பேசுகையில் கடாபி பூமியில் அட்டூழியம் புரிந்தார், கொலை செய்தார், மக்களை விரட்டியடித்தார், ஆயிரக் கணக்கானவர்களை காயப்படுத்தினார், அபூ ஸலீம் சிறைக் கைதிகள் 1200 பேரை ஏதும் நடக்காதது போன்று ஒரே இரவில் கொலை செய்தார். இன்றைய தினம் அல்லாஹ்வின் நாட்களில் ஒரு நாளாகும். தனக்கு தெய்வீக சக்தி உண்டு என்ற நினைப்பில் அரக்கத்தனம் புரிந்து கொண்டிருந்த ஒருவர் வீழ்ந்துபோன நாள் இது. கடாபி குறித்து நான் எதிர்வு கூறியபோது சொன்ன முதல் வார்த்தை கடாபி மக்களால் கொல்லப்படுவார் என்பதுதான். கடாபி தலைவராகவும், தத்துவ ஆசிரியராகவும் இருக்க விரும்பினார். தனக்கு ஒரு நூல் இருக்க வேண்டும் என விரும்பி பசுமை நூலை எழுதினார். இப்பொழுது எல்லாம் முடிந்துவிட்டது.

இதேபோல்தான் வரலாற்று ஆதாரங்களை வைத்து உறுதியாகச் சொல்கிறேன் - சிரியாவின் பஷர் அல் அஸதிற்கும் யெமனின் அலி அப்துல்லாஹ் ஸாலிஹிற்கும் கடாபிக்கு நேர்ந்த இதே கதிதான் நடக்கும்.

கடாபிக்குப் பின்னரான காலப் பகுதி குறித்துப் பேசும்போது, லிபிய மக்கள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட வேண்டும் என்றும் முன்னைய ஆட்சிக்கு ஒத்துழைத்தவர்களை பழிதீர்க்க வேண்டாம் என்றும் அவர் வலியுறுத்தினார். லிபிய அரசு அவர்கள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்க வேண்டும் எனவும் கர்ளாவி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இறுதியாக லிபியா, தூனிஸியா, எகிப்தை உள்ளடக்கிய பிராந்திய கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற தனது ஆவலையும் வெளிப்படுத்தினார். ஒன்றுக்கொன்று தொடர்புள்ள இப்புரட்சித் தேசங்கள் தமக்கிடையில் ஒன்றிணைவதற்கான வாய்ப்புகளை அவசியம் ஏற்படுத்த வேண்டும்.

புரட்சிக்குப் பின்னர் விடுதலை பெற்றுள்ள நாடுகளிலுள்ள விகவாகிகள் தமக்கிடையில் ஏன் ஒன்றிணையக் கூடாது என்ற தனது அபிலாஷையையும் அவர் அதில் வெளிப்படுத்தினார்.

ஜோர்தான்: அரசியல் சீர்திருத்தத்திற்கான இறுதிச் சந்தர்ப்பம்

ஜோர்தான் மன்னர் 2ஆம் அப்துல்லாஹ் அல்ல் கஷௌனி தலைமையிலான புதிய அமைச்சரவை ஒன்றை பிரகடனம் செய்துள்ளார். ஜோர்தானில் அரசியல் சீர்திருத்தம் மேற்கொள்வதற்கான அப்துல்லாஹ்வின் இறுதி முயற்சி இது என அவதானிகள் தெரிவிக்கின்றனர். 30 அமைச்சர்களைக் கொண்ட புதிய அமைச்சரவைக்கு தலைமை வகிக்கும் பிரதமர் கஷௌனி சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதிகளுள் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜோர்தானின் அரசியல் வரலாற்றில் மிகவும் நெருக்கடியான இக்கால கட்டத்தில் அரசியல் சீர்திருத்தத்தை முன்னெடுக்க வேண்டும் என புதிய பிரதமர் கருத்து வெளியிட்டுள்ளார். இது குறித்து அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள பேற்றா செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்கம் அனைத்து அரசியல் சக்திகளோடும் சிவில் சமூகக் குழுக்களுடனும் இணைந்து ஜனநாயகம், நீதி, வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை உறுதி செய்கின்ற புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்கும் என கஷவ்னி மன்னர் அப்துல்லாஹ்வுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். புதிய அமைச்சரவையில் 35 புதிய முகங்கள் இடம்பெற்றுள்ளன. முன்னாள் மத்திய வங்கி ஆளுனர் நிதியமைச்சராகவும், முஹம்மத் ரஹத் உள்விவகார அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளதோடு, உயர் கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர்களாக இரு பெண்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

பிரதான எதிர்க்கட்சியான இஸ்லாமிய செயல் முன்னணி கஷவ்னியின் அமைச்சரவையில் இணைவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும், அப்துல்லாஹ்வின் புதிய முயற்சி ஜோர்தானின் சிவில் சமூகத்திற்கு திருப்தியளிப்பதாய் இல்லை என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இச்சந்தர்ப்பத்தில் அரசாங்கம் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்குத் தவறும்பட்சத்தில் முழுமொத்த அரசாங்கமும் தோல்வி கண்டுவிட்டதாகவே கருதப்பட வேண்டும் என அறப் அல் யவ்ம் பத்திரிகையின் ஆசிரியர் பஹீத் பைத்தான் கூறுகிறார். கஷௌனியின் அரசாங்கம் சீர்திருத்தத்திற்கான கடைசிச் சந்தர்ப்பம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜோர்தானில் புரட்சி வெடித்ததை அடுத்து மறூப் பாகித் என்பவரை அப்துல்லாஹ் பிரதமராக நியமித்திருந்தார். தற்போது அவரது இடத்திற்கு கஷவ்னி நியமனம் பெற்றுள்ளார். நாட்டில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைக் குறைப்பதற்கும் சீர்திருத்தத்தை ஆரம்பிப்பதற்கும் இன்னும் மூன்று வாரங்களே அதிகபட்ச காலக்கெடு என திட்ட ஆய்வுகளுக்கான ஜோர்தான் நிறுவனத்தின் ஆய்வாளர் முஹம்மத் மஸ்ரி கூறியுள்ளார்.

தற்போது நியமிக்கப்பட்டுள்ள புதிய பிரதமர் இவ்வாண்டில் அப்துல்லாஹ்வினால் நியமிக்கப்பட்டுள்ள மூன்றாவது பிரதமர் என்பது குறிப்பிடத்தக்கது.

யூரோ மண்டல கடன் நெருக்கடி கூர்மையடைகின்றது



யூரோ மண்டல கடன் நெருக்கடி தொடர்பாக பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸில் நடைபெற்ற ஐரோப்பிய யூனியன் நாடுகளின் கூட்டம் எவ்வித முடிவுமின்றி கலைந்தது. அமெரிக்கா, பிரிட்டன் உட்பட பல்வேறு நாடுகளில் சிவில் சமூகத்தின் எதிர்ப்பைக் கிளறியுள்ள கரன்ஸி நெருக்கடிகளுக்கு எவ்விதத் தீர்வும் காணப்படவில்லை என அமெரிக்காவின் வோல் வீதி (wall Street) ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளோர் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் 27 நாடுகளின் தலைவர்களின் கூட்டமும் அதையடுத்து நடைபெற்ற யூரோ நாணயம் பயன்படுத்தும் 17 நாடுகளின் கூட்டமும் தோல்வி கண்டுள்ளன. இக்கூட்டங்களில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கெமரூன், பிரான்ஸ் அதிபர் நிகொலஸ் சார்கோஸி, ஜேர்மன் சான்ஷலர் அன்ஜெலோ மார்கல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அயர்லாந்து, போர்த்துக்கல், கிரீஸ் என்பவற்றைத் தொடர்ந்து தற்போது இத்தாலி, ஸ்பெய்ன் ஆகிய நாடுகளும் கடன் நெருக்கடியில் சிக்கியுள்ளன. இந்நாடுகளின் அரசாங்கங்களுக்கு எதிராக சிவில் சமூகம் கிளர்ந்துள்ளது. விளைவாக ஐரோப்பாவில் நிதி ஸ்திரப்பாட்டை உறுதி செய்ய வேண்டிய கட்டாயத்திற்குள் குறிப்பிட்ட நாடுகளின் அரசாங்கங்கள் தள்ளப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், யூரோ மண்டல கடன் நெருக்கடிக்கு தற்போதைக்கு முழுமையான தீர்வு காண்பது அசாத்தியம் என உலகப் பொருளாதார நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். சர்வதேச அளவில் ஏற்பட்டு வரும் பொருளாதார சரிவின் எதிரொலியே ஐரோப்பிய நாடுகளில் வெளிப்பட்டுள்ளதாக இவர்கள் கருதுகின்றனர்.

ஆசியாவில் இஸ்ரேல் உட்பட பல ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியினால் பாரிய பொருளாதாரத் துறை சவால்கள் எழுந்துள்ளதாக இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

லிபியா: அடுத்த வருட நடுப்பகுதியில் தேர்தல்



லிபியாவின் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்துள்ள இடைக்கால தேசிய அரசாங்கம் நாட்டின் முதலாவது ஜனநாயகத் தேர்தல் அடுத்த வருடம் ஜூன் மாதமளவில் நடைபெறும் என்று அறிவித்துள்ளது. இடைக்கால அரசாங்கத்தின் தலைவர் அப்துல் ஜலீல் பல்கலாநிபுணர்களான மக்களுக்கு ஆற்றிய உரையாற்றியபோது, லிபியா சுதந்திரம் அடைந்து விட்டது என்று குறிப்பிட்டார்.

எதிர்கால லிபியாவின் ஜனநாயக நிறுவனங்களையும் சிவில் அரசாங்கத்தையும் கட்டியெழுப்புவதே தமக்கு முன்னாலுள்ள பணி என்று அவர் குறிப்பிட்டார்.

கடாபியில் வாய் எந்தியிருந்த அவரது பிரத்தகமான ஷர்த்தியை முழுமையாகக் கைப்பற்றிய பின்னர் கடாபி கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

எதிர்கால லிபியாவின் சட்டங்கள் இஸ்லாமிய சட்டங்களாகவே இருக்கும் எனவும் தற்போதைய இடைக்கால அரசாங்கம் அறிவித்துள்ளது. எதிர்கால லிபியாவில் ஆறு மில்லியன் மக்களிடையே ஒற்றுமையையும் சுதந்திரத்தையும் நிலைநாட்டுவதே புதிய அரசாங்கத்தின் பணியாக இருக்கும் எனவும் அப்துல் ஜலீல் மேலும் தெரிவித்தார்.

எண்ணெய் வளம் கொண்ட லிபியாவில் மேற்கு நாடுகளின் தலையீடுகள் ஏற்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படும் நிலையிலேயே லிபியாவில் இஸ்லாமிய சட்டம் நடைமுறைக்கு வரும் என்று அவர் அறிவித்துள்ளார்.

ஈரானின் நீதியமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

ஈரானின் நீதியமைச்சருக்கு எதிராக அந்நாட்டின் பாராளுமன்றம் நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டு வந்துள்ளது. ஈரான் வங்கிகளை சரியாக மேற்பார்வை செய்யாததினால் 1.6 பில்லியன் டொலர் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக நீதியமைச்சருக்கு எதிராக குற்றம் காரணம் காட்டப்பட்டுள்ளது. ஈரானின் நிதி விவகார அமைச்சர் சம்பவத்தின் ஹீரோவைனிக்கு எதிராகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டது.

ஈரானிலுள்ள வங்கிகளில் அரசாங்கத்தின் மேற்பட்டவற்றிலிருந்து கடன் வழங்கியுள்ளமைக்கான முறையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் கடன்வாங்கியோர் தொடர்பான பொறுப்பு விபரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இது குறித்து நிதியமைச்சர் விசாரிக்கப்படவுள்ளார்.

அஹ்மத் நஜாதிக்கு எதிரான பலமான குற்றச்சாட்டுக்கள் பலவற்றை வெளியிட்டுள்ளன. அமைச்சர்களுக்கு பெரும்பான்மை நம்பிக்கையில்லாப் பிரேரணை ஈரானில் மிகவும் சாதாரணமான விடயமே. எனினும், அரசாங்கத்திற்கும் பாராளுமன்றத்திற்கும் இடையில் எப்போதும் பிரச்சனைகளே இருந்து வருகின்றன. கடைசியாக பொருளாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டு பாராளுமன்றத்திலிருந்து அவர் நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

விக்கிலீக்ஸ் இணையம் தற்காலிகமாக நிறுத்தம்

விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் செயற்பாடுகளை தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளதாக அதன் நிறுவனர் ஜூலியன் அசெஞ்ஜே தெரிவித்துள்ளார்.

விக்கி லீக்ஸ் இணையத்தை முடக்கி விடுவதற்கு சிலர் முயற்சிப்பதாகக் கூறிய அசெஞ்ஜே, அதன் நிமித்தமே இம்முடிவை மேற்கொண்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

அமெரிக்கத் தூதரகங்களுக்கும் அமெரிக்க வெளியுறவு அமைச்சுக்கும் இடையிலான தகவல் பரிமாற்றங்களை கடந்த பல மாதங்களாக விக்கி லீக்ஸ் வெளியிட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பல்வேறு அரசுகளிடமிருந்து இவ்விணையத்தளத்திற்கு எதிர்ப்பு கிளம்பியபோதும், தொடர்ந்தும் அது தகவல்களை வெளியிட்டு வந்தது.

தற்போது விக்கி லீக்ஸுக்கு எதிராக அமெரிக்க, பிரிட்டன் வங்கிகள் நிதி கையாளுதலை தடைசெய்துள்ளது. அதேபோன்று அதன் கடன் அட்டைப் பரிமாற்றமும் முடக்கப்பட்டுள்ளது. இதனால், விக்கி லீக்ஸ் இணையத்தளத்தை தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனினும், இம்முடிவு தற்காலிகமானது என அசெஞ்ஜே தெரிவித்துள்ளார்.

விக்கி லீக்ஸ் இணையம் இதுவரை அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் இடம்பெற்ற தகவல் பரிமாற்றங்களை வெளியிடாதது குறித்து அதன்மீது கடும் விமர்சனமும் முன்வைக்கப்பட்டுள்ளது.

சிரியாவில் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர அறப் லீக் மத்தியஸ்தம்

சிரியாவில் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர அறப் லீக் சிரேஷ்ட அமைச்சர் பதவி அல்-அரபியுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. எதிர்க்கட்சிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் சமரசப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு தாம் மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என்று அறப் லீக் தெரிவித்துள்ளது.

ஒக்டோபர் 26இல் கெய்ரோவில் கூடிய அறப் லீக் தலைவர்கள் சிரியாவில் வெளிநாட்டுத் தலையீடுகளைத் தவிர்ப்பதற்கும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் தேசிய கலந்துரையாடலை மேற்கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளது. எனினும், அறப் லீக்கின் இந்த பிரதிநிதி மூலம் அரசாங்கம், "கெய்ரோ சந்திப்பு அவரின் ஆட்சிக்கு எதிரான ஓர் சூழ்ச்சித் திட்டம்" என்று சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை, அறப் லீக்கின் செயற்பாடுகளை சிரியாவின் எதிர்க்கட்சியினரும் விமர்சித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

40 வருடத்துக்கு மேலான ஆட்சியை நடத்தி வரும் சிரிய ஜனாதிபதி பஷர் அல் அஸாத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பித்து ஒன்பது மாதங்களுக்கு மேலாகியும் இன்னும் முடிவுக்கு வர வேண்டும் என்பதை அறப் லீக் வலியுறுத்தியுள்ளது. இவ்வமைப்பு சிரியாவில் பதவி விலகுவதையும் தேர்தலை நடத்துவதையும் தவிர, நாம் எதையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று இவ்வமைப்பு திட்டவட்டமாக தெரிவித்துள்ள அறிக்கையில் கூறியுள்ளது.

யெமன்: எதிர்ப்பு வலுக்கின்றது

யெமனில் 9 மாதங்களாக இடம்பெற்று வரும் அரசாங்கத்திற்கு எதிரான கலவரங்களில் தொடர்ந்தும் பலர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த வாரம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் மீது அரச படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் 20 பேர்வரையில் கொல்லப்பட்டனர்.

தலைநகர் சன்ஆவில் அரச படைகளுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல் தீவிரமடைந்துள்ளது. குறிப்பாக, வடக்கு சன்ஆவில் நிலைமை கலவலைக்கிடமாக உள்ளதென்று மக்கள் தெரிவிக்கின்றனர். மக்கள் மீது வெடிகுண்டுகளும் துப்பாக்கிகளும் தாண்தோன்றித்தனமாகப் பிரயோகிக்கப்பட்டு வருவதாக அந்நாட்டின் பிரதான கோத்திரத் தலைவர்கள் அரசைக் குற்றம் சாட்டி வருகின்றனர்.

வடக்கு சன்ஆவில் ஜெனரல் அலி முஹ்சினின் அல் அஹ்மர் வழிநடத்தி வரும் படையினருக்கும் ஜனாதிபதி அலி அப்துல்லாஹ் ஸாலிஹின் விசுவாசப் படையினருக்கும் இடையில் தீவிர மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. சன்ஆவிலுள்ள மாற்றம் சதுக்கத்திலிருந்து பெரும் பேரணியொன்றை நடத்துவதற்கு பெண்கள் அமைப்புகள் திட்டமிட்டு வருகின்றன.

ஸாலிஹின் முன்னாள் இராணுவ ஜெனரலாக விளங்கிய முஹ்சின் அஹ்மர் தற்போது புரட்சியாளர்களுக்கு தலைமை வகிக்கின்றார். அலி அப்துல்லாஹ் ஸாலிஹின் 42 ஆண்டு கால இராணுவ சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு வர வேண்டும் என்று கடந்த 9 மாதங்களாக மக்கள் எதிர்ப்புப் பேரணியை நடத்தி வருகின்றனர். லிபியா போன்று முழு அளவிலான உள்நாட்டு யுத்தமொன்றை யெமனின் தற்போதைய நிலைகள் உருவாக்கலாம் என்று அச்சம் வெளியிடப்படுகின்றது. அரச படைகளுக்கும் பாரிய இழப்புகள் ஏற்பட்டு வருகின்றன.

1967இல் பிரித்தானியப் படையினர் ஏடன் வளைகுடாவிலிருந்து பின்வாங்கியதை அடுத்து தென் யெமன் சுதந்திரமடைந்தது. 1990இல் வடக்கு தெற்கு யெமன் ஒன்றிணைக்கப்பட்டது. நான்கு தசாப்தத்திற்கும் மேலாக யெமனின் ஜனாதிபதியாக இருந்து வரும் அலி அப்துல்லாஹ் ஸாலிஹ் இதுவரை எவ்வித ஜனநாயக சீர்திருத்தத்தையும் மேற்கொள்ளவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூனிசிய தேர்தல்: இஸ்லாமியவாதிகளின் கனவு பலித்தது

நவூப் ஸெய்ன்

நஹ்ழா கட்சித் தலைவர் ராஷித் அல் கனூஷி வாக்களித்த பின் ஆதரவாளர்களுடன்

இஸ்லாமியவாதமே உலகின் அடுத்த தெரிவு என்பதை தூனிசியாவில் நடைபெற்ற ஒக்டோபர் தேர்தல் நிரூபித்துள்ளது. 217 அங்கத்தவர்களைக் கொண்ட அரசியலமைப்பு சபைக்கான தேர்தலில் 90 ஆசனங்களை அந்நாட்டின் நஹ்ழா கட்சி பெற்றுள்ளது. 1981இல் நஹ்ழா ஓர் அரசியல் கட்சியாகப் பதிவுசெய்யப்பட்ட போதும் மூன்று தசாப்தகால வரலாறு அதற்குள்ளது. 80 கட்சிகள் ஊடாக 11,000 வேட்பாளர்கள் களமிறங்கிய இத்தேர்தலில் 44% மான வாக்குகளை இஸ்லாமிய நஹ்ழா கட்சி பெற்றுள்ளமை மிகப் பெரும் அரசியல் சாதனையாகும்.

ஏனெனில், 1989 தேர்தலை அடுத்து தடைசெய்யப்பட்டிருந்த நஹ்ழா கட்சியின் தலைவர் சில தசாப்தங்கள் நாட்டுக்கு வெளியே வாழ்ந்தார். அதேவேளை, அக்கட்சியின் முன்னணி உறுப்பினர்கள் சிறையிடப்பட்டிருந்தனர். மதச்சார்பற்ற மத்திய இடதுசாரி கட்சிகளின் ஆதிக்கம் இஸ்லாமியவாதிகளுக்கு சவாலாக இருந்தது.

கடந்த இரு தசாப்தங்களாக பெரியளவிலான அரசியல் பிரச்சாரங்களோ ஒன்றுகூடல்களோ அக்கட்சியினால் நடத்தப்படவில்லை. இவ்வாறிருந்தும் களத்தில் திடீரென்று நடைபெற்ற தேர்தலொன்றில் 44 வீதமான ஆசனங்களைக் கைப்பற்றி முன்னணியில் இருப்பதென்பது சாதாரணமான விடயமல்ல. சுதந்திரத்திற்குப் பிந்திய தூனிசியாவின் அரசியல் நிலைமைகளை அறிந்து வைத்திருப்பவர்களுக்கு இது நன்கு தெளிவாகும்.

வெளிநாடுகளில் வாழும் தூனீசியர்களுக்கென இத்தேர்தலில் ஒதுக்கப்பட்ட 18 ஆசனங்களில் கூட 9 ஆசனங்களை நஹ்ழா கட்சி கைப்பற்றியுள்ளது. எஞ்சிய 9 ஆசனங்களை நான்கு அரசியல் கட்சிகள் பெற்றுள்ளன. தூனிசியாவின் வரலாற்றில் பதிவுசெய்யப்பட்ட 4.1 மில்லியன் வாக்காளர்களில் ஆகக்கூடியோர் வாக்களித்த (High turn out) தேர்தல் இதுவேயாகும்.

தூனிசியாவின் சுதந்திர தேர்தல் ஆணையகத்தின்படி 80%க்கும் அதிகமான வாக்காளர்கள் வாக்களிப்பில் கலந்துகொண்டுள்ளனர். தற்போது இரண்டாம் இடத்திலுள்ள CPR, அத்தகத்துல் ஆகிய கட்சிகளோடு நஹ்ழா கட்சி பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றது. தூனிசியாவின் புதிய அரசியலமைப்பை வரைவதற்கான சபையொன்றே தற்போது தேர்தல் மூலம் தெரிவாகியுள்ளது. அதில் இஸ்லாமியவாதிகளே முன்னணியில் உள்ளனர்.

பிரஸ்தாப இரு கட்சிகளுடன் நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் பின்னர், தூனிசியாவில் ஓர் இடைக்கால அரசாங்கம் உருவாக்கப்படும். இவ்விடைக்கால அரசாங்கமே பாராளுமன்றம் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களுக்கான திகதிகளைக் குறிப்பதோடு, தூனிசியாவின் புதிய அரசியல் அமைப்பையும் வரையவுள்ளது.

புதிய இடைக்கால அரசாங்கத்திற்கான பிரதமர் வேட்பாளராக நஹ்ழா கட்சியின் பொதுச் செயலாளர் ஹமாதி ஜிபாலியை நிறுத்தப் போவதாக நஹ்ழா கட்சி தெரிவித்துள்ளது. இவர் நஹ்ழா கட்சி பத்திரிகையான அல் பஜ்ரின் முன்னாள் ஆசிரியர்.

மதச்சார்பற்ற இடதுசாரிக் கட்சிகளோடு கூட்டிணைகின்ற போதும் அந்நாட்டின் புதிய அரசியல் அமைப்பை வரைவதில் இஸ்லாமியவாதிகளே பெரும் பங்கு வகிக்கப் போகின்றனர். சுதந்திரத்திற்குப் பின்னர் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு முற்றிலும் மதச்சார்பற்ற சக்திகளுக்கு சார்பாகவும் இஸ்லாத்திற்கு எதிராகவுமே இருந்து வந்தது.

1957 பொதுத் தேர்தலில் புதிய துஸ்தூர் கட்சியின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றி ஹபீப் பூர்கொய்பா, 1988இல் சித்தகவாதீனம் இழந்து பதவி விலகும்வரை 31 ஆண்டுகால அவரது ஆட்சியில் இஸ்லாமியவாதிகள் பெரும் சோதனைகளை எதிர்கொண்டனர். 1960களில் சீரியாவில் கற்றுக் கொண்டிருந்த காலத்தில் இஹ்வான்களின் சிந்தனையால் கவரப்பட்ட கனூஷி 1970களில் நாடு திரும்பிய பின்னர் இஸ்லாமிய தஃவாவிலும் சமூக செயற்பாடுகளிலும் தீவிரமாக ஈடுபட்டார்.

குர்ஆனைப் பாதுகாக்கும் இயக்கம் என்ற பெயரில் ஷெய்க் கனூஷி, ஷெய்க் அப்பாஸ் மதனி, ஷெய்க் புழைல் வர்தலானி ஆகியோரால் தொடங்கப்பட்ட அமைப்பே 1981இல் நஹ்ழா இயக்கமாக மாறியது. அதே ஆண்டில் அரசியல் கட்சியாகவும் பதிவுசெய்யப்பட்டது. எனினும், 1980களிலிருந்து மதச்சார்பற்ற தூனிசிய அரசாங்கத்தின் கெடுபிடிகளும் ஒடுக்குமுறைகளும் நஹ்ழா இயக்கத்தின் மீது கட்டவிழ்க்கப்பட்டது.

இக்கட்சியின் தலைவர் கனூஷி குத்பா பிரசங்கம் நடத்திக் கொண்டிருந்தபோது 300 அங்கத்தவர்களோடு சேர்த்து கைதுசெய்யப்பட்டார். 1980களின் நடுப்பகுதியில் மிகக் குரூரமான வன்முறைகள் நஹ்ழா இயக்கத்தின் மீது கட்டவிழ்க்கப்பட்டது. ஆட்சியைக் கவிழ்ப்பதற்குத் திட்டமிட்டனர் என்று குற்றம் சாட்டப்பட்டு பலர் சிறையில் அடைக்கப்பட்டு வதைசெய்யப்பட்டனர்.

தூனிசியாவில் இஸ்லாமியவாதிகள் பெற்ற வெற்றி பலரும் எண்ணுவது போன்று ஒரு சுகப் பிரசவம் அல்ல. அதற்குப் பின்னால் பல தசாப்த கால பிரசவ வேதனைகளும் வலிகளும் உள்ளன. சுதந்திரத்திற்குப் பிந்திய நான்கு தசாப்தங்களில் சமூக அரசியல் களத்தை நோக்கி அதன் மாற்றப் பணிகளுக்காக இஸ்லாமியவாதிகள் எடுத்து வைத்த திட்டமிடலுடன் கூடிய மிக நுணுக்கமான ஒவ்வொரு எட்டுமே இன்றைய வெற்றியின் மூலதனமாகும்.

நஹ்ழா இயக்கத்தை ஒழிக்கும் பொறுப்பு 1987 வரை பாதுகாப்பு அமைச்சராக இருந்த பின் அலியிடம் வழங்கப்பட்டது. இஸ்லாமியவாதிகளை திட்டமிட்டுப் படுகொலை செய்யும் சூழ்ச்சியொன்றை பின் அலி வெற்றிகரமாக நடத்தினார். பல குற்றுக்கணக்கான நஹ்ழா இயக்க அங்கத்தவர்கள் சிறையிடப்பட்டு அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் மரண தண்டனை விதிக்கப்படும் என்று அரசாங்கம் பயமுறுத்தியது.

தூனிசியா ஒரு முஸ்லிம் பெரும்பான்மை நாடு. அங்கு இஸ்லாம் அரசாள வேண்டும். இஸ்லாமிய சட்டங்கள் நடைமுறைக்கு வர வேண்டும். ஆட்சியிலுள்ள மதச்சார்பின்மையும் இஸ்லாம் விரோத சக்திகளும் அகற்றப்பட வேண்டும் என்று பேசியதும் எழுதியதும்தான் நஹ்ழா இயக்கத்தின் மீதான குற்றச்சாட்டு. 1988இல் கனூஷி உட்பட நஹ்ழா இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டனர். இந்த விசாரணை குறித்து லிபரேஷன் எனும் பிரெஞ்சுப் பத்திரிகை பின்வருமாறு எழுதுகின்றது.

"நஹ்ழா இயக்கத்தைச் சேர்ந்த அனைவரும் தாம் அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை பெருமையோடு பறைசாற்றினர். தூக்குக் கயிற்றின் முன்னால் நிற்கின்றோம் என்ற அச்சமோ பீதியோ அவர்களிடம் அணுவளவும் ஏற்படவில்லை." விசாரணைகளை அடுத்து கனூஷி விடுவிக்கப்பட்டார். ஆனால், நஹ்ழா மீதான பின் அலியின் கொடூரங்கள் தொடர்ந்தன.

நாட்டை விட்டு வெளியேறிய கனூஷி 20 ஆண்டு காலம் லண்டனில் வசித்து வந்தார். இவ்வருட ஜனவரியில் தூனிசியாவில் ஏற்பட்ட மக்கள் எழுச்சியை அடுத்து பின் அலி தப்பியோடியதற்குப் பின்னர் கனூஷி நாடு திரும்பினார். ஆனால், நஹ்ழா இயக்கத்திலும் கட்சியிலும் பெரும்பான்மை தூனீசிய மக்கள் வைத்திருந்த மரியாதையும் எதிர்பார்ப்பும் குறைந்திருக்கவில்லை. மதச்சார்பற்ற கட்சிகள் பிரச்சாரக் களத்தில் மிகத் தீவிரமாக இயங்கியபோது நஹ்ழா கட்சியினர் மிக அமைதியாகவே பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

தூனிசியாவில் அரசியல் பன்மைத்துவம் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையில் இஸ்லாமியவாதிகளுக்கான களம் விரிந்து செல்கின்றது. அந்நாட்டில் அரசியல் வரலாற்றில் தேர்தல்கள் என்பது மிகுந்த ஊழல்களுக்கும் மோசடிகளுக்கும் பெயர் போனவை. நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்கள் அறபு நாடுகளில் நடைபெறுமாயின் பெரும்பாலானவற்றில் ஆகக் கூடிய வாக்குகளை இஸ்லாமியவாதிகளே பெறுவர் என்பதற்கு தூனீசியா ஒரு முன்னுதாரணமாகும்.

விரும்பியோ விரும்பாமலோ அறபு இஸ்லாமிய உலகின் அடுத்த கட்டம் இஸ்லாமியவாதிகளுக்குச் சார்பாகவே இருக்கப் போகின்றது என்பதை தூனிசியத் தேர்தல் மிகத் தெளிவாகவே உணர்த்தியுள்ளது. உண்மையில் எகிப்திலும் லிபியாவிலும் நடைபெறவுள்ள தேர்தல்களிலும் இதன் எதிரொலிகளை நாம் கேட்கலாம். மிதவாத இஸ்லாமே அறபு முஸ்லிம் நாடுகளில் வாழும் சிவில் சமூகத்தின் உடனடித் தெரிவாக மாறப் போகின்றது என்பதை தேர்தலில் வாக்களித்த மக்கள் தெளிவாகச் சொல்லியுள்ளனர்.

தூனிசியாவில் இஸ்லாமியவாதிகள் பெற்ற வெற்றி பலரும் எண்ணுவது போன்று ஒரு சுகப் பிரசவம் அல்ல. அதற்குப் பின்னால் பல தசாப்த கால பிரசவ வேதனைகளும் வலிகளும் உள்ளன. சுதந்திரத்திற்குப் பிந்திய நான்கு தசாப்தங்களில் சமூக அரசியல் களத்தை நோக்கி அதன் மாற்றப் பணிகளுக்காக இஸ்லாமியவாதிகள் எடுத்து வைத்த திட்டமிடலுடன் கூடிய மிக நுணுக்கமான ஒவ்வொரு எட்டுமே இன்றைய வெற்றியின் மூலதனமாகும்.

உள்ளூரின் மிகக் குரூரமான மதச்சார்பின்மை, அடக்குமுறை, ஊழல் மோசடிகள் மற்றும் அவற்றுக்கு முண்டு கொடுக்கின்ற இஸ்லாத்தின் எதிரிகள் ஆகிய சவால்களுக்கு மத்தியில்தான் இந்நாடுகளில் இஸ்லாமியவாதிகளின் பயணம் தொடர்ந்தது; தொடர்கின்றது.

தூனிசியாவிலும் எகிப்திலும் புரட்சி ஏற்பட்டபோது இஸ்லாமிய உலகம் குழப்ப நிலையை நோக்கிச் செல்வதாக நமது மக்களில் அநேகர் கருதினர். அவர்களிலும் படித்த வர்க்கத்தினர் இந்த எழுச்சி இஸ்லாத்திற்கும் இஸ்லாமியவாதிகளுக்கும் சார்பானது என்பதை ஏற்க மறுத்தனர். அவர்கள் கொண்டிருக்கின்ற பாரம்பரிய நம்பிக்கைகளையும் கருத்துருவங்களையும் தூனீசியத் தேர்தல் உடைத்து நொறுக்கி விட்டது.

தூனிசியாவில் மட்டுமல்ல, எதிர்கால எகிப்திலும் லிபியாவிலும் கூட இஸ்லாத்திற்காக உழைக்கின்ற சக்திகளிடமே அரசியல் அதிகாரம் குவியும் என்பதையும் நாம் எதிர்பார்க்கலாம். மாற்றம் எங்கோ ஒரு கடைக் கோடியிலிருந்து, வித்தியாசமான புள்ளிகளிலிருந்து, அசாதாரணமான நிலவரங்களிலிருந்து சூல் கொள்கின்றது. ஏனெனில், வரலாற்று மாற்றங்களை மனிதர்கள் மட்டும் தீர்மானிப்பதில்லை.

எவ்வாறாயினும், தூனிசியா ஒரு தொடக்கமே. பைஸ் அஹ்மத் பைஸ் சொல்வது போன்று, "நெடிய பயணம் தொடரட்டும், இலக்கு இதுவல்ல."

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நோயாளிக்காக வேறொருவர் ஹஜ்ஜை நிறைவேற்றல்

அஷ்ஷெய்க் முஹம்மத் ஷன்கீதி

நோய் போன்ற காரணங்களால் ஒரு ஆணோ அல்லது பெண்ணோ தமக்கான ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்கு முடியாமல் இருக்கிறார்கள். அவர்கள் இன்னொருவரிடம் பணத்தைக் கொடுத்து ஹஜ்ஜை செய்வதற்கான சக்தி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் இன்னொருவரிடம் பணத்தைக் கொடுத்து ஹஜ்ஜை நிறைவேற்ற முடியுமா?

ஹஜ் செய்வதற்கான பணம் இருந்தும் ஹஜ் செய்ய முடியாம லிருப்பது இரண்டு நிலைமை களாகும்.

01. இயலாமை தற்காலிகமா னதாக இருந்தல்.

02. இயலாமை தொடர்ச்சி யாக இருந்தல்.

தற்காலிகமான இயலாமை யைப் பொறுத்தவரையில், அது சில மாதங்களில் அல்லது சில வருடங்களில் குணமாகக்கூடிய தாக இருக்கும். இந்த இயலாமை யின் போது ஹஜ் கடமையாக இருக்கமாட்டாது. இயலாமை நீங்கியதும் ஹஜ் செய்வது கட மையாக மாறும். நோய் குணமை டைந்ததும் அவர் ஹஜ் செய் வார். இந்நிலையில் அவருக்கு பக்கமாக ஒருவர் ஹஜ் செய்து, அவருக்கு மரணமானால் அந்த ஹஜ் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருக்காது.

இரண்டாவது நிலை - அவரது இயலாமை வயது முதிர்வு, வயது முதிர்வுடன் ஹஜ்ஜின் கடமை களை நிறைவேற்ற முடியாதள வுக்கு நோய் போன்ற தொடரான காரணங்களாக இருக்கின்றன. இந்நிலையில் இன்னொருவரி டம் பணத்தைக்கொடுத்து ஹஜ் ஜை நிறைவேற்றச்செய்ய வசதி இருந்தால், அவ்வாறு ஒருவரை கலிக்கமர்த்தி ஹஜ்ஜை நிறை வேற்றச் செய்வது கடமையாகும். நபியவர்களே அனைத்தையும் அறிந்தவர்.

இரவு நேரத்தில் உழ்ஹிய்யா பிராணியை அறுத்தல்

பத்வாவுக்கும் ஆய்வுக்குமான லஜ்னா (பத்வா 9525)

உழ்ஹிய்யாவுக்குரிய மிருகத்தை பெருநாள் தினத்தின் அஸர்தொழுகையின் பின்னர் அறுக்க முடியாது என சிலர் கூறுகின்றனர். பெருநாளின் இரவு நேரத்தில் உழ்ஹிய்யா பிராணியை அறுப்பது கூடுமா?

உழ்ஹிய்யாவுக்குரிய மிருகத்தை பெருநாள் தினத்தின் அஸர்தொழுகையின் பின்னர் அறுக்க முடியாம். ஹஜ்ஜுப் பெருநாள் தினத்திலும், அய்யாமுத்தஷ்ரீக்குடைய நாட்களான பிறை 11, 12, 13 ஆகிய மூன்று நாட்களிலும் மிருகத்தை அறுக்க முடியும். அது பகலாகவோ இரவாகவோ இருக்க முடியும்.

உழ்ஹிய்யாவை கூட்டாகக் கொடுத்தல்

பத்வாவுக்கும் ஆய்வுக்குமான லஜ்னா (பத்வா 2416)

உழ்ஹிய்யாவை கூட்டாகக் கொடுக்க முடியுமா? இயலுமாயின் அதில் பங்கெடுக்க முடியுமானோரின் எண்ணிக்கை யாது? அவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டுமா?

ஒருவர் தனக்காகவும் தனது குடும்பத்துக்காகவும் ஒரு ஆட்டை உழ்ஹிய்யாவாகக்கொடுக்க முடி யும்.

இதற்கான ஆதாரம்:

நபி (ஸல்) அவர்கள் தனக்காக வும் தனது குடும்பத்தினருக் காகவும் ஒரு ஆட்டை உழ்ஹிய் யாக் கொடுத்தார்கள். (முத்தபகுன் அலைஹி)

அதா இப்னு யஸார் கூறு கிறார் - நான் அபு அய்யூப் அல் அன்ஸாரி (ரழி) அவர்களிடம் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் உழ்ஹிய்யா எவ்வாறிருந்தது? என வினவினேன்.

அதற்கு அவர்: "நபி(ஸல்) அவர்களின் காலத்தில் எம்மில் ஒருவர் தனக்கும் தனது குடும்பத் துக்குமாக ஒரு ஆட்டை உழ் ஹிய்யாவாகக் கொடுப்பார். அதிலிருந்து அவரும் சாப்பிட்டு, மற்றவர்களுக்கும் கொடுப்பார்" என பதிலளித்தார். (மாலிக், இப்னு மாஜா, திர்மிதி)

ஒரு ஒட்டகத்தையோ அல்லது மாட்டையோ 07 பேர் சேர்ந்து கொடுக்க முடியும். அவ் 07 பேர் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் களாகவோ அல்லது வேறு குடும்பத்தை சேர்ந்தவர்களாக வோ இருக்க முடியும்.

ஏனெனில், நபி(ஸல்) அவர் கள் ஒரு ஒட்டகத்தையோ அல் லது மாட்டையோ 07 பேர் சேர்ந்து கொடுக்க ஸஹாபாக்களுக்கு அனுமதி வழங்கியுள்ளார்கள். அதனை அவர்கள் விரிவாகக் கூறவில்லை.

உழ்ஹியாவுக்கென அறுக்கப்படும் பிராணிக்கு இருக்கக் கூடாத பண்புகள்

(தமிழாக்கம் அப்துல்லாஹ் இர்மிதி, நளாதி)

நபி (ஸல்) அவர்கள் கூறிய ஹதீஸ் ஒன்றை இங்கு ஆதாரப் (ரழி) அவர்கள் அறிவித்திருப்பதாவது, "நான்கு குணாம்சங்களைக் கொண்ட பிராணியை உழ்ஹிய்யாவுக்கென அறுக்கக்கூடாது. தெளிவான மாற்றங்கண் கொண்ட பிராணி, வெளிப்படையாக நோய் தென்படுகின்ற பிராணி, முற்றிலும் நொண்டியான பிராணி, மூக்கு மேலுதடு இரண்டையும் இழந்த பிராணி போன்ற குறைபாடுகளையும் கொண்ட பிராணியை அறுக்கக்கூடாது".

இந்த ஹதீஸ் இவ்வாறான நான்கு குறைபாடுகளைக் கொண்ட பிராணியை உழ்ஹிய்யாவுக்காக அறுக்கக் கூடாது என்பதற்கான ஆதாரமாகும். அதே போன்று உழ்ஹிய்யாவுக்காக அறுக்கப்படும் பிராணியின் இறைச்சியை விற்பதற்கோ, வேறொரு தேவையை பெற்றுக் கொள்வதற்காக பகரமாக வழங்குவதற்கோ முடியாது.

விளக்கம்

1. மாமிசமான பிராணியின் கண் வெளிச்சமின்மையிருத்தல் அல்லது ஆழமாக புதைந்திருத்தல். மிகுச்சதை நிலங்களுக்கு தான் கவே செல்ல முடியாதிருத்தல்.

2. வெளிப்படையான நோய் குறிப்பிட்ட பிராணி மேய்ச்சல் தரவைகளுக்கு தானாகச் சென்று மேய முடியாமல் தோயுற்றி ருத்தல்.

3. வாலம் - காலிலோ அல்லது வாயிலோ அல்லது ஏனைய உறுப்புக்களிலோ காய மிருத்தல் அல்லது உறுப்புகள் துண்டிக்கப்பட்டிருத்தல்.

4. புத்தி பேதலித்திருத்தல் மனிதனின் உதவியின்றி எந்த ஒரு வேலையையும் மேற் கொள்ள முடியாத பிராணி.

ஹஜ் காலத்தை பிரயோசனப்படுத்துவோம்

றுஸ்வி ஈஸா லெப்பை (நளீமி)

ஹஜ் என்பது நாடிச்செல்தல் என்ற பொருள்படும். அல்லாஹ்வின் மாளிகையான கஃபாவை நாடிச்செல்தல் என்பதே அதுவா கும். பல்லாயிரக்கணக்கான மக் கள் ஒரே வெளியில் ஒன்று கூடும் ஒரு மாநாடு.

ஹஜ் எனும் மாபெரும் கிரி யையை வாழ்நாளில் செய்யக் கிடைப்பது மிகப்பெரும் பாக் கியமே. அந்த ஹஜ்ஜின் நோக்கம் குறிப்பிட்ட நாட்களோடு முடிந்து விடக்கூடாது. பெற்ற தாக்கங்கள் ஹாஜிகளின் நடைமுறையில் வெளிப்பட வேண்டும்.

ஹாஜியார் என்ற நாமம் மட் டும் சூட்டிக்கொண்டிருக்கக் கூடாது. அதன் பிரதிபலிப்பும் வாழ்நாளில் வரவேண்டும். எமது சமூகத்தில் ஹாஜியார் என்ற பெயருக்கு மரியாதையொன்று இருக்கிறது. அதனைப் பாழாக்கி விடக்கூடாது. எமது சமூகத்தில் எத்தனை எத்தனை ஹாஜிமார் இருக்கிறார்கள்.

"ஹஜ் என்பதே அறபாவா கும்" என நபி (ஸல்) அவர்கள் கூறியதை நாம் கேள்விப்பட் டிருப்போம். அறபா வெளியில் தரித்து வந்த ஹாஜி மஸ்ஹர் வெளியை ஞாபகப்படுத்திப் பார்க்க வேண்டும். அந்த வெளி யிலிருந்து வந்த உணர்வு அவருக்கு



"அல்லாஹ் அனைத்து விடயங்களையும் மிகச்சிறப்பாகச் செய்யுமாறே விதித்துள்ளான். நீங்கள் கொல்வதாயினும் மிக அழகிய முறையில் கொல்லுங்கள். நீங்கள் அறுப்பதாயினும் மிக அழகிய முறையில் அறுங்கள். உங்களின் அறுக்கும் ஆயுதத்தை கூர்மையாக்கிக்கொள்ளுங்கள். அறுத்த மிருகத்தின் உயிர்பிரியும் வரை அதனை விட்டுவிடுங்கள்."

தொடர்ந்தும் இருப்பது அவசிய மாகும்.

இவ்வேளையில் எமக்கு ஞாப கம் வரும் ஒரு முக்கிய விடயமே உழ்ஹிய்யா கொடுத்தலாகும். இந்த நாட்டில் வாழும் நாங்கள் அந்நிய சமூகத்தினரின் உணர்வு களை மதித்து நடக்க வேண்டும். நாம் குறிப்பாக உழ்ஹிய்யா என்று வரும்போது மாட்டை அறுத்து பங்கிடுவதையே மேற் கொள்கிறோம். இவ்வேளையில் நாம் இஸ்லாம் எமக்கு கற்றுத் தரும் அறுத்தல் முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

01. அறுக்கும் ஆயுதத்தை கூர்மையாக்கிக்கொள்ளல், அறுத்த மிருகத்தின் உயிர்பிரியும் வரை அதனை விட்டுவிடுதல்.

இதனைப்பற்றி ஸஹீஹ் முஸ்லிமில் பின்வருமாறு காணப்படு கிறது: "நிச்சயமாக அல்லாஹ் அனைத்து விடயங்களிலும் அழகை விதித்துள்ளான். நீங்கள் அறுத்தால் அழகாக அறுங்கள். உங்களில் ஒருவர் தனது மிருகத்தை அறுக்கும் போது அதனை விரைவாக அறுக்கட்டும்." (முஸ்லிம்)

02. மிருகத்தை சித்திரவதை செய்யாது ஒரேயடியில் அறுத்தல்.

03. அறுக்கும் போது கிப்லா வை முன்னோக்குதல். இது சாதா ரணமாக மிருகத்தை அறுக்கும் போதே கடைப்பிடிப்பது விரும் பத்தக்கதாகும். இது உழ்ஹிய்யா என்று வரும் போது மிக அதிக மாக விரும்பப்படுகிறது. இப்னு உமர் (ரழி) அவர்கள் கிப்லாவை முன்னோக்காது அறுக்கப்பட்ட மிருகத்தை உண்பதை வெறுப் பவர்களாக இருந்தார்கள்.

இஸ்லாம் கூறும் விதிமுறை களைப் பேணி அறுக்கும் போது அது மற்றவர்களைத் துன்புறுத் துவதாகக் காணப்பட மாட்டாது. சில இடங்களில் பெருந் தொகை யான மாடுகள் குர்பானிக்காக அறுக்கப்படுகின்றது. அவ்வே ளையில் அனைத்து மாடுகளும் ஒரே இடத்தில் குழுமியி ருக்கும். அவ்வேளையில் என்ன செய்வது? என்ற கேள்வி எழும். அதற்குத்தான் நபி(ஸல்) அவர்க ளின் வாழ்வில் நடந்த சம்பவம் சான்றுபகர்கிறது. நபி(ஸல்) அவர்களும் அலி (ரழி) அவர் களும் சேர்ந்து 100 ஒட்டகங் களை அறுத்து பலியிட்டார்கள் என முஸ்லிமில் ஒரு அறிவிப்பு வருகிறது. இவ்வாறான அதிக தொகை இருக்குமாயின் அவற் றை மிக அவசரமாக அறுக்கு மாறே இஸ்லாம் எமக்கு கற்றுத் தருகிறது.

எனவே, மிருகங்களை உழ் ஹிய்யா கொடுப்பவர்கள் இந்த விடயங்களை கருத்திற்கொண்டு தமது அமானவச்செய்வது மிகப் பொருத்தானதாகும். எமது ஹஜ் காலம் எமக்கான காலமாக இருக்கவேண்டும். நாம் அதிலே வீண் சச்சரவுகள், பிரச்சினை களுக்குள் மூழ்கிவிடக்கூடாது. ஹஜ் காலமென்பது நியாகத் திருநாளாக இருக்கவேண்டும். அதற்காக நாம் அனைவரும் முயற்சி செய்வோம் இன்ஷா அல்லாஹ்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒரு முஸ்லிமின் வாழ்வில் உண்மையைக் கடைப்பிடிப்பதன் அவசியம்

நிப்கான் ஆதம்

சத்தியமும் உண்மையும் நிலை பெறும். அசத்தியமும் பொய்யும் அழிந்துவிடும். நிச்சயமாக அசத்தியத்தின் முடிவு அழிவாகும் எவ்வாறு அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். "அல்லாஹ்வை விட உண்மையுரைப்பவர் வேறு எவர் இருக்கின்றனர்" (அந்-நிஸா-87) என அல்குர்ஆன் அல்லாஹ் உண்மையானவன் என்பதை நிறுவுகின்றது. எனவே, உண்மையானவனான அல்லாஹ் பொருந்திக் கொண்ட மார்க்கமான இஸ்லாம் சத்திய மார்க்கமாகும். அல்லாஹ் நபி (ஸல்) அவர்களை நேர்வழியைக் கொண்டும் சத்திய மார்க்கத்தைக் கொண்டுமே உலகுக்கு ஒரு தூதராக அனுப்பியிருக்கின்றான். எனவே, இஸ்லாம் ஏவுகின்ற விடயங்களும் தடுக்கின்ற விடயங்களும் உண்மையானதாகும்.

நபி (ஸல்) அவர்கள் தன்னுடைய சொல், செயல் போன்ற அனைத்து விவகாரங்களிலும் உண்மையைத் தவிர வேறு எதையும் வெளிப்படுத்தியதில்லை. நபி (ஸல்) அவர்களை அவரது சமூகமும் அவருடைய தோழர்களும் உண்மையாளர் என்றே சான்று பகர்ந்திருக்கின்றனர். இதற்கு உதாரணமாக ஹிரகல் மன்னன் நபி (ஸல்) அவர்களைப் பற்றி அபூ ஸுப்யானிடம் வினவியபோது, "அவர் ஒரு போதும் பொய்யராக இருக்கவில்லை" என்று கூறியதும், நபியவர்கள் ஸபா மலையில் ஏறி தனது முதலாவது பகிரங்கப் பிரச்சாரத்தை எத்திவைக்கும் போது, அவருடைய சமூகம் "நாம் உம்மை ஒரு போதும் பொய் சொல்பவராகக் கண்டதே கிடையாது" என்று கூறியதும் இதற்கு சான்றுகளாகும்.

"ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வைப் பயந்து, எப்போதும் உண்மையாளர்களுடன் இருந்து கொள்ளுங்கள்" (தவ்பா - 119) என அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. இதற்கேற்ப எண்ணம், சொல், செயல் அனைத்திலும் உண்மையைக் கடைப்பிடிக்குமாறு இஸ்லாம் கட்டளை யிடுகின்றது. உலகில் தோன்றிய அனைத்து நபிமார்களும், இறைத் தூதர்களும் உண்மையாளர்களாகவே இருந்திருக்கின்றனர். எனவே, உண்மையாக நடப்பது ஒரு முஸ்லிமின் மிக அடிப்படையான, முக்கியத்துவமிக்க பண்பாகும். மட்டுமன்றி உண்மையாக நடப்பது களத்தில் செயற்படுகின்ற தாஇக்களின் வெற்றிக்கும், களத்தில் நிலை குலையாமல் உறுதியாக இருப்பதற்குமான வழி முறையாகக் காணப்படுகின்றது.

உண்மை உயர்ந்த அந்தஸ்துக் குரியது. அதன் மூலமே அனைத்து நற்செயல்களும் தோற்றம் பெறுகின்றன. அது பாவமான செயல்களை விட்டும் தடுக்கின்றது. அதுவே, உண்மையான முஃமின்களையும் துரோகிகளான நயவஞ்சகர்களையும் பிரித்துக் காட்டுகின்றது. உண்மையைக் கடைப்பிடிப்பது உலகிலும் மறுமையிலும் வெற்றியைப் பெற்றுத் தருகின்றது.

உண்மையைக் கடைப்பிடிப் பதால் உலகிலும் மறுமையிலும் ஏற்படும் விளைவுகள்

01. உண்மை ஈமானினதும் இறையச்சத்தினதும் அடையாளமாகக் காணப்படும். "உண்மையாளர்களே இறையச்சமுடையவர்கள். இறையச்சமுடையவர்களே உண்மையாளர்கள்" என்று அல்குர்ஆன் பல இடங்களில் குறிப்பிடுகின்றது.

02. உண்மை நன்மைக்கும் சிறந்த முடிவுக்கும் இட்டுச் செல்லும். இறுதியில் சுவனத்தைப் பெற்றுத்தரும். "உண்மை நன்மைக்கு இட்டுச் செல்லும். நன்மை சுவனத்துக்கு இட்டுச் செல்லும்" (புகாரி) "ஒரு காரியம் முடிவாகிவிட்ட பின்னர், அல்லாஹ்வுக்காக அவர்கள் உண்மையாக நடந்து கொண்டால் அது அவர்களுக்கு நன்மையாகவே அமையும்" (ஸீறா முஹம்மத் - 21)

03. நயவஞ்சகத்தனத்திலிருந்து உண்மை பாதுகாக்கும். "ஈமானின் அடிப்படை உண்மையாகும். நயவஞ்சகத்தனத்தின் அடிப்படை பொய்யாகும்" என இப்னுல் கையிம் (றஹ்) குறிப்பிடுகின்றார்.

04. சுவனத்தில் நபிமார்களும் உண்மையாளர்களும் ஒன்றாக இருப்பர். இவர்களே அல்லாஹ்வின் அருளைப் பெற்றவர்களாக இருப்பர். "நபிமார்களும் உண்மையாளர்களும் வீரத்தியாகிகளும் நல்லடியார்களும் அல்லாஹ்வின் அருளைப் பெற்றவர்கள்" (அந்-நிஸா - 69)

05. மறுமைநாளின் பயங்கர நிகழ்வுகளிலிருந்து உண்மை பாதுகாக்கும். "அந்நாளில் உண்மையாளர்களை அவர்களுடைய உண்மையே பாதுகாக்கும். இதுவே உண்மையான வெற்றியாகும்" (மாஇதா - 119)

06. உண்மை அமைதியைப் பெற்றுத்தரும். "சந்தேகமானவற்றை விட்டு விடு. உண்மை மன நிறைவாகும். பொய் சந்தேகமாகும்" (அஹ்மத், திர்மிதி) என்பது ஒரு ஹதீஸின் கருத்தாகக் காணப்படுகின்றது.

07. அல்லாஹ்வின் அன்பையும் அவனை அஞ்சித்திருக்கும் அருளையும் பெற்றுத் தரும். அல்லாஹ் உண்மையாளர்களுடன் இருக்கின்றான். அவர்களை நேசிக்கின்றான்.

08. அனைத்து விவகாரங்களிலும் அபிவிருத்தியையும் வளர்ச்சியையும் ஏற்படுத்தும். உண்மையுரைத்து வியாபாரத்தை மேற்கொள்ளும் போது அதில் நிச்சயமாக அல்லாஹ் அபிவிருத்தியை ஏற்படுத்துகின்றான்.

09. ஏனைய மனிதர்கள் உண்மையாளர்களை நம்புவதோடு அவர்களை முன்மாதிரியாகக் கொள்வர்.

10. அமல்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதோடு அவற்றுக்கான பூரணமான கூலியும் கிடைக்கும்.

உண்மையின் வெளிப்பாடுகள்

01. எண்ணத்திலும் நாட்டத்திலும் உண்மை வெளிப்படல். "செயல்கள் அனைத்தும் எண்ணத்தைக் கொண்டதாகவே காணப்படும்" (முஸ்லிம்)

02. பேச்சில் உண்மை வெளிப்படல். "நயவஞ்சகனின் அடையாளங்கள் மூன்றாகும். பேசினால் பொய்யுரைப்பான். வாக்களித்தால் மாறு செய்வான். நம்பினால் மோசடி செய்வான்."

03. செயலில் உண்மை வெளிப்படல். "எனது தொழுகையும் இபாதத்களும் வாழ்வும் மரணமும் அகில உலக இரட்சகனுக்கே உரித்தானவையாகும்" (அல்-அன்ஆம் - 162)

04. உறுதியில் உண்மை வெளிப்படல். நன்மையான காரியங்களை விரைந்து மேற்கொள்ளவும், பாவங்களை முற்று முழுதாகத் தவிர்ந்து கொள்ளவும் உறுதிபெடுத்தால் அவற்றில் உண்மை வெளிப்படும். உண்மையான ஒரு முஃமினுடைய எல்லா நிலைகளும் உண்மையை வெளிப்படுத்தும்.

எனவே, எமதுடைய அனைத்து விவகாரங்களிலும் உண்மையைக் கடைப்பிடிப்போம். அவற்றில் நிலைகுலையாதிருக்க இறைவனைப் பிரார்த்திப்போம். அவனுடைய அருளைப் பெற்றவர்களில் எம்மையும் அல்லாஹ் இணைத்து விடுவானாக!

இலாபத்தில் மாத்திரம் ஸகாத் கடமையாகும் சொத்துக்கள்

01. விவசாய நிலம்

விவசாய நிலங்களுக்கு ஸகாத் கடமையாகாது. மாற்றமாக அதன் விளைச்சல் ஸகாத்தின் அளவை அடைந்தால் மாத்திரமே அதற்கு ஸகாத் கடமையாகும். எனினும் விளைச்சல் சேமித்து வைக்கக் கூடியதாக, அளவிட முடியுமானதாக இருக்க வேண்டும். இம்முறை வியாபாரச் சரக்குகளுக்குரியதல்ல.

இதன் பிரிவுகள்

01. வியாபார நோக்கம் கொண்ட வினைதிலத்தை அதன் உரிமையாளன் விற்க உறுதி கொண்டால் அல்லது அதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டால் அந்த எண்ணம் கொண்ட நாளிலிருந்து ஒரு வருடம் பூர்த்தியாகும் போது அதற்கு ஸகாத் கடமையாகும்.

02. நிலச் சொந்தக்காரன் விவசாய நிலத்தை வேறொருவருக்குத் தன்னகைக்கு கொடுத்தால், அதனால் கிடைக்கப் பெற்ற பெறுமதி ஸகாத்தின் அளவையும் அடைந்து வருடமும் பூர்த்தியானால் அதற்கு ஸகாத் கொடுக்க வேண்டும். அப்பெறுமதி ஸகாத்தின் அளவை அடைவாமலிருந்து அவருடைய ஏனைய பொருட்களோடு சேர்க்கும் போது அது ஸகாத்தின அளவை அடைந்தால் அதற்கும் ஸகாத் கடமையாகும். எனினும் குத்தகையால் கிடைக்கப் பெற்ற பெறுமதி வருடம் பூர்த்தியாவதற்கு முன்னர் உரிமையாளரால் செலவு செய்யப்பட்டால் அதற்கு ஸகாத் கடமையாகாது.

ஆனால், குத்தகைக்குப் பெற்றவர் விளைச்சல் கிடைக்கப் பெற்ற வுடன் அதற்குரிய ஸகாத்தை கொடுக்க வேண்டும். சொந்த நிலமாகவோ அல்லது குத்தகைக்குப் பெற்றதாகவோ அல்லது அடகுக்குப் பெற்றதாகவோ இருந்தாலும் விளைச்சல் கிடைக்கும்போது அதற்கு ஸகாத் கடமையாகும் என்பது ஒரு விதியாகும்.

02. வாடகைப் பொருட்கள்

வாடகைப் பொருட்களில் ஸகாத் கடமையில்லை. ஆனால் அதன் மூலம் கிடைக்கும் வாடகை ஸகாத்தின் அளவை அடைந்து வருடமும் பூர்த்தியானால் அதற்கு ஸகாத் கொடுப்பது அவசியமாகும். இதற்காக வாடகைக்கு விடும் ஒப்பந்த நாளிலிருந்து வருடம் கணிப்பிடப்பட்டு, வருட முடிவில் 2.5 வீதம் ஸகாத் கொடுக்க வேண்டும்.

இதன் பிரிவுகள்

01. வாடகையால் பெறப்பட்ட தொகை முழுவதுமோ அல்லது அதில் ஒரு பகுதியோ வருடம் பூர்த்தியாவதற்கு முன்னர் செலவு செய்யப்பட்டால் செலவு செய்யப் பட்ட தொகைக்கு ஸகாத் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. மாற்றமாக வருடம் பூர்த்தியாளதும் உரிய அளவை அடைத்திருந்தால் அதற்கு மாத்திரம் ஸகாத் வழங்க வேண்டும்.

02. வாடகைக்கு விடப்பட்ட சொத்து பலருக்குச் சொந்தமாக இருந்தால் அதில் ஒவ்வொரு வருடைய பங்கும் ஸகாத்தின் அளவை அடைத்திருந்தால் ஸகாத் கடமையாகும். அல்லது அவர்கள் ஒவ்வொரு வரும் தமக்குரிய பங்கை ஏனைய சொத்துக்களுடன் சேர்க்கும் போது அது ஸகாத்தின் அளவை அடைந்தால் அதற்கும் ஸகாத் வழங்க வேண்டும்.

வினை வந்தவுடன் அதனை விற்பதாக எண்ணியிருந்தால் அச்சொத்தின் பெறுமதிக்கு ஸகாத் கொடுக்கத் தேவையில்லை. மாறாக அதற்குரிய வாடகைத் தொகை யிலிருந்தே ஸகாத்தை கணிப்பிட்டுக் கொடுப்பார். ஏனெனில் அதனை விற்பதற்கான உறுதியான எண்ணம் இல்லாததால் அது வியாபாரப் பொருட்களில் உள்ளடங்காது.

04. வாடகைக்கு விடப்பட்ட சொத்து ஒரு நிறுவனத்திடமோ அல்லது தனிமனிதனிடமோ அடகுவைக்கப் பட்டிருந்தாலும் உரிமையாளன் கடனாளியாக இருந்தாலும் பெறப்படும் வாடகைத் தொகைக்கு ஸகாத் வழங்குவது அவசியமாகும். ஏனெனில் கடன் ஸகாத்தை தடுத்து விடாது.

05. வாடகை முறை நாளாந்த அல்லது மாதாந்த அல்லது வருடாந்த ரீதியாக இருந்தாலும் ஒப்பத்த நாளிலிருந்து வருட இறுதியில் கிடைக்கும் பணம் ஸகாத் கடமையாகும் அளவை அடைந்தால் அல்லது அதனை ஏனைய வியாபாரப் பொருட்களுடன் சேர்க்கும்போது அவ்வளவை அடைந்தால் அதற்குரிய ஸகாத்தை நிறைவேற்ற வேண்டும். ஏனெனில் அவை இலாபத்தில் வந்து சேர்பவையாகும். எனவே அடிப்படையில் இலாபத்துக்கு ஸகாத் வழங்க வேண்டும். இது இரண்டு வழிமுறைகளில் கணிப்பிடப்படும்.

ஒன்று - ஒப்பந்தம் நடை பெற்ற நாளிலிருந்து கணிப்பிடப்படும். எனினும், இதற்கு எழுத்து மூலமான பதிவேடு தேவைப்படுவதால் இதில் சில சிக்கல்கள் காணப்படுகின்றன.

இரண்டு - குறிப்பிட்ட ஒரு காலத்தை வசதியாக வைத்து கணிப்பிடப்படும்

தொடர் - 19ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமரியம்

உமர் இப்னு அப்துல் அஸீஸ் குறித்த வாசிப்பு - I

எம்.எச்.எம். நாளிர்



உமர் இப்னு அப்துல் அஸீஸ் (றஹ்) ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டின் முஜத்தித் என ஏற்றுக் கொள்ளப்பட்டவர். 'எனது பரம்பரையில் ஒருவர் தோன்றுவார், கொடுங்கோன்மையின் பின்னர் அவர் உலகை நீதியாலும் நேர்மையாலும் நிரப்புவார்' என்று உமர் (றழி) அவர்கள் கூறிய தீர்க்க தரிசனத்தை மெய்ப்படுத்திக் காட்டியவர். அதன் மூலம் உமரியத்தை பகிரங்கப்படுத்தியவர்.

இவரது 'உமரியம்' சந்ததி மூலம் கிட்டியதா, கற்றல் மூலம் பெறப்பட்டதா என்பதைத் திட்டமாகக் கூறமுடியவில்லை. உமர் (றழி) அவர்களின் மகன் ஆஸிம் அவர்களுக்கும், பாலில் நீர் கலப்பதைத் தடுத்த உம்மு ஆஸிம் வைவாவுக்கும் பிறந்த மகளையே அப்துல் அஸீஸ் மணந்தார். அவர்களிலிருவருக்கும் ஹிஜ்ரி 63ல் மகனாகப் பிறந்தவரே உமர் (றஹ்) ஆவார், இவர் மதீனாவிலேயே கல்வி கற்றார். அங்கு அவர் அப்துல்லாஹ் இப்னு உமர் (றழி), உனபுல்லாஹ் பின் அப்துல்லாஹ் மதனி என்போரின் பொறுப்பில் விடப்பட்டிருந்தார்.

மதீனாவில் நிறைவான அறிவையும் பயிற்சியையும் பெற்றுக் கொண்ட அவர், கலீபாவாகப் பதவியேற்காது போனாலும் 'மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பிரபலமான இமாமாகவேனும் வரலாற்றில் தடம்பதித்திருப்பார்' என்பது பரலாலும் கூறப்படுகின்ற உண்மையாகும். 'அவர் எங்களிடம் கற்க வந்தார். ஆனால் நாங்கள் அவரிடம் பல வற்றைக் கற்றுக் கொண்டோம்' என தாபிஈ அறிஞர்களுள் ஒருவரான இமாம் முஜாஹித் (றஹ்) அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர் மதீனாவிலிருந்தபோதுதான், எகிப்தின் கவர்னராகப் பணியாற்றிய தந்தை அப்துல் அஸீஸ் மரணமானார். அதன் பின்னர் தனது பெரிய தந்தையும், கலீபாவுமான அப்துல் மலிகின் மகள் பாத்திமாவை மணமுடித்து டமஸ்கஸில் வாழ்ந்து வந்தார்.

கலீபா அப்துல் மலிக் இறக்க, அவர் மகன் வலீத் கலீபாவானார். அவரது காலத்தில் உமர் (றஹ்) ஹிஜாஸின் கவர்னராக (86-93) அமர்த்தப்பட்டார். அப்போதுதான் அவரிடம் உமரியம் வெளிப்பட ஆரம்பித்தது. தமது செயல்பாடுகள் பற்றிக் கேள்வி எழுப்பக் கூடாது என்ற நிபந்தனையோடு அவர் மதீனா சென்றார். மதீனாவில் அவரைச் சூழ அறிஞர்கள் நின்றனர். அவர்களில் சட்ட அறிஞர்களை உள்ளடக்கிய ஒரு மஜலிஸுஷ்ஷூறாவை நிறுவினார். ஹிஜாஸ் மாகாணத்தை அவர்களுடைய கருத்துக்களைப் பெற்றுப் பரிபாலித்தார்.

கலீபா யஸீதுக்கு பைஅத் வாங்கத் தொடங்கிய காலம் முதல் சுமார் கால் நூற்றாண்டு காலம் ஹிஜாஸ் (குறிப்பாக மதீனா) அராஜகமும், அமைதியின் மையும் நிலவிய பிரதேசமாக இருந்து வந்தது. உமர் (றஹ்) அவர்களின் பதவியேற்றலோடு அங்கு அமைதி குடிகொண்டது. மக்கள் நலம் பெற்றனர். உமையா ஆட்சி தாபிக்கப்பட்டது. முதல் கிலாபதுர் ராஷிதாவின் பண்புகள் மறைந்து போக, உமையா வம்சத்தில் பிறந்து வளர்ந்த உமர் (றஹ்) கிலாபத்துக்கான ஒரு முன்னுதாரணமாக ஹிஜாஸை வழிநடத்தினார்.

இதனால் எல்லைப் பிரதேசங்களில் ஹஜ்ஜாஜின் கொடுமைக்காளாகி வந்த அப்பாவிகள், தப்பி வந்து ஹிஜாஸில் குடியேறினர். இது ஹஜ்ஜாஜுக்குத் திருப்தியளிக்கவில்லை. ஹஜ்ஜாஜைத் திருப்திப்படுத்துவதற்காக கலீபா வலீத், உமரை டமஸ்கஸுக்குத் திருப்பியழைத்துக் கொண்டார். கலீபா வலீதின் கட்டளைக்கிணங்க மார்க்க அறிஞர் ஒருவரைத் தண்டிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டபோது அதனை சகிக்க முடியாமல் பதவி துறந்தார் என்ற தகவலும் உண்டு.

கலீபா வலீத் தனது மகனை அடுத்த கலீபாவாக நியமிப்பதற்கான ஆயத்தங்களைச் செய்தார். ஏற்கனவே வலீதையும் சுலைமானையும் அப்துல் மலிக் வாரிசாக நியமித்துள்ளமையால் அதற்கு உமர் (றஹ்) எதிர்ப்புத் தெரிவித்தார். அதன் காரணமாக மூன்றாண்டுகள் சிறைவாசத்தையும் அனுபவிக்க வேண்டியேற்பட்டது. கலீபா சுலைமான் பதவியேற்றபோது, இவர் பிரதம அமைச்சராகப் பணியாற்றினார். உமரின் தகுதியைப் புரிந்து கலீபா சுலைமான், யாருக்கும் தெரியாமல் உமரை அடுத்த வாரிசாக நியமித்தார்.

கலீபா சுலைமான் இறந்து அடக்கம் செய்யப்பட்ட பின்னர், முத்திரையிடப்பட்ட கடிதத்தை திறந்து பார்த்தபோது, உமரை கலீபாவாக நியமித்திருப்பதாகவும் அதனை அவர் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும், மக்கள் அவரை ஏற்றுக் கட்டுப்பட வேண்டுமென்றும் எழுதப்பட்டிருந்தது. முதலில் உமர் (றஹ்) பதவியை ஏற்றுக் கொள்ள மறுத்தார். மக்கள் ஏகமனதாக வேண்டிக் கொண்டபோது விருப்பமின்றிப் பதவியேற்றார்.

'நான் புதுமையை ஏற்படும் முப்ததிஃ அல்ல, பின்பற்றும் முப்ததிஃ ஆவேன்' என்று கிலாபத்தை ஆரம்பித்தார். அரசபோகங்கள் அனைத்தையும் மறுத்துவிட்டார். கண்ணீர் நனைத்த தாடியுடன் அவரைக் கண்ட மனைவி, என்ன நடந்ததென வியப்போடு கேட்டார். முழு உம்மத்தும் எனது கழுத்தில் மாட்டப்பட்டுள்ளது. உணவின்றி, உடையின்றி, உடல் நலமின்றி இன்னலுக்குள்ளாகியுள்ள, கைதிகள், சிறுவர்கள், அதிக உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத் தலைவர்கள் முதலானோரின் தேவைகளை நிறைவு செய்யும் பணி என்னிடம் ஒப்படைக் கப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க எப்படிக் கவலைப்படாமலிருக்க முடியும் என பதிலளித்தார்.

எமது வரலாற்று எழுதுகையின் தேவை

நாஸிக் மஜீத்

"இது எங்கள் நாடு. இங்கே உங்களுக்கென்ன (முஸ்லிம்களுக்கு) வேலை இருக்கிறது? நீங்கள் சவூதி அரேபியாவுக்கு அல்லது பாகிஸ்தானுக்குப் போய்விடுங்கள்"

குறித்த ஒரு பிரதேசத்தில் கடற்படையினரும், பொலிஸாரும் முஸ்லிம்களைப் பார்த்துக் கூறிய வார்த்தைகளே இவை. சென்ற ரமழானில் இரவுவேளையில் குறித்த ஒரு முஸ்லிம் பிரதேசத்தில் கிறீஸ் மனிதன் நுழைந்திருப்பதைக் கேள்விப்பட்ட அப்பிரதேச இளைஞர்கள், அதற்கெதிரான நடவடிக்கையில் ஈடுபட்டபோதே இளைஞர்களை விரட்டிக் கொண்டு, வானை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தபடி சிங்களத்திலும் கொச்சைத் தமிழிலும் அவர்கள் கொன்ன வார்த்தைகள்தான் இவை.

நேவைப்படும்போது முஸ்லிம்களிடமும், முஸ்லிம் நாடுகளிடமும் கையேந்தும் பெரும்பான்மை சமூகம் பல வேளைகளில் அதனை மறந்து விடுகின்றன. எந்தவொரு சமூகமும் தனக்குப் பிரச்சினை ஏற்படும்போது தன்னைப் பாதுகாக்கவே முயற்சிக்கும். அத்தகையதொரு செயலைத்தான் குறித்த பிரதேச இளைஞர்கள் தமது சமூகத்தின் சார்பில் மேற்கொண்டார்கள். அதுதான் தனது சமூகத்திற்குச் செய்யும் உயர்ந்த அர்ப்பணமாகவும் காணப்படுகின்றது.

இலங்கையில் முஸ்லிம்களுக்கென்று நீண்ட நெடியதொரு வரலாறு இருக்கிறது. ஏனைய இனங்களைப் போன்றே முஸ்லிம்களும் இந்த நாட்டின் தொன்மையான தேசிய இனம். அது இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முந்திய பல நூற்றாண்டுகால வரலாற்றைக் கொண்டது. இலங்கையின் சுதந்திரப் போராட்டத்தில் முஸ்லிம்களும் சம பங்கெடுத்திருப்பது, அவர்கள் இலங்கையில் நீண்ட வரலாற்று பின்னணியைக் கொண்டவர்கள் என்பதையும் தமது தேசத்தின் மீது பற்றுக் கொண்டவர்கள் என்பதையும் வெளிப்படுத்துகிறது.

இலங்கையின் முதற் பிரதமர் டி.எஸ். சேனாநாயக்க அவர்கள் இது குறித்து குறிப்பிடும்போது, "முஸ்லிம்களைப் பொறுத்தவரை, அவர்கள் எங்கிருந்தாலும் தமது நாட்டு மக்களுக்கு சுதந்திரம் பெறும் இயக்கத்தில் முன்னிலையில் நிற்க வேண்டும் என்பது அவர்களது வழக்கம் மட்டுமல்ல, கடமையும் கூட. பேராட்டமானது பூரண சுதந்திரத்திற்கு என்றால் அதனைப் பெறுவதற்காக முஸ்லிம் சமுதாயம் எவ்விதப் பாதுகாப்பும் கோராமலே அதற்குத் தயாராக இருக்கிறது" என்று குறிப்பிட்டார். இது முஸ்லிம்கள் தமது இலங்கைத் தாய் நாட்டுக்காக செய்த தியாகங்களை வெளிப்படுத்த போதுமான ஆதாரமாகும்.

இன்று இந்த நிலை மாறி, சிறுபான்மையினரை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு பார்க்கும் நிலை தோன்றியுள்ள போரின் பின்னர் இனங்களுக்கிடையேயான உறவைக் கட்டியெழுப்புவதிலும், பகை மறப்பை மேற்கொள்வதிலும் சிவில் சமூக நிறுவனங்கள் ஈடுபட்டு வரும் நிலையில் இத்தகைய வார்த்தைப் பிரயோகங்கள் அபாயகரமானவை. இனத் துவேசத்தை அச்சொட்டாக வெளிப்படுத்துபவை மட்டுமல்லாமல், இன உறவை மீண்டும் சீர்குழைப்பவை என்பதை உரிய தரப்பினர் உணர வேண்டும்.

இந்த இடத்தில்தான், எமது வரலாற்றை ஆதாரபூர்வமாக முன்வைக்க வேண்டிய வரலாற்றுக் கடமை எம்மீது இருக்கிறது. எதிர்வரும் சந்ததிகளுக்கு எமது வரலாற்றை உரிய முறையில் கடத்த வேண்டியது எமது பொறுப்பு. நாளைய நாட்களில் நாம் வரலாறு அற்றவர்கள் என்று யாரும் அடையாளப்படுத்தாதிருக்க வேண்டுமெனில் இந்தப் பணி கட்டாயம் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது.

"எந்த ஒரு சமூகம் தனது சொந்த வரலாற்றை அறிந்திருக்கவில்லையோ, அந்த சமூகம் அறிந்துவிடும்" என்ற அவ்வாறு இக்பால் அவர்களின் வார்த்தைகளை நினைவுறுத்த வேண்டியது இன்றைய நாட்களில் மிக மிக அவசியமாகிறது.

முஸ்லிம்களை வரலாறு அற்றவர்களாகக் காட்ட முனையும் பல்வேறு செயற்பாடுகள் அவ்வப்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய ஈனத்தனமான போக்குகள் அண்மைக் காலமாக அதிகரித்திருப்பதை எம்மால் கண்டுகொள்ள முடிகிறது. குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கெதிரான போரின் பின்னர் இது முனைப்புப் பெற்றிருப்பதை மறுக்கமுடியாது. இந்த நாட்டிலே முஸ்லிம்களுக்கு இடமில்லை என்று குறிப்பிடும் வார்த்தைகளின் அபாயத்தை நாம் உணர வேண்டும்.

முஸ்லிம் பிரதேசங்களில் இனக் கலவரங்களை ஏற்படுத்துதல் ஒரு வழிமுறையாகக் கொள்ளப்பட்டது. சில வருடங்களுக்கு முன்னர் மாவனல்லை போன்ற முஸ்லிம் பிரதேசங்களில் ஏற்படுத்தப்பட்ட இனக்கலவரம் இத்தகையதே. அவ்வாறே இணையத் தளங்கள் மூலமாக இஸ்லாத்தைப் பற்றியும் முஸ்லிம்களைப் பற்றியும் மிகக் கேவலமாகப் பிரச்சாரம் செய்யும் ஒரு வழிமுறையும் கையாளப்படுகிறது. அதுவும் முஸ்லிம் பெயர் தாங்கிய இணையத் தளங்களாக இயங்குவது குறிப்பிடத்தக்கது.

அடுத்தது, முஸ்லிம் யுவதிகளைக் குலிமையப்படுத்திய ஒரு திட்டமாக, அவர்களை மதம் மாற்றி சிங்கள இளைஞர்கள் திருமணம் செய்யும் ஒரு நடவடிக்கையும் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக சிங்கள மொழி மூலம் கற்கும் யுவதிகளே இத்தகைய சதித்திட்டங்களுக்குப் பலியாகிப் போகின்றனர்.

மேலே அடையாளப்படுத்தியவை முஸ்லிம்களின் வரலாறுகளை சிதைக்கும் விதமாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கான ஒருசில எடுத்துக் காட்டுகளே. இதுபோல் இன்னும் எத்தனையோ நடவடிக்கைகள் நாளாந்தம் எமக்கெதிராகவும், எமது மார்க்கத்திற்கெதிராகவும், கலாச்சாரத்திற்கெதிராகவும் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

எனவே, எமது முஸ்லிம் பிரதேசங்களின் வரலாறுகள் உரிய வரலாற்றாதாரங்களுடன் எழுதப்பட வேண்டியது அவசியமாகிறது.

(பக். 19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுசுரபி

கன்னத்தில் முத்தமிட்டால்...

எல்லம்மாள்

''வாப்பா... சாயங்காலம் சீக்கிரம் வந்திருங்க, சரியா ஆறு மணிக்கெல்லாம் நிகழ்ச்சி ஆரம்பிச்சிருவாங்க, கலெக்டர் தான் சீஃப் கெஸ்ட். நான் பேச ஆரம்பிக்கையில் தீங்க இருக்கனும் சரியா...'' சொல்லிக்கொண்டே கல்லூரிப் பேருந்தைப் பிடிக்கப் பறந்தாள் ஆயிஷா.

''சரிம்மா, உம்மாவோடு வந்திடுறேன் இன்ஷா அல்லாஹ்'' சிரித்துக்கொண்டே பதிலுரைத் தார் வாப்பா.

''சிரிக்காதீங்க, என்னதான் இருந்தாலும் ஒரு முஸ்லிம் பொண்ணு பேசிற தலைப்பையா தேர்ந்தெடுத்திருக்கிறாள்; முத்த மாம் முத்தம், எனக்கு வர இஷ்டமில்லை...'' கோபத்துடன் சமையலறைக்குப் போனாள் உம்மா.

ஆயிஷா, மருத்துவக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவி. கல்லூரியின் இலக்கியப் பேரவை சார்பில் நடத்தப்படும் விழாவுக்கு கலெக்டர் அழைக்கப்பட்டிருக் கிறார். விழாவில் மாணவர்க ளின் பேச்சுப் போட்டியும், தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு பரிசும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆயிஷா தேர்ந்தெடுத்துள்ள தலைப்பு 'முத்தம்'. அதனால் தான் இத்தனை யுத்தம்.

''இதற்காகவா ரெண்டு நாளா வாப்பாவும் மகளும் குறிப்பெடுத்தீங்க.... சரியில் லைங்க...''. உம்மா சிற்றுண் டியை மேசையில் வைக்கும் போது மீண்டும் குமுறினாள்.

''சரி விடு, நீ அவ கூட ரெண்டு நாளா சண்டை போட்ட, அதுதான் உனக்கு சம்பெண்ஸ்னு சொல் லியிருக்காள்..., வந்து கேட்டுப் பாரு''

''அஞ்சு மணிக்கு வர்றேன், ரெடியா இரு'' சிற்றுண்டி முடித்து அலுவலகத்திற்கு கிளம்பினார்.

கல்லூரியிலும் பரபரப்பு தொற்றிக்கொண்டது. 'ஆயிஷா என்ன பேசப்போகிறாள்?'

எல்லோரும் கேட்டுக் கொண்ட கேள்வி இதுதான்.

மணி 5:15 ஆகிவிட்டது, வாப்பாவைக் காணவில்லையே என்ற வருத்தத்தோடு வாசலை நோட்டமிட்டுக்கொண்டிருந்த ஆயிஷாவைப் பேச அழைத்தார் தொகுப்பாளர்.

கல்லூரி வாயிலை அடையும் நேரம், ஆயிஷாவை தொகுப் பாளர் அழைக்கும் சப்தம் கேட்டு விரைவாக உள்ளே நுழைந்தவர் வாப்பாவும் உம்மாவும்.

மேடையில் உள்ளோரையும், வந்திருந்தவர்களையும் வரவே ற்று பேசி முன்னுரையை முடிக்கும் நேரம், பெற்றோ ரைப் பார்த்த சந்தோசத்தில் பேச்சைத் தொடர்ந்து கொண் டிருந்தாள் ஆயிஷா.

''...முத்தத்தினால், தனக்கு கிடைக்க வேண்டிய கவர்னர் பதவியினை ஒருவர் இழந்து விட்டார், அப்படி பதவி மறுக் கப்பட்டவருக்கோ ஒன்றும் புரியவில்லை. நான் ஒன்றும் குற்றம் புரியவில்லையே, முத்தம் கொடுப்பதில்லை என்று தானே சொன்னேன், இதற்கும் எனதுடைய பதவிக்கும் என்ன தொடர்பு?'' அந்த மணிதருக்குள் ஆயிரம் கேள்விகள் ஓடிக் கொண்டிருந்தன.

''அன்பர்களே, உங்களுக்கும் கூட இந்த ஐயம் எழலாம், இன் னும், இது எந்த மாநிலத்தில் நடந்தது? என்றும் கூட கேட்கத் தோன்றும். பதவி இழப்பு ஒருவேளை இன்று நடந்திருந் தால் முத்தம் கொடுத்ததற்காக வேண்டுமானால் நேர்ந்திருக்கும்''

அவையில் ஒரே கிசுகிசுப்பொலி; உம்மாவுக்கோ மகள் அரசியல் பேசுகிறாளே என்ற வியப்பு!

''நண்பர்களே! விஷயத்திற்கு வருகிறேன். நான் சொன்ன அந்த நிகழ்ச்சி ஏறத்தாழ ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன் நடந்தது. உமர் பின் கத்தாப் (ரழி) என்ற நபித் தோழர் 'கலீபா'வாக ஆட்சி புரிந்த நேரம், அந்த மனிதர் ஆளுனராகப் பதவி யேற்க அழைக்கப்பட்டிருந்தார். அந்த நேரம் கலீபாவுக்கும், ஆளு னராகப் பதவியேற்க வந்திருந்த வருக்கும் நடந்த உரையாடலில் இடையே, ''...நானெல்லாம் என் குழந்தைகளை கொஞ்சுவ தா, முத்தமிடுவதா? அப்படி எதுவுமே செய்தது இல்லை'' என்று, அது ஏதோ குற்றமான செயல்போல சொன்ன மாத்தி ரத்திலேயே, கலீபா உமர் பின் கத்தாப் (ரழி) அவர்கள், அந்த நபருக்கு கொடுக்கவிருந்த பதவியை ரத்து செய்ய உத்தர விட்டார்கள்.

குழம்பிப்போய் இருந்த அந்த நபரிடம் சொன்னார்கள், ''உனது மனம் உன் குழந்தை களிடமே இரக்கம் காட்ட வில்லை, கருணை காட்ட வில்லையெனில், பிறகு நீர் எப்படி மற்ற மனிதர்களிடம் கருணையுடன் நடந்துகொள்வீர்? இறைவன் மீது ஆணையாக உம்மை ஒருபோதும் ஆளுன ராக்கமாட்டேன்'' என்று கூறி திருப்பி அனுப்பிவார்கள்.

சபை மிகுந்த அமைதியுடன் காணப்பட்டது. ஆயிஷா அடுத் ததாகத் தொடர்ந்தாள்.

முத்தத்திற்கும் கருணைக்கும் தொடர்பா? ஆம் நண்பர்களே, அன்னையில் ஒரு அறிவியல் செய்தியினைப் படிக்க நேர்ந்தது. நாம் நம் குழந்தைகளைக் கொஞ்சி, அரவணைத்து, முத்த மிட்டு மகிழ்வது நாம் அவர்கள் மீது வைத்திருக்கும் அன்பு மற் றும் பாசம் காரணமாக என்று நினைத்திருக்கிறோம், ஆனால் அது அவற்றையும் மீறி இதயத் தின்மால் ஊறுவிளைக்க கருணையின் காரணமாக என்று அறியும் போது விசயப்பை அவிக்கிறது.

பெற்றோர் குழந்தையினை முத்தமிடுவதன் மூலம் அந்தக் குழந்தை ஓர் உணர்வு ரீதியான அரவணைப்பைப் பெறுகிறது. அதுவும், ஒரு தாய் முத்தமிடும் போது குழந்தையுடனான பாசப் பிணைப்பு உளரியல் மூலம் உறுதிசெய்யப்படுகிறது, பெற்றோரின் இந்த ஆக்மார்த்தமான முத்தத்தினால், எந்த ஒரு எதிர் மறையான சூழ் நிலையிலும் தாழ்வு மனநிலை என்பது குழந்தையின் உள்ளத்தைப் பாதிக்காது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

மேலும், குழந்தையை முத்தமிடுவதால் குழந்தைக்கும் அதேவேளையில் பெற்றோருக் கும் மகிழ்ச்சியான ஒரு மன நிலையை அடையமுடிகிறது.

குழந்தையில் இதயம் சீராக செயல்பட பெரிதும் உதவுகிறது.

தாய் தன் குழந்தையின் கன் னத்தில் முத்தமிட்டால் என்ன நடக்கிறது என்பதை நிரூபிக்கும் அறிவியல் உண்மையை உங்க ளுக்கு சொல்லக் கடமைப் பட்டுள்ளேன். ஒரு தாய் தன் குழந்தையை கருவில் சுமக்கும் போது அதற்குத் தேவையான நோய் எதிர்ப்பு சக்திக்கான தேவைகளை ஈடுசெய்கிறாள். ஆனால் குழந்தை பிறந்த பிறகு வெளி உலகில் குழந்தையைத் தாக்கும் நோய்க்கு எதிர்ச் சக்திகளை உருவாக்குவதில் முத்தம் பெரும் பங்கு வகிக்கிறது. ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? ஆம், ஒரு தாய் முத்தமிடுவதன் மூலம் சிறுமிகளின் மார்பி எடுக்கப் பட்டு வெளித் தெரிகள் மற்றும், தினவுறுகிறன் 'பி' வகை செல்கள் மூலம் அந்த கிருமிக ளின் வீரியம் அழிக்கப்பட்டு, இதற்கான நோய் எதிர்ப்பு சக்தி கள் உருவாக்கப்பட்டு அவை 'பி' வகை செல்களினால் தினவு வந்தால் கொண்டு தாய்ப்பால் மூலம் குழந்தைக்குப் போய்ச் சேருகிறது.

குழந்தையும் நோய்க்கிருமிக ளிலிருந்து பாதுகாப்புப் பெறுகிறது.

எனவேதான், ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே, அறிவியல் அறிந்திராத காலத் தில் தோன்றிய எங்கள் இறைத் தூதர் முஹம்மத் (ஸல்) அவர் கள், குழந்தைகளை முத்த மிடாத ஒரு சமூகமாகியைப் பார்த்து, ''இறைவன் உமது இதயத்திலிருந்து அன்பை நீக்கி விருப்பதற்கு நான் பொறுப்பா வியா?'' என்று கூறினார்கள்.

''அன்பும் கருணையும் கலந் திருக்கும் முத்தத்திலைப்...''

வார்த்தையினை முடிப்பதிற் குள் அரங்கில் கரவொலி நிரம் பியிருந்தது.

உம்மா, ஆயிஷாவின் கன் னத்தில் முத்தமிட்டுக் கொண்டி ருந்தாள். ■

நிறுவனம் வளர்ச்சியடைய...

நிர்வாகவியல் நிபுணர்களில் குறிப்பிடத்தக்கவர் ஜாக் வெல்க். நிறுவங்களில் வளர்ச்சிக்கான நடைமுறை வழிகளைப் பளிச் சென்று சொல்வதில் வல்லவர். செயல்படுத்தக்கூடிய சுருங்கிய கல் பலவற்றைத் தந்துள்ள அவரின் புகழ்பெற்ற வழிகாட்டு தல்களில் சில:

★ வெற்றிக்கு இருப்பது ஒரே வழி, அதுதான் நேர்வழி. உங்கள் நிறுவனத்தின் வழிமுறைகள் நேராக, நேர்மையாக அமையட்டும்.

★ எங்கு வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் நிகரில்லாத ஆலோசனைகளை நல்க முடியும். படித்த விஷயங்களை நிறுவனத்தில் எல்லோரும் எல்லோரோடும் பகிரங்கமாகப் பகிர்ந்து கொள்ளச் செய்யுங்கள்.

★ சரியான ஆட்களை சரியான பொறுப்புகளில் அமர்த்துங்கள். திட்டமிடுதலின் கனம் பாதிக்குப் பாதி குறைந்துவிடும்.

★ அன்றாடப் பணிச்சூழல் யதார்த்தமானதாக இருந்தால், அது உங்கள் நிறுவனத்தின் பலங்களிலே ஒன்று.

★ நிறுவனத்தில் ஒவ்வொருவருக்கும் மதிப்பு உண்டு. அதே நேரம், அவரவர் மதிப்பு என்னவென்று அவர்களுக்காவது தெரிந்திருக்க வேண்டும்.

★ திறந்த நிலையில் உங்கள் செயல்பாடுகளை வைத்திருப்பதுதான் நம்பிக்கையின் நிரந்தர அடையாளம்.

★ பணியிடங்களில் கொண்டாட்டங்களுக்கும் இடம் வேண்டும். அது நிறுவனத்தை உயிர்ப்புள்ளதாய் ஆக்குகிறது.

★ யாரையும் குறைவாக எடை போடாதீர்கள்.

★ உங்கள் நிறுவனத்தின் மதிப்பைப் பெருக்கும் செயல்கள் எவை யென்று பாருங்கள். சரியானவர்களையே அங்கு நியமியுங்கள்.

கட்டுப்படுத்த வேண்டியது எப்போது, சுதந்திரம் தரவேண்டியது எப்போது எல்லாவற்றையும் சரியாக தெரிந்து செயல்படுத்துங்கள்.

700 கோடியும் நீங்கள் எத்தனையாவது நபர்?

உலக மக்கள்தொகையானது 700 கோடியை அடைந்து விட்டது. இந்நிலையில் 700 கோடியில் நீங்கள் எத்தனையாவது நபர் என்பதை அறிவதற்காக பிபிசி இணையத்தளம் இணைப்பொன்றை உருவாக்கியுள்ளது. பிறந்த திகதி, மாதம் மற்றும் வருடத்தை கொடுத்ததும் உங்களுக்கான நம்பரை தருகிறது அந்த இணைப்பு. ஐக்கிய நாடுகள் சபையின் சனத்தொகை நிதியத்தின் தரவுகளை வைத்து இவற்றை கணிப்பதாக சொல்கிறார்கள். மேலும், போன்றவற்றில் தரவுகளும் இங்கு பயன்படுத்தப்பட்டதாம்.

7 billion people and you: What's your number?



http://www.seeklogo.com

புதிதாக நிறுவனங்கள், அமைப்புகள் தொடங்குவோர் தமக்கு தேவையான இலச்சினைகளை (லோகோ) அமைத்துக்கொள்ள இத்தளம் உதவுகிறது.

சுமார் 20 இலட்சம் லோகோக்களை இத்தளத்தில் பெறலாம். இத்தளத்தினுக்கு சென்று 'தேடல்' கட்டத்திற்குள் எந்த கருவிற்கான லோகோ உருவாக்க வேண்டுமோ அந்த வார்த்தையை கொடுத்து பொத்தானை சொடுக்கினால் அடுத்து வரும் திரையில் தரப்பட்டிருக்கும் நிறுவனத்தின் பெயருக்கு ஏற்றபடி பல வகையான லோகோக்களை வடிவமைத்து...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பரீட்சை எழுதக் காத்திருக்கும் உங்களுக்காக..

பரீட்சை காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. மாணவர்கள் பரீட்சைக்காக தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பிரயோசனம் அளிக்கும் வகையில் சில குறிப்புகளை பகிர்ந்துக்கொள்ள விரும்புகிறேன்.

★ பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கதைத்துக் கொண்டிருப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள். அதனால் உங்கள் மனநிலை பாதிக்கப்படுவதுடன் தன்னம்பிக்கையும் ஏனையோரால் தகர்க்கப்படலாம்.

★ பிஸ்மில்லாவுடன் ஆரம்பியுங்கள். வினாத்தாளை கவனமாக வாசியுங்கள். நீங்கள் எத்தனை கேள்விகளுக்கு பதிலளிக்கவேண்டும் என்பதை ஞாபகம் வைத்திருங்கள்.

★ உங்களுக்கு விடையெழுத முடியுமானதை அடையாளமிடுங்கள். பின்னர் அவற்றிலிருந்து தெரிவு செய்து விடையளிக்க வேண்டிய வினாக்களுக்கு அடையாளமிடுங்கள்.

★ ஒவ்வொரு வினாவுக்கும் வழங்கப்படும் புள்ளிகளின் அளவிற்கேற்ப அவ்வினாக்களுக்குரிய நேரத்தை தீர்மானியுங்கள்.

★ வினாக்களை மீண்டும் வாசியுங்கள். முக்கியமான வார்த்தைகளை அடையாளமிட்டுக் கொள்ளுங்கள்.

★ விடையெழுதும் அமைப்பை திட்டமிட்டுக் கொள்ளுங்கள். விடைக்கான சுருக்கமான குறிப்பை வினாவிற்கு பக்கத்தில் எழுதிக் கொண்டால் விடையை பூரணமாக எழுதுவதற்கு உதவியாக இருக்கும்.

★ பிஸ்மில்லாஹ்வுடன் துஆ கேளுங்கள். விடையெழுத ஆரம்பியுங்கள். ஒவ்வொரு வினாவிற்கும் நீங்கள் ஒதுக்கிய நேரத்தை மறந்து விட வேண்டாம். அந்நேரம் கடந்தால் அடுத்த வினாவிற்கு விடையெழுதுங்கள். நேரம் எஞ்சும்போது பூரணப்படுத்தாத விடைகளை பூரணப்படுத்துங்கள்.

★ விடைகளை தெளிவாக எழுதுங்கள். வினாத்தாள்களை திருத்துவோர் தமக்கு வாசிக்க முடியாதவற்றிற்கு புள்ளியிடமாட்டார்கள். விடைகளுக்கு இடையில் இடைவெளி விடுங்கள். பந்தி அமைப்பை பேணுங்கள். பந்திகளுக்கு இடையிலும் இடைவெளி விடுங்கள்.

★ பரீட்சை முடிவடைந்ததன் பின்னர் நண்பர்களுடனோ, ஏனைய மாணவர்களுடனோ அதைப் பற்றி கலந்துரையாடுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

★ இரண்டு ரக்ஆத்துகள் ஸுன்னத்தான தொழுகையை நிறைவேற்றுங்கள். பரீட்சையின் முடிவு சிறந்ததாக அமைய வேண்டும் என இறைவனிடம் துஆ கேளுங்கள்.

எப்போதும் குளிர்ச்சியாகவே இருக்கும் நட்சத்திரம் கண்டுபிடிப்பு

எப்போதும் குளிர்ச்சியாகவே இருக்கும் நட்சத்திரத்தை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். அதன் மேற் பகுதியானது பூமியின் கோடைகாலத்தைப் போன்று உள்ளது. இதன் பெயரானது 0806661 ஆகும். இது ஒரு கோள் அல்ல, சிறிய நட்சத்திரம். இந்த நட்சத்திரம் 6 முதல் 9 தடவை பெரிய கோளான வியாழனை சுற்றிவருகிறது. வானியல் வல்லுநரான கெவின் லுக்மன் குறிப்பிடுகையில், இது சிறிய நட்சத்திரம், இதன் வெப்பநிலை பூமியைக் காட்டிலும் குளிர்ச்சியாக இருக்கும் என்றார்.



வானியல் வல்லுநர்கள் நாசா ஸ்பிட்சர் விண்வெளி தொலைநோக்கி மூலம் இந்த குளிர் நட்சத்திரத்தை கண்டுபிடித்தனர். அகச்சிவப்பு கதிர்களால் செயல்படும் தொலைநோக்கி மூலம் இந்த நட்சத்திரத்தை பொருட்களின் மீது மின்னச் செய்யலாம். இந்த நட்சத்திரமானது பூமியையும், அதன் வட்டப் பாதையையும் கடக்க 63 பில்லியன் ஒளி ஆண்டுகள் ஆகிறது.

ப்ரவுன் டுவார்ப் நட்சத்திரமானது மற்ற நட்சத்திரங்களைப் போன்றது. அதனுள் மேகத் தூசுகளும், வாயுவும் உள்ளன. இந்த நட்சத்திரம் தன்னுள்ளே போதுமான அளவு மேகத் தூசுகளை வைத்து கொள்ள தவறினால், தெர்மோ நியூக்ளியர் வினை புரிந்து தீப்பற்றி எரிந்து விடும்.

இஸ்லாம் - க.பொ.த (சா/த)

1. தொடர்பாடல் என்றால் என்ன?

2. தொடர்பாடல் ஏன் அவசியப்படுகின்றது?

3. நபி (ஸல்) அவர்கள் தொடர்பாடலுக்கு பயன்படுத்திய முறைகள் எவை?

4. நபி (ஸல்) அவர்கள் தொடர்பாடலுக்கு பயன்படுத்திய இடங்கள் எவை?

5. இஸ்லாத்தைக் கற்றுக்கொடுப்பதற்காக நபி(ஸல்) அவர்கள் அனுப்பிய ஸஹாபாக்களையும் அனுப்பப்பட்ட இடங்களையும் குறிப்பிடுக?

6. நபி (ஸல்) அவர்கள் தொடர்பாடலில் ஸஹாபாக்கள் விளங்கிக் கொள்வதற்காக பயன்படுத்திய உத்திகள் எவை?

7. நபி (ஸல்) அவர்கள் சில மன்னர்களோடு கடிதத் தொடர்புகளை மேற்கொண்டார்கள். அதற்காக அனுப்பப்பட்ட ஸஹாபாக்களை குறிப்பிடுக?

8. உமர் (ரழி) அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட தபால் திணைக்களம் எவ்வாறு அழைக்கப்பட்டது?

9. நபி (ஸல்) அவர்கள் எழுத்தாளர்களாக நியமித்திருந்த சிலரையும் அவர்களது பணிகளையும் குறிப்பிடுக?

10. தொடர்புசாதனங்கள் கொண்டிருக்கவேண்டிய ஒழுக்கங்கள் எவை?

11. இன்று காணப்படுகின்ற ஊடகங்களை இரண்டு வகையாக பிரிக்கலாம் அவை எவை?

12. இன்று காணப்படுகின்ற தொடர்பு சாதனங்கள் எவை?

13. தொடர்பு சாதனங்களால் ஏற்படுகின்ற நன்மை தீமைகளை அட்டவணைப்படுத்துக?

14. இது தகவல்களின் உலகம் என அழைக்கப்படுவதற்கான காரணங்கள் எவை?

(இவ்வினாக்களுக்கான விடைகளை இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் எதிர்பாருங்கள்)


Students @
மீள்பார்வை

மறக்க முடியாத பாடம்

ஒரு பல்கலைகழக மாணவன் தனது விரிவுரையாளர் ஒருவருடன் நடந்துக்கொண்டிருந்தான். அந்த விரிவுரையாளர் மாணவர்களுடன் நண்பனாக பழகுகின்றவர். அவர்கள் நீண்ட தூரம் சென்றுவிட்டனர்.

அப்போது ஒரு வயல் வெளிக்கு அருகில் இரண்டு பழைய சப்பாத்துக்கள் இருப்பதை மாணவன் கண்டான். அது வயலில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு விவசாயினுடையதாகும். அவன் தனது வேலையை முடித்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்ப ஆயத்தமாகிக் கொண்டிருந்தான்.

அப்போது மாணவன் விரிவுரையாளரை நோக்கி சேர் நாம் அந்த சப்பாத்துகளை ஒளித்துவிட்டு செடிகளுக்கு பின்னால் மறைந்து கொள்வோம். அவர் என்ன செய்கின்றார் என்று பார்ப்போம் என்று கூறினான். அதற்கு விரிவுரையாளர், எனது சிறிய நண்பனே, நாம் அந்த ஏழை விவசாயியுடன் விளையாடக் கூடாது. நீங்கள் ஒரு பணக்காரர். உங்களால் அவரை மகிழ்ச்சிப்படுத்த முடியும். அந்த இரண்டு சப்பாத்துகளிலும் ஒவ்வொரு நாணயங்களை வைத்து விடுங்கள். பின்னர் அவர் என்ன செய்கின்றார் என்பதை மறைந்திருந்து பார்ப்போம்.

விவசாயி வேலையை முடித்துவிட்டு வந்து சப்பாத்தை அணிந்த போது ஏதோ வழுக்கிச் செல்வதை உணர்ந்து சப்பாத்தை பார்த்த போது அதில் ஒரு நாணயம் இருந்தது. சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ஒருவரையும் காணாததால் அதனை தனது பையில் போட்டுக் கொண்டார். அடுத்த சப்பாத்தை அணியும் போது மீண்டும் ஆச்சரியமடைந்தார்.

முழங்காலில் விழுந்து ஸுஜூத் செய்தார். நோயாக இருக்கும் மனைவி, சாப்பிடுவதற்கு பாண் கூட இல்லாத குழந்தைகள் நினைவுக்கு வந்தனர்.

அந்த மாணவனின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது.

பிளாஸ்ரிக்கால் உருவாக்கப்பட்ட உலகின் முதலாவது விமானம்

பிளாஸ்ரிக்கால் உருவாக்கப்பட்ட உலகின் முதலாவது விமானமானது தனது கன்னிப் பயணத்தை ஜப்பானின் டோக்கியோ நகரிலுள்ள நரிடா விமான நிலையத்திலிருந்து அண்மையில் ஆரம்பித்தது. இந்த போயிங் ட்றீம்லைனர் விமானமானது நிறை குறைந்தது என்பதால் ஏனைய விமானங்களை விட எரிபொருள் பயனுறுதிப்பாடு மிக்கதாகும்.

பெரிய ஜன்னல் கண்ணாடிகளையும் அகலமான ஆசனங்களையும் கொண்ட இந்த விமானம் ஏனைய விமானங்களுடன் ஒப்பிடுகையில் 60 சதவீதம் குறைவான சத்தத்தை மட்டுமே எழுப்புகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் டோக்கியோவிலிருந்து ஹொங்கொங்கிற்கு கன்னிப்பயணத்தை மேற்கொண்ட இந்த விமானத்தில் 200 விமான நிபுணர்களும் ஆர்வலர்களும் பயணித்தனர். மேற்படி விமானத்தின் நீளம் 186 அடியும் உயரம் 56 அடியும் இரு இறக்கைகளுக்கிடையேயான நீளம் 197 அடியும் ஆகும். அத்துடன் இந்த விமானம் மணிக்கு சுமார் 650 மைல் வேகத்தில் பறக்கக்கூடியது. பயணிகள் மற்றும் சரக்குகள் உட்பட 502, 500 இறாத்தல் நிறையுடைய இந்த விமானத்தின் விலை 193.5 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

ஆங்கிலத்தில் உரையாட கற்றுத்தரும் இணைய தளம்

classbites. com

எல்லோருக்கும் ஆங்கிலத்தில் உரையாடுவதற்கு ஆசையுண்டு. ஆனால், சரியாக வார்த்தைகளை உச்சரிக்கத் தெரியாமையினால் அந்த ஆசை நிராசையாகி விடுகின்றது.

இந்த தளத்தில் ஆங்கில இலக்கண அடிப்படையில் ஆங்கிலத்தை பேசுவதற்கான பல வீடியோ காட்சிகள் காணப்படுகின்றன. அவற்றின் உதவியுடன் இலகுவாக ஆங்கிலம் கற்கலாம்.

உச்ச பயனை அடைந்து கொள்வதற்கான 3R System

1. Reduce - பாவனைக் குறைப்பு - உதாரணம் - மின் கருவிகள், நீர் போன்றவற்றை வீன்விரயமின்றிப் பாவித்தல்.

2. Recycle - மீள்கழற்சி - உதாரணம் - ஒரு பக்கம் பாவித்த கடதாசிகளைப் பாவித்தல், வீட்டுக் கழிவுப் பொருட்களை உரமாகப் பயன்படுத்தல்.

3. Re-use - மீள்பாவனை - உதாரணம் - கடதாசி, கண்ணாடி, பிளாஸ்டிக் போன்றவற்றை மீள்பாவனைக்காக எடுத்துக் கொள்ளல்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தைவிட மக்கள் சக்திமிக்கவர்கள்

கலாநிதி காலித் ஹன்தாவி

சிரியாவின் கள நிலவரம், புரட்சியாளர்கள் சுதந்திரத்தை நிலைநாட்ட கையாளும் வழிமுறைகள், சிரியாவின் அரசியல் பொருளாதார எதிர்காலம், சிரிய புரட்சிக்கு உதவுவதில் முஸ்லிம் உம்மாவின் மீதான கடமைகள் என்பவை குறித்து சிரிய அறிஞர்கள் ஒன்றியத்தின் நிருவாக சபை அங்கத்தவரும், முஸ்லிம் அறிஞர்களுக்கான சர்வதேச ஒன்றியத்தின் ஸ்தாபக உறுப்பினருமான கலாநிதி காலித் ஹன்தாவி அவர்களுடன் இற்றவான் ஒன்லைன் மேற்கொண்ட நேர்காணலின் சில பகுதிகளை மீள்பார்வை வாசகர்களுக்காக மொழிமாற்றம் செய்து தருகிறோம்.

தமிழில் - முஹம்மத் பாஸிர்

முதலில் சிரியாவின் தற்போதைய நிகழ்வுகள் குறித்து தெளிவுபடுத்த முடியுமா?

சொந்த மக்களுக்கு எதிரான பெரும் அநியாயங்களே தற்போது சிரியாவில் நடக்கின்றன. சிரிய மக்களுக்கு எதிராக மிருகத்தனமாக தாக்குதல் தொடுத்திருக்கும் அஸத் குடும்பம் சிரியா தமக்குரிய சொத்து என்ற நினைப்பில் ஒன்றில் உங்களை ஆளுவோம் இல்லாவிட்டால் கொல்லுவோம் என்றே நடந்து கொள்கிறது.

இன்றுவரைக்கும் சுமார் பத்தாயிரம் சிரிய பொது மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். சுமார் ஆறாயிரத்துக்கு குறையாத தொகையினருக்கு என்ன நடந்தது எனத் தெரியவில்லை. கைது செய்யப்பட்டவர்களில் 300க்கு அதிகமானோர் கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர். இவற்றோடு ஆயிரக்கணக்கானோர் இருப்பிடங்களைவிட்டு இடம்பெயர்ந்துள்ளனர். பொது மக்களின் வசிப்பிடங்கள் அழிக்கப்பட்டு விளைச்சல் நிலங்கள் எரிக்கப்பட்டிருக்கின்றன. நீர் விநியோகம், மின்சாரம், தொலைத்தொடர்பு என்பவை புரட்சியாளர்களைவிட்டும் முற்றாக துண்டிக்கப்பட்டிருப்பதுடன் வைத்தியசாலைகள்கூட மூடப்பட்டிருக்கின்றன. தாய்மடியிலே குழந்தைகள் இறந்து போகும் பெரும் அவலம் அங்கு நடக்கின்றது.

சிரிய புரட்சியின் அடுத்த கட்டம் எதுவாக இருக்கும்?

அடக்கு முறையும் கொலையும் பன்மடங்காகினாலும் புரட்சி நிறுத்தப்படாது என்பதையே களநிலவரங்கள் உறுதிப்படுத்துகின்றன. பெரும் உயிர்த்தியாகங்களைச் செய்தபின் பூச்சியத்திற்கு திரும்புவதில்லை என மக்கள் தீர்மானித்துள்ளனர். புரட்சியை நிறுத்துவது வீரத் தியாகிகளுக்கு செய்யும் பெரும் துரோகம். அது அநியாயக்காரர்கள் தொடர்ந்து அட்டூழியம் புரிய தைரியத்தைக் கொடுக்கும்.

சிரிய பொருளாதாரம் அதல பாதாளத்திற்குள் வீழ்ந்து கொண்டிருக்கிறது. இம்மாத இறுதிவரை 27 பில்லியன் டொலர் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதிகாரவர்க்கம் ஒதுக்கீட்டுப் பணத்திலிருந்து அவற்றை ஈடுசெய்யலாம். ஆனால் எத்தனை காலத்திற்குத்தான் அப்படி ஈடுசெய்ய முடியும். பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. மக்கள் பெரும் விரக்தியில் இருக்கிறார்கள்.

கள நிகழ்வுகள் அஸதின் காலம் முடிந்து விட்டது என்பதையே உறுதிப்படுத்துகின்றன. தற்போதைக்கு அஸதிற்குப் பின்னரான காலப் பிரிவு குறித்து அவதானங்களைக் குவிப்பதே மிகச் சிறந்தது. அவசரமாக அஸத் வீழ்ந்து போக வேண்டும் எனப் பிரார்த்திக்கிறோம். அஸதுக்கு நெருக்கமான இராணுவப் பிரிவுகளில் கூட பிளவுகள் அதிகரித்து வருவதை காணக்கூடியதாக இருக்கிறது. அறபுலகினதும் சர்வதேசத்தினதும் அழுத்தம் அதிகரிக்குமானால் பெரும் எண்ணிக்கையில் இராணுவத்தில் பிளவுகள் ஏற்படலாம்.

ஏனைய புரட்சிகளுடன் ஒப்பிடும்போது சிரிய புரட்சி இவ்வளவு காலம் நீடிப்பதற்கு என்ன காரணம் என நினைக்கிறீர்கள்?

எகிப்திலே இராணுவம் மக்கள் பக்கம் நின்றது. மக்களைத் தாக்குவதை மறுத்தது. தூனிஸியாவிலும் அப்படித்தான். சிரியாவைப் பொறுத்தமட்டில் நிலைமை வித்தியாசமானது. இராணுவத் தலைமைகளும் உயர் மட்டத்தினரும் பஷர் அஸதிற்கு ஆதரவான அலவிக்கள் (ஷியாக்களின் ஒரு பிரிவினர்). படையினரில் 90 வீதமானோர் அஹ்லுஸ் ஸுன்னாக்கள். இராணுவத்திலிருந்து பிரிந்து வருபவர்கள் பின்னால் இருந்து தாக்கப்படுகிறார்கள். அரச தரப்பினரால் மலர்கள் வைக்கப்பட்டு சுமந்து வரப்படும் பெரும்பாலான ஜனாஸாக்களை அவர்கள்தான் கொன்றிருக்கிறார்கள். ஜனாஸாக்களின் தலையின் பின் புறத்திலும், முதுகிலும் பாய்ந்திருக்கும் துப்பாக்கிக் குண்டுகள் இதற்கு சாட்சி. நாம் தற்போது இராணுவத்தில் ஏற்படும் பிளவுகளையும் பொருளாதார நிலையையும் அவதானித்து வருகிறோம். சிரிய அரசு வீழ்ந்துவிடும் என்பது உறுதி. பலவருடங்கள் எடுத்தாலும் மக்கள் போராட்டத்தைத் தொடர்வதில் பிடிவாதமாக இருக்கின்றனர். மக்களுக்கு எதிராக அமெரிக்காவோ, சியோனிஸமோ நின்றாலும்கூட. புகழ்பெற்ற கவிஞர் ஸாதிக் ராபிஈ சொன்ன வரிகள் நினைவுக்கு வருகின்றன. ''சத்தியம் பலப் பிரயோகத்தை விட சக்தி வாய்ந்தது. அரசாங்கத்தைவிட மக்கள் சக்தி மிக்கவர்கள். போராட்டத்தின் முடிவில் தாக்கப்பட்டோருக்குத்தான் வெற்றி, தாக்கியவர்களுக்கல்ல'' இறைவன் அநியாயம் இழைக்கப்பட்டவர்களுடனே இருக்கிறான். அவன் நினைவாப் புறத்திலிருந்து வெற்றிவாயலைத் திறப்பான்.

தற்போதைய சிரிய ஆளும் வர்க்கத்தை தொடர்ந்தும் ஆட்சியில் நிலைத்திருக்கச் செய்ய சட்டபூர்வமான அதிகாரம் அளிக்கும் ஆவணங்கள் எதுவும் உள்ளதா?

அப்படியான ஆவணங்கள் எதுவும் அவர்களிடத்தில் கிடையாது. மாறாக சுயநலமிகளும், தயவஞ்சகர்களும் ஆளும் வர்க்கத்திற்கு வக்காலத்து வாங்கும் உலமாக்கள் சிலருமே அவர்களிடம் உள்ளனர். அதேவேளை ஈரான் இராணுவ ரீதியாக அஸதுக்கு உதவுகிறது. ஹிஸ்புல்லா அஸதினதும் ஷியாக்களின் நுஷைரியா பிரிவினரதும் தோழனாக இருந்து வருகிறது.

அஸதை மாற்றாத இறைநியதி பயங்கரமானது. அச்சத்துடனே அஸத் அட்டூழியத்தில் இறங்கியிருக்கிறார். ஆட்சி வீழ்ந்தால் தாம் கொல்லப்படலாம் அல்லது நீதியின் முன் நிறுத்தப்படலாம் என அஸத் பயப்படுகிறார். அஸத் வாழ்வா சாவா என்ற நிலையில் தான் இருக்கிறார். நாம் இறைவனிடத்தில் பெரும் எதிர்பார்ப்பு வைத்திருக்கிறோம். இந்த இடத்தில் இமாம் தர்துஸி தனது ''சிராஜுல் முலூக்'' என்ற நூலில் எழுதிய வரிகளை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். ''அநியாயக்கார ஆட்சியின் ஆயுள் நீண்டிருந்தாலும் அதன் காலப் பிரிவு குறுகியது. அது எவ்வளவு ஆயுத பலத்தைக் கொண்டிருந்தாலும் அதன் முடிவு சொற்ப காலம்தான்'' ஏனெனில் அது அநியாயத்தின் மீதெழுந்திருக்கிறது.

இவ்வேளையில் அறபு இஸ்லாமிய மக்களிடம் எதிர்பார்க்கப்படுவது என்ன?

அவர்கள் சிரிய மக்களுக்கு உதவுவதே எதிர்பார்க்கப்படுகிறது. அல்லாஹுதஆலா ''அவர்கள் மார்க்க விடயத்தில் உங்களிடம் உதவி கோரினால் அவர்களுக்கு உதவி செய்வது உங்கள் மீது கடமையாகும்'' (அல்-அன்பால் - 72) என்கிறான். ஒவ்வொருவரும் வார்த்தைகளால், செல்வத்தால், எழுத்துக்களால் எல்லாப் பிரதேசங்களிலும், எல்லா நாடுகளிலும் சிரிய மக்களுக்கு சார்பான அரசியல் நிலைப்பாடுகளை எடுப்பதன் மூலம் அவர்களுக்கு கட்டாயம் உதவவேண்டும். இவ்வகையில் எகிப்து மக்கள் பெரும் முன்னெடுப்பு ஒன்றை செய்திருக்கிறார்கள். எகிப்தின் நிலைமை சீரடைந்து விட்டால் அது மிகப் பெரியளவில் தாக்கம் செலுத்தும்.

தற்போதைய நிலையில் இஸ்லாமிய இயக்கங்கள் மீதுள்ள பொறுப்புக்கள் என்ன?

இது உணர்வு பூர்வமான கேள்வி. சிரிய அறிஞர்களுக்கான சந்திப்பை இயக்கிவிக்குமாறு அழைத்திருக்கிறோம். சிரியாவின் உள்ளே உள்ள நிலைமைகளை நாம் அறிந்திருக்கிறோம். சிரியா எகிப்தைப் போன்றதே. ஸலபிகள், ஹலபிகள், ஸூபிகள், தப்லீக்கைச் சேர்ந்தவர்கள் என்று பலர் உள்ளனர். இவ்வளைத்துப் பிரிவினரையும் ஒன்றிணைத்து இஸ்தான்பூலில் சந்திப்பொன்றை ஏற்படுத்தினோம். அனைவரும் முரண்பாடுகளை மறந்து சிரியாவுக்காக ஒன்றிணைவதாக முடிவெடுத்திருக்கின்றனர்.

சிரிய தேசிய சபை குறித்த உங்களது மதிப்பீடு என்ன?

தேசிய சபையின் உருவாக்கம் வெற்றியை முன்னெடுப்பதற்கான ஒரு பொறிமுறையாகவே இருந்தது. எதிர்க்கட்சியில் முரண் சிந்தனை கொண்ட மனிதர்கள்தான் இருந்தனர். கடந்த நான்கு தசாப்த காலமாக அவர்களுக்கிடையில் அறிமுகம் இருக்கவில்லை... ஒருவர் மதச்சார்பற்றவர், மற்றவர் இஸ்லாமியவாதி, அடுத்தவர் இன்னொரு தரப்பைச் சேர்ந்த இஸ்லாமியவாதி, அடுத்தவர்கள் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள்... இவர்கள் செய்மதி தொலைக்காட்சிகளில் மாத்திரம் பேசிக்கொண்டனர். பின்னர் சந்தித்து கலந் துரையாடிய போது சில எட்டுக்களை எடுத்து வைக்க முடிந்தது. பிறகு 80 குழுவினரை ஒன்று சேர்க்க இஸ்லாமிய இயக்கத்திற்கு முடிந்தது. அதன் பிறகே இந்த தேசிய சபை அமைக்கப்பட்டிருக்கிறது.

தேசியசபை ஆளும் வர்க்கத்தினரை அவசரமாக வீழ்த்தும் அரசியல் பொறிமுறையை சாத்தியப்படுத்தும் என்பதில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கின்றதா?

உண்மையிலே சர்வதேச அங்கீகாரத்தைக் கோருவதன் பின்னணியில் நாம் அதனையே எதிர்பார்க்கிறோம். ஆளும் வர்க்கத்தினர் ஐ.நா.வின் நிறுவனங்களில் வெறுப்படைந்துள்ளனர். அதிகாரிக்கும் சர்வதேச அழுத்தமும், இறைவனின் உதவியும் ஆளும் வர்க்கம் தூக்கி வீசப்படுவதை விரைவாக்கும்.

புரட்சியாளர்களுக்கு நாம் சொல்வது. அனைவரும் இறைவனின் ஒற்றுமை எனும் கயிற்றை இறுகப் பிடித்துக் கொள்ளுங்கள். நாம் சோர்வடைய வேண்டியதில்லை. பிரான்சியப் புரட்சி 10 வருடங்கள் தொடர்ந்தது. அக்கால இடைவெளியில் 17,000 உயிர்களை அது தியாகம் செய்தது. அதைவிட அதிகமாக பொறுமையாக இருக்க நாங்கள் பொருத்தமானவர்கள். அட்டூழியம் புரியம் ஆளும் வர்க்கத்திற்கு முன்னால் மலையுறுதியுடன் நிற்கும் பொறுமைசாலிகளுக்கு நாம் உதவுவது எமது கடமையாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒற்றை இலையில்

✱ அமீர் அப்பாஸ் ✱



ஒழுங்கற்ற மனிதர்களுக்கு
வரிசையைக் கற்றுக் கொடுக்கும்
எறும்புகள்
மறைந்து வாழும் இடத்தை
மனிதர்கள் அறிவதேயில்லை..!
மழைக்காலத்தின் வருகையை
சின்னஞ்சிறிய எறும்புகள்
அரிசியைக் கடத்திச் செல்லும்
பேரழகில் அறிவிக்கின்றன..!

பூமி எல்லோருக்குமான
பொதுவுடமை என்பதை
அறியாத மனிதர்கள்
எறும்புகளை திருடர்களைப்போல
இழிவாக நினைக்கிறார்கள்..!

விருந்தினரை உபசரிக்க
தேடும் வேளையில்..
சர்க்கரை ஜாடிக்குள்
அழையா விருந்தாளியாக
அமர்ந்திருக்கின்றன..!

எறும்பின் கண்களில்
உலகைப் பார்த்தால்
உலகம் இனிப்பாகிறது..!
எறும்பைப் போல வாழாத மனிதன்
வாழ்க்கைக் கசப்பாகிறது..!

சோம்பலை அறியாத எறும்புகள்
கட்டி வைத்த புற்று வீடுகளில்
கால் வைக்கும்போது
சுயமரியாதைக்கான யுத்தத்தை
பிரகடனப்படுத்துகின்றன..!

தன் தலைமீது விழுந்த
ஒற்றை மழைத்துளி
நதியாய் மாறுகிறது..!
நதியில் விழுந்து நகர்ந்தபோதும்
ஒற்றை இலையில்..
கரை வந்து சேர்கிறது..!

போலி மனிதர்கள்

✱ ஜெனீரா ஹைருல் அமான்
கிண்ணியா ✱

ஒரு பொழுதில் உளக்கான
உண்மைகள்
உறங்கிபோது
உச்சாடனம் செய்த - என்
உதடுகளை
ஊனமாக்கியது உன்
செயற்பாடுகள்

போலி வேடந்தாங்கலாய்
வலம் வரும்
உனைப் போன்ற புரிதலில்லாத
ஏதிலிக்காக
வக்காலத்து வாங்கியமைக்காக
வெட்கித்துகொள்கிறது மனசு.

கறைபடிந்த
கற்பனைக்குள்
கட்டுண்டு
கபட நாடகமாடும்
கீழ்த்தரமான
எண்ணப் படிவுகள்
உனக்குள்.

மேலொட்டித் தாவரமாய்
எனக்குள்
உயிர்ப்பித்து
எனையே
வதைவெய்யும்
உனைப் போல
சந்தர்ப்பவாதிகளை
சதாகாலமும் நம்பத்தகாது.

ஓயாத அலையின் கோபம்

✱ சுதந்திரன் கவிதை ✱

பற்றை காடுகளால் மூடிக்கிடக்கிறது
உன் மனசு
ஒரு மாலைக் கருங்களில்
நான் வந்து விழுந்தேன்
உனது விழிகள் கனைத்தன
எனது கவிதைகளும் கனைத்தன
கனவின் இரவொன்றில்
பிசாசுகள் உடம்புக்குள் வந்து விழுவதாய்
திசைகள் எங்கும்
உம்மம்மாவின் ஓயில் சாரித் தலைப்பை பிடித்தவாறு
நீ வந்து நின்றாய்
உன் கறுப்புக் குணங்களே
சாலையில் உரசி
அதில் என்னைக் கிடத்த நீ முயன்று
உன் பிடி உடும்பின் பலம்
இப்படியாக மேலாண்மை
அதிகரித்து கர்வத்தின் முகவரியை
இப்போது தெருவெங்கும் பூசினாய்
ஆயிரம் கனவுகள் மேய்ந்து வந்தவர்கள்
எதுவும் பேசா பொம்மை நீயென
மண்டைகுடைந்து
நீ தலைவனென்பது மாயை
போலி ஆசனம் உனக்குத் தேவையில்லையென்பதை
விழிகள் கரிக்கப் பழகிய ஒரு மாலையில்
எல்லோருமாக ஆலோசித்து
மனிதம் என்ற காலம் மயானத்தின் காற்றில்
ஒதுங்குவதாய் இறுதி முடிவுக்கு வந்தார்கள்
இனி மேடைகளில் நீ நடிகனாகவும் தேவையில்லை
பேயாட்டம் போடவும் தேவையில்லை.
இன்னமும் உனக்குள் ஆசை ஆசைகளிலிருக்கின்றதா
உன் இதயம் பிடுங்கி
தீயிட்டுக் கொழுத்திக் கொள்
உலரும் எப்போதும் போல இக்காநாம்
சிலருக்கு சூடு சொரணை வராது
உனக்கு எப்படி?

இன்ஷாஅல்லாஹ் அடுத்த இதழில்
முஹம்மத் ராபி
எழுதிய முயல்களும் மோப்ப நாய்களும் எனும்
சிறுகதையை எதிர்பாருங்கள்!

பிரிவிற்கான ஆயத்தம்

மனுஷ்ய புத்திரன்

பிரிவிற்கான ஆயத்தங்களில்
நமக்குப் பதட்டங்களோ
குழப்பங்களோ இல்லை
அன்பைப் போன்றதுதான் அது
பரஸ்பரம் இணங்கச் செய்யும்
ஒரு எளிய திட்டம்

நீ எனக்கு
எப்போதும் தரும்
அதே தேநீரைத்தான் தருகிறாய்
அதில் ஏதோ ஒன்று கூடியிருக்கிறது
அல்லது குறைந்திருக்கிறது
நான் அந்தத் தேநீரை மறுப்பதில்லை
ஒரு தேநீர் எந்த கணத்தில்
தன் சுவையை இழக்கிறது என்பது
நம் இருவருக்குமே தெரியும்

நம்முடைய டைரிகளில்
ஒரே நேரத்தில்
வேறு வேறு நிகழ்ச்சிகள் குறிக்கப்பட்டிருக்கின்றன
நம்மால் எதையும் திருத்த முடியாது
எந்த நிகழ்ச்சியையும் மாற்றியமைக்க முடியாது
நாம் இதைப் பற்றி ஒரு தெளிவான மொழியில்
உரையாடவே விரும்புகிறோம்
நமது உணர்ச்சிகள்
நமது தொண்டையிலேயே தேங்கிவிடும்வரை
கொஞ்சம் மௌனமாக இருக்கிறோம்

பிரிவிற்கான ஆயத்தம் என்பது
ஒரு வழியை அடைப்பதல்ல
நாம் அப்படி அதைக் குறுக்கிவிடக் கூடாது
அங்கே ஒரு அறிவிப்பு பலகை வைக்கப்பட்டிருக்கிறது
மாற்றுப் பாதையில் செல்லும்படி
அது நம்மை அறிவுறுத்துகிறது
நாம் எப்போதும் அதை யோசிப்பதே இல்லை
பக்கத்தில் வந்ததும்தான் அதைப் படிக்கிறோம்
உண்மையிலேயே அங்கே ஒரு மாற்றுப் பாதை
இருக்கிறதா என்றுகூட நமக்குத் தெரியாது
நாம் அதை முயற்சிப்பதைத் தவிர
வேறு எந்தத் தேர்வும் இல்லை
நாம் எதையும் துண்டிப்பதில்லை
இடம் மாற்றி வைக்க விரும்புகிறோம்
நம் எதையும் மறுக்கவில்லை
ஒரு விருப்பத்திற்குப் பதில்
இன்னொரு விருப்பத்தைக் கொண்டு வருகிறோம்
ஒரு மரத்தை நோக்கி
ஒரு பறவையைப்போலத்தானே வந்தோம்
ஆனால் ஏன் நாம் அதன் கிளைகளாகவோ
வேர்களாகவோ மாற்றப்பட வேண்டும்?
ஒரு வசந்தம் ஒரு மரத்தை விட்டுச் செல்வதைப் போல
ஒரு கோடை ஒரு மரத்தை விட்டுச் செல்வதுபோல
ஒரு மழைக் காலம் ஒரு மரத்தை விட்டுச் செல்வது
போல
ஏன் இதுவும் நிகழக் கூடாது

நாம் நினைக்கிறோம்
ஒரு பிரிவிற்கு ஆயத்தமாக
நமக்கு ஒரு கனத்த வெறுப்பு
தேவையாக இருக்கிறது என்று
நமக்கு அப்படித்தான்
திரும்பத் திரும்பக் கற்பிக்கப்பட்டிருக்கிறது
ஏன் நேசத்தால் ஒரு முறைகூட
அது நிகழ முடியாததா?
ஒருவரை ஒருவர் நிர்மூலமாக்காமல்
ஒருவருக்குக் கொடுத்த எல்லாவற்றையும்
திரும்ப எடுத்துக் கொள்ளாமல்
நாம் அவருக்கு விடை கொடுக்க முடியாதா?

நாம் ஒரு சிகரெட் பிடிப்பவராக இருந்தால்
சிகரெட் பிடிப்பதை ஒரு நாள் விட்டுவிட வேண்டும்
நாம் மதுவருந்துபவராக இருந்தால்
மதுவருந்துவதை ஒரு நாள் விட்டுவிட வேண்டும்
[illegible]
[illegible]

நாம் நீலப் படங்கள் பார்ப்பதில் ஆர்வமுள்ளவர்
எனில்
நீலப் படங்கள் பார்ப்பதை ஒரு நாள்
விட்டுவிடவேண்டும்
நாம் நகம் கடிப்பவர் எனில்
நகம் கடிக்கும் பழக்கத்தை ஒரு நாள்
விட்டுவிடவேண்டும்
அது நம் ஆரோக்கியத்திற்காகவே சொல்லப்படுகிறது
இன்னும் நிறைய ஆரோக்கியத்திற்கான தேவைகள்
இந்த உலகில் இருக்கின்றன

பிரிவிற்கு ஆயத்தமாகும்போது
உனக்கு நான் எதையாவது வாங்கித் தர
விரும்புகிறேன்

அன்பிற்கான பரிசுகள்தான்
எல்லா இடத்திலும் விற்பனைக்கு
வைக்கப்பட்டிருக்கின்றன
பிரிவிற்கான பரிசு யாருக்குமே
தேவைப்படவில்லையா?
இந்த உலகில் ஒரு நாளைக்கு
எத்தனை பிரிவுகள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன
அன்பின் சின்னங்களைப் போல
பிரிவின் சின்னங்களும் முக்கியம்தான் இல்லையா
ஆனால்
அதை யாரும் உருவாக்க விரும்புவதில்லை
அதற்கு ஒரு வடிவம்தர யாருக்குமே துணிச்சலில்லை

அன்பை
நீ [illegible]
கனட்சியில் நாம்
இந்த அன்பின் சின்னங்களைத்தான்
பிரிவின் சின்னங்களாகவும் மாற்றப் போகிறோமா

நன்றி: உயிர்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடாபி இலங்கையில்... (08ம் பக்கத் தொடர்)

கடாபி எவ்வாறு காரணமாக இருந்தார் என்பதை அழகுற விளக்கினார். கடாபி இதேபோன்று நவீன துருக்கியின் முதலாவது இஸ்லாமிய பிரதமரான நஜ்முதீன் அர்பகானை இழிவுபடுத்தும் வகையில் நடந்துகொண்டதையும் சுட்டிக்காட்டினார். கடாபி இஸ்லாத்தின் எதிரிகளின் திட்டங்களுக்கு இரகசியமாக உதவுகிறார் என்பதே அவரது பிரதான வாதமாக இருந்தது. இதில் உண்மை இல்லாமல் இல்லை. இது தொடர்பான ஆதாரங்களை விரிவஞ்சி விட்டு விடுவோம்.

அவ்வாறாயின், கடாபியின் மரணத்தை நம்மில் பலர் ஏன் ஒரு தலைப்பட்சமாகப் பார்க்கின்றனர்? கடாபி மிகுந்த சுயநலம் கொண்டவர். 9/11க்குப் பிந்திய உலக ஒழுங்கமைப்பின் உள் அரசியலைப் புரிந்துகொண்ட கடாபி, பகிரங்கமாக மேற்கு நாடுகளுடன் சமரசம் செய்துகொண்டார். இதனை நம்மில் யார் மறுக்க முடியும்?

தன் வாழ்நாளின் கடைசி நாட்களில் மீண்டும் மேற்குலக எதிர்ப்பாளராக அவர் காட்டி நிர்ப்பந்திக்கப்பட்டார். தனது சொந்த நாட்டு மக்களே தனக்கெதிராகக் கிளர்ந்தெழுந்த அந்த சூழலில், அதை விட அவருக்கு வேறு தெரிவிருக்கவில்லை. அதற்கு முந்திய வருடங்களில் அவர் எடுத்திருந்த மேற்கோடு இணங்கிப் போகும் நிலைப்பாட்டிற்கு இந்த சூழலில் சிறு வாய்ப்புக் கிடைத்திருந்தாலும் அவர் அதனைத் தான் தேர்ந்தெடுத்திருக்கக் கூடும். ஏற்றில் அவர் விரும்பியோ விரும்பாமலோ சூழ்நிலையின் கைதியாக மாறிவிட்டார்.

கடாபி தன்னை ஒரு புரட்சிகர தலைவராகவே எப்போதும் எண்ணிக் கொண்டார். ஆடம்பரத்திலும் தனது புகழ் பாடுவதிலும் சொகுசு வாழ்க்கையிலும் அவருக்கு அலாதிப் பிரியம் இருந்தது. அடிக்கடி ஆடை மாற்றி அலங்காரம் செய்வது அவரது பொழுது போக்கு.

லிபிய மக்கள் வறுமையில் வாடியபோது, தனது விளம்பரத்திற்காக வெளிநாட்டு மக்களுக்கு கோடி கோடியாக வாரி இறைத்தார். லிபியர்கள் தன்னை நேசிப்பதாக அவர் கடைசிவரை எண்ணிக் கொண்டிருந்தார். அதனால்தான் நாட்டை விட்டுத் தப்பிச் செல்லவில்லை. ஆனால், அவருக்கு எதிராக யாரும் எதையும் கூறிவிட முடியாத கடும் அடக்குமுறையையே அவர் மக்கள் மீது திணித்திருந்தார். அதனால்தான் சுதந்திரம் வேண்டி மக்கள் அவரை நிராகரித்தனர்.

கடாபியின் மரணம் நிகழ்ந்த விதம் யாருக்கும் ஏற்புடையதல்ல. ஆனாலும், சர்வாதிகார ஆட்சியாளர்கள் மக்களால் எப்படி நிராகரிக்கப்படுவார்கள் என்பதற்கான ஒரு பாடமாகவே அதை நாம் எடுத்துக் கொள்வோம். கடாபியைப் பற்றிய தீர்ப்பை அல்லாஹ்தான் நன்கு அறிவான். ஆனாலும், கடாபி வெளிப்படையாக இஸ்லாத்திற்கு எதிரான பல நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தார். இதனை எந்தவகையிலும் நியாயப்படுத்திவிட முடியாது. (இதனை விரிவாகப் பார்ப்பதற்கு சமீபத்தில் வெளிவந்துள்ள பிரபாரவை ஊடாக மைய வெளியிடான 'சர்வதேசப் பார்வை' இதழ் 16இல் காணப்படும் 'இஸ்லாத்திற்கு எதிரான கடாபியின் குற்றச்சாட்டுகள்' என்ற கட்டுரையைப் பார்க்கவும்.)

இந்த விடயங்களைப் புரிந்து கொள்ளாமல் மேலோட்டமாக கடாபியின் ஒற்றைப் பரிமாணத்தை மட்டுமே பார்ப்பதற்கு நம்மில் பலர் விரும்புகின்றனர். ஒருவரது மரணம் குரூரமாக நிகழ்ந்தது என்பதற்காக, வாழ்நாளில் அவர் இழைத்த வரலாற்றுத் தவறுகளை நியாயப்படுத்தி விட முடியாது. இந்த எல்லா அம்சங்களையும் மனதில் கொண்டு கடாபியை எடைபோடுவதுதான் சரியான நிலைப்பாடாக இருக்கும்.

எமது வரலாற்று... (14ம் பக்கத் தொடர்)

எவ்வளவு விரைவாக இது மேற் கொள்ளப்பட வேண்டுமோ அந்தளவுக்கு அது பிரயோசனமிக்கதாகவே இருக்கும்.

ஒரு சில முஸ்லிம் பிரதேசங்களில் இத்தகைய பணி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனினும் அவை பூரணப்படுத்தப்பட்ட ஒன்றாக இல்லை என்பதை குறிப்பிட்டாக வேண்டும். அவை பூரணப்படுத்தப்பட வேண்டியது காலத்தின் தேவையாக உள்ள ஆதே வேளை, ஏனைய ஊர்களும் தமது பிரதேச வரலாற்றை எழுதும் பணியை இதன் பின்னரேனும் ஆரம்பிக்க வேண்டும்.

எழுதப்படும் வரலாற்று நூல் அவசியம் தேசிய மொழியான சிங்களத்திலும் வெளியிடப்படல் வேண்டும். ஏனெனில், எமது சுயம் பற்றி நமக்குள் மட்டும் பேசிக் கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை. அடுத்தவர்களுக்கும் எமது வரலாறு, பூர்வீகம் பற்றித் தெரியப்படுத்த வேண்டும். எனவே அவசியம் சிங்கள மொழியில் பெயர்க்கப்படுதல் வேண்டும். அவ்வாறே ஆங்கில மொழியிலும் பெயர்க்கப்படுதல் பயன்மிக்கது.

இதுவிடயத்தில் முஸ்லிம் பிரதேசங்களில் வாழும் புத்திஜீவிகள், மாணவர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் என்போர் அக்கறை கொள்ள வேண்டும். எமது வரலாறு அவசியம் பதியப்பட வேண்டிய ஒரு வரலாற்றுக் கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை நினைவிற் கொள்வோம்.

எகிப்திய பிரஜை... (06ம் பக்கத் தொடர்)

எகிப்திய புரட்சி ஒரு தீர்மானகரமான கட்டத்தில் உள்ளது. அங்கு மதச்சார்பற்ற சக்திகளும் லிபரல்வாதிகளும் உள்ளனர். இவர்களை முறியடிக்கும் வகையில் இஸ்லாமியவாதிகள் பணிபுரிய வேண்டிய தேவையுள்ளது. அங்கு நன்கு பழுத்த அனுபவமுள்ள இஸ்லாமியவாதிகள் ஒருபக்கமாகவும், பெரியளவு அனுபவம் இல்லாத இஸ்லாமியவாதிகள் சிலர் இன்னொரு பக்கமாகவும் இரண்டாக பிரிந்து தேர்தலை எதிர்கொள்கின்றனர்.

நான் பழுத்த அனுபவமுள்ள இஸ்லாமியவாதிகள் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளேன். அவர்கள் எகிப்திற்கு வழிகாட்டும் ஆற்றலைக் கொண்டவர்கள் எனவும் குறிப்பிட்டார்.

இலாபத்தில் மாத்திரம்... (13ம் பக்கத் தொடர்ச்சி)

உதாரணமாக ரமழான் அல்லது துல்ஹஜ் மாதத்தைக் கருத்திற் கொண்டு அனைத்துக்குமான ஸகாத்தை நிறைவேற்றுவது போல இதற்கும் ஸகாத்தை நிறைவேற்ற முடியும். இதுவே பொறுப்பிலிருந்து நீங்குவதற்கான சிறந்த வழிமுறையாகும். தாராளத்தன்மையுடைய, ஏழைகளின் நலனை கருத்திற் கொண்டு செயற்படக்கூடிய ஒரு வருக்கு இதுவே இலகுவானதாகும்.

06. ஒரு மனிதன் நிலையான சொத்தொன்றை குறிப்பிட்ட ஒரு நிறுவனத்துக்கோ அல்லது வேறொருவருக்கோ வக்பு செய்து அதிலிருந்து பெறும் இலாபம் குறிப்பிட்ட அளவை அடைந்திருந்தால் அதற்கு ஸகாத் வழங்க வேண்டும். ஆனால் நலன்புரி நிறுவனங்களுக்கோ அல்லது ஏழைகளுக்கோ வக்பு செய்திருந்தால் அதற்கு ஸகாத் கடமையாகாது. ஏனெனில் அது எவரும் உரிமை கொண்டாட முடியாத இறைவனின் பாதையில் கொடையாக வழங்கப்பட்ட சொத்தாகும்.

07. ஒரு மனிதன் தன்னுடைய வாடகைப் பணத்தில் விடுதி கட்டுவதாலோ அல்லது செலவு செய்வதாலோ அல்லது திருமணம் செய்வதாலோ அல்லது கடனை நிறைவேற்றுவதாலோ அல்லது ஏனைய தேவைகளை நிறைவேற்றுவதாலோ அவ்வாடகைத் தொகைக்கு ஸகாத்தை நிறைவேற்றுவதிலிருந்து நீங்கிவிட முடியாது. ஏனெனில் அது அவனுடைய ஆதிக்கத்திலுள்ள ஸகாத் சார்ந்த பொருளாகவே கருதப்படும். எனினும் வருடம் பூர்த்தியாவதற்கு முன்னர் அவை செலவு செய்யப்பட்டால் அதற்கு ஸகாத் கடமையில்லை. ஏனெனில் அது ஸகாத் கடமையாவதற்கு முன் செலவு செய்யப்பட்டதாகும்.

08. ஒரு மனிதன் நிலையான சொத்தின் வாடகைப் பணத்திலிருந்து தனது சொத்துக்குரிய ஸகாத்தை கொடுக்க நாடினால் அது அவருடைய நிலையான சொத்தின் வாடகைக்குரிய ஸகாத்தை தடுத்துவிடாது. மாறாக அவர் ஏனைய சொத்துகளுக்காக ஸகாத்தை அதன் மூலம் வழங்கியிருந்தாலும், அதற்கு ஒரு வருடம் பூர்த்தியானால் ஸகாத் கடமையாகிவிடும்.

மூலம்: ஸகாத்துல் இகார்
தமிழில்: எம்.ஏ. அஸ்ஹர்

இலங்கை முஸ்லிம்களின்... (08ம் பக்கத் தொடர்)

தமிழிலக்கிய வரலாற்று வழியில், பல்லவர் காலத்து அரசர்கள் சிலை வடிப்பதிலேயே சிந்தை இழந்தனர். இதனால் தமிழ்ப் புலவர்களைப் போஷிப்பார் -நேசிப்பார் இல்லாத ஒரு வெறுமை நிலை, ஒரு வித வறுமை நிலை நிலவியது. தமிழ் புலவர்களின் பங்களிப்பு இல்லாத இலக்காலப் பிரிவில்தான், தமிழ்ப் பேசும் முஸ்லிம் புலவர்கள் ஏடு நூக்கவும் -எழுதுகோல் ஏந்தவும் தலைப்பட்டனர். அன்று தொட்ட பேனாவை இன்றுவரை கீழே வைக்காமல், தமிழ் பேசும் முஸ்லிம் படைப்பாளிகள் இலங்கை, தமிழ்நாடு, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் இஸ்லாமியத் தமிழிலக்கியப் பணி புரிந்து வருவதைக் காணலாம்.

இந்தப் பணி தமிழ் மூலம் கிட்டியது போல், நம் இலங்கையில் முஸ்லிம்களுக்கு சிங்கள-ஆங்கில மொழிகள் மூலம் கிடைக்கவில்லை என்பதை மறுக்க முடியாது. தமிழ் பேசும் முஸ்லிம்கள் தமிழ் மொழி மூலம் வளர்த்து வந்த இலக்கிய பாரம்பரியத்தை கைவிடலாமா? இந்தளவு சேவையை முஸ்லிம்கள் சிங்களத்திலோ -ஆங்கிலத்திலோ செய்வதென்றால், எவ்வளவு காலம் பிடிக்கும்?

இப்படியான நிலையில் நாம் என்ன செய்யலாம்? முஸ்லிம்களின் அறிவுக் கண்களை அகலத் திறந்து விட்ட முன்னாள் கல்வியமைச்சர் மர்ஹூம் பதியுதீன் மஹ்மூத் ஆரம்பத்தில் "முஸ்லிம்கள் சிங்களத்தை போதனா மொழியாகக் கற்க வேண்டும்" எனக் கூறிவிட்டு, நம்மவர்கள் 80 வீத பெரும்பான்மையுடன் போட்டி போடுவதை விட, 12 சதவீத சிறுபான்மையினருடன் தமிழ்ப் பாரம்பரியப் பின்புலத்துடன் போட்டியிடுவதே ஏற்புடையது. கலாசார சீரழிவும் ஏற்படாது என்றுணர்ந்து, தன் கருத்தை மாற்றி, "முஸ்லிம்கள் தமிழைப் போதனா மொழியாக ஏற்பதே நலம்" எனக் கூறியதும் கவனிக்கத்தக்கது.

மேற்படி சிந்தனைகளை நம் சமூகத்து கல்விமான்களும் அறிஞர்களும் சமுதாயப் பெரியார்களும் கூட்டங்கள் போட்டு, ஆய்வு செய்து நல்ல முடிவுக்கு வந்து, சமுதாயம் இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்தில் மொழி வழியாகப் பிரிந்திடாதிருக்க ஆவன செய்ய வேண்டும். உறுப்படியாக ஏதும் செய்ய முன்வர வேண்டும். இது சமூக, சமயக் கடமையாகும் என்பதை மறவற்க.

தூனீசிய தேர்தலில்... (01ம் பக்கத் தொடர்)

அத்தோடு சமூக ஜனநாயகக் கட்சியான தொழில் மற்றும் சுதந்திரத்திற்கான ஜனநாயக முன்னணி அல்லது அத்தகாதுல் (The Democratic Forum for Labour and liberties) 9.68 வீத வாக்குகளைப் பெற்று 31 ஆசனங்களுடன் மூன்றாவது இடத்திற்கு வந்துள்ளது.

நான்காவது இடத்திற்கு வந்துள்ள மதச்சார்பின்மைப் போக்குள்ள அரீதா சாபியா அல்லது பிரசித்திப் பட்டியல் கட்சி (Popular List Party) தேர்தல் முடிவுகளால் அதிருப்தி அடைந்துள்ளது. இதன் ஆதரவாளர்கள் சிதிபூசித் நகரிலுள்ள அந்நஹ்மா அலுவலகத்தை நோக்கி ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை மேற்கொண்டு கற்களை வீசியுள்ளனர். அங்கிருந்த பொலிசாருடன் கைகலப்பில் ஈடுபட்டும் உள்ளனர். மக்கள் இவர்களைத் தோற்கடித்துள்ளதால் பெரும் ஏமாற்றத்திற்கு ஆளாகியுள்ளனர்.

அந்நஹ்மாவுடைய வெற்றி அறபு இஸ்லாமிய உலகில் இஸ்லாமியவாதிகளுக்குள்ள பெரும் மக்கள் ஆதரவை தெளிவாக சுட்டிக் காட்டுகிறது என அவதானிகள் தெரிவிக்கின்றனர். விரைவில் நடைபெறவுள்ள எகிப்தியத் தேர்தலில் இதன் தாக்கம் இருக்கும் என அவர்கள் மேலும் சுட்டிக் காட்டுகின்றனர்.

எகிப்திய தேர்தலிலும் இஸ்லாமியவாதிகளே முன்னணியில் உள்ளனர். தூனிசிய தேர்தல் முடிவுகளால் குழப்பமடைந்துள்ள மதச்சார்பற்ற சக்திகள், இஸ்லாமியவாதிகளின் வெற்றியைக் களவாடும் சதித்திட்டங்களை முன்னெடுக்கலாம் என்ற அச்சமும் நிலவுகிறது.

மீள்பார்வை

உள்நாட்டு - வெளிநாட்டு சந்தா விபரம்

மீள்பார்வை தனிப் பிரதி - ரூபா 30.00
ஆறு மாத சந்தா - ரூபா 450.00
ஒரு வருட சந்தா - ரூபா 900.00

இந்தியா
தனிப் பிரதி - ரூபா 75.00
ஒரு வருடம் - ரூபா 2000.00

மத்திய கிழக்கு நாடுகள், மலேசியா
தனிப் பிரதி - ரூபா 90.00
ஒரு வருடம் - ரூபா 2500.00

ஐரோப்பிய நாடுகள், ஜப்பான், தென்கொரியா
தனிப் பிரதி - ரூபா 120.00
ஒரு வருடம் - ரூபா 3000.00

காசுக் கட்டளை அனுப்ப விரும்புபவர்கள், காசுக்கட்டளை பெறுவோர்: Meelparvai Publishers எனவும், தபால் நிலையம்: Grandpass எனவும் குறிப்பிட்டு அனுப்புமாறு வேண்டுகிறோம். முகவரி: MMC, 2A, Hill Castle Place, Bundaranayake Mawatha, Colombo 12.

MMC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/101/NEWS/2011 - ISSN 2012-5038

குழம்பிக் கிடக்கும் நமது வாழ்வை ஒழுங்கமைப்பது எப்படி?

இதற்கான பதிலை, ஆலோசனைகளை, மேலதிக விளக்கங்களை உள்ளடக்கிய பயணம் - தர்பியா அமர்வுகளுக்கான இதழ்-31 வெளிவந்துவிட்டது.

விலை: 50.00

பிரதிக்கு முந்திக்கொள்ளுங்கள்

MMC

மலிவுப் பதிப்பு

விலை 50/-

மீள்பார்வை ஊடக மையத்தின் புதிய வெளியீடு

இமாம் ஹஸனுல் பன்னாவின் ஆழ்ந்த சிந்தனைகளை மக்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கிலேயே இது வெளியிடப்படுகிறது. இந்த வரிசையில் மேலும் பல நூல்களை இன்ஷா அல்லாஹ் வெளியிடத் திட்டமிட்டுள்ளோம். முதல் கட்டமாக, கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக்கு முன்னர் வெளிவந்த 'மறைநிழலில் மனிதன்' நூலின் பழைய பிரதியொன்றைத் தேடியெடுத்து மறுபிரசுரம் செய்கிறோம்.

இதன் எளிமையான மொழிபெயர்ப்புதான் இந்நூலைத் தேடியெடுத்தமைக்கு முக்கிய காரணம். இந்நூலை அண்மையில் வபாத்தான மௌலவி ஏ.ஆர்.எம். றூஹுல் ஹக் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். - **பதிப்புரையிலிருந்து...**

இஸ்லாமிய அறிஞர்களைக் கொண்ட குடும்பமொன்றில் பிறந்த இமாம் ஹஸனுல் பன்னா (1906-1949), இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய அரிதான ஆளுமைகளுள் ஒருவர். எகிப்தில் பிறந்த அவர், 1928இல் அல் இஹ்வானுல் முஸ்லிமூன் (முஸ்லிம் சகோதரத்துவ) இயக்கத்தை நிறுவினார். இவ்வியக்கத்தின் சிந்தனைத் தாக்கம் நாடுகளின் எல்லைகளைத் தாண்டி பரந்து விரிந்துள்ளது. இது அறபு-இஸ்லாமிய உலகெங்கும் பரவி பல நாடுகளில் கிளைகளைக் கொண்டுள்ளது.

இமாமவர்களின் சிந்தனைகள், எழுத்துகள், அர்ப்பணிப்பு நிறைந்த தொடர்ச்சியான உழைப்பு என்பவற்றின் விளைவுகளை சமகால உலகில் நிதர்சனமாகக் காண்கிறோம். அல்லாஹ் தனது மார்க்கத்தைப் புனர்நிர்மாணம் செய்து புத்துயிர் ஊட்டவென்றே இமாம் ஹஸனுல் பன்னா (றஹ்) அவர்களைத் தேர்ந்தெடுத்துள்ளான் என்பதை, அவரது ஒட்டுமொத்த வாழ்வையும் பணியையும் நுணுக்கமாக அவதானித்தால் புரிந்துகொள்ள முடியும். ஷஹீதாக மரணித்த அவரை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக! அவரது ஆழ்ந்த எழுத்தாளுமைக்கு இந்த நூல் சிறந்த சான்றாகும். - **பின் அட்டையிலிருந்து...**

இஸ்லாமிய இயக்கத்தில் உழைப்போருக்கும் பொதுமக்களுக்கும் இந்நூல் சிறந்த வழிகாட்டியாகும்.

32 பக்கங்கள்

இப்போது பரபரப்பான விற்பனையில்...

சமகால உலக நிகழ்வுகளை, இஸ்லாமிய உலக விவகாரங்களை பகுப்பாய்வுக் கண்ணோட்டத்துடன் தரும் சர்வதேசப் பார்வையின் 16ஆவது இதழ் பரபரப்பாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

விலை: 50.00

முந்திக்கொள்ளுங்கள்
சொற்ப பிரதிகளே கையிருப்பில்

WinSYS NETWORKS
The Information security training provider of the nation

No: 14, Schofield Place, Kollupitiya, Colombo-03, Sri Lanka.
Tel: 011-2589567/8,011-4340666,0777 259927
www.winsysnetworks.net / info@winsysnetworks.net

CCNA	640-802 (ICND1) v1.1 (ICND2) v1.1	Rs. 12,000/=
CCNP	642-902 (ROUTE) 642-813 (SWITCH) 642-832 (TSHOOT)	Rs. 15,000/= (PER MODULE)
CCIP	642-691 (BGP)(MPLS) 642-902 (ROUTE) 642-642 (QoS)	Rs. 150,000/=

Microsoft Certifications

MCP XP & Server | MCSA | MCTS 70-680 / 70-642 70-643 / 70-640 | MCITP Enterprise Administrator Server Administrator

Diploma In Hardware Engineering With Networking. | Special Diploma In Network Administration. | Linux leads to RHCE | PHP MySQL

REFER 5 STUDENTS FOR ANY TRAINING
GET YOUR TRAINING TOTALLY FREE

WEEKDAYS SPECIAL OFFER
ALL 3 TRAININGS ONLY 25000/=

Special Diploma In Advanced Networking (ANW)
Cisco Certified Network Associate (CCNA)
Microsoft Certified Technology Specialist (MCTS)
70-680 MCTS: Windows 7 Configuring

இலங்கையில் 160 க்கும் மேற்பட்ட Cisco Routers மற்றும் Switch களை உள்ளடக்கிய ஒரே Network பயிற்சி நிலையம். கடந்த 5வருடங்களில் 7500க்கும் மேற்பட்ட மாணவர்கள் நம்பி வந்த ஒரே இடம். 1000/1000 என்ற சாதனைகள் ஒன்றல்ல இரண்டல்ல பல மாணவர்களை உருவாக்கிய பெருமை WinSYS Network நிறுவனத்திற்கு உள்ளது. சாதனைகள் தொடரும்....

பயிற்சி மட்டும் அல்லாது அதனை இயல் வாழ்க்கையில் உபயோகிக்கும் முறையான இடங்களை சரியான முறையில் மாணவர்களுக்கு தெளிவு படுத்தும் ஒரே இடம். தலைநகர் கொழும்புக்கு வெளியே Cisco பயிற்சியை Puttalam (Twinwin ICT Professionals) / Kandy (E-win Networks) / Batticaloa (WinSYS NETWORKS) / Galle & Jaffna / Negambo என எடுத்து சென்ற ஒரே பயிற்சி நிலையம்.

ஆரம்பம் முதல் இன்று வரை இலங்கை அரசாங்கத்தால் நம்பத்தகுந்த நிறுவனம் என்பதால் அரச ஊழியர்களை பயிற்றுவிப்பதற்காக WinSYS நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அனுபவம் வாய்ந்த Network மற்றும் Security பயிற்சிகளை உங்களுக்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்களை உள்ளடக்கிய இலங்கையின் ஒரே தலை சிறந்த நிறுவனம்.

BRANCHES
Kandy E-win NETWORKS — No: 524, Peradeniya Road, Kandy. Tel:- 081-2203745/0777-047708/0777-807630
Puttalam. Twin-WIN ICT Professionals — No: 33,Masjid Road, Puttalam. Tel:- 032-2267477 / 0777-112771
Batticaloa WinSYS NETWORKS — No: 10, New kalmunai Road, Batticaloa. Tel:- 065-2228789-0777-832 871

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Published by Meelparvai Media Centre, 2A, Hill Castle Place, Bandaranayaka Mawatha, Colombo 12. Printed at A.J. Prints, Station Road, Dehiwala.